# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது

இல. 7,587 — 1927 ம் ௵ ஆனிமீ 10 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் விளம்பரம்.

---

1892ம் ஆண்டின் சிறுபட்டணச் சௌக்கியாதாரச் சட்டம்.

வடமேல் மாகாணம் சலாபம் டிஸ்திறிக்கின் சௌக்கியாதார சங்கத்தவரால் 1892 ம் ஆண்டின் சிறுபட்டணச் சௌக்கியாதாரச் சட்டத்தின் 9 E (2) ம் பிரிவின்படி உண்டாக்கப்பட்டு அதிகார மந்திரசபையோடு கூடிய உத்தம தேசாதிபதி யவர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஒழுக்கவிதிகள்.

உத்தம தேசாதிபதி அவர்களின் கட்டளைப்படி,

எப். ஜீ. திரெல்,
கலோனியல் சக்கிறுத்தாரின் வேலைபார்ப்பவர்.

கலோனியல் சக்கிறுத்தாரின் கந்தோர்,
கொழும்பு, 1927ம் ஆண்டு ஆனிமீ 8 ந் தேதி.

---

மேற்சுட்டிய ஒழுக்கவிதிகள்.

9 E (2) (a)ம் பிரிவு.

சங்கம்கூடும் நேரமும் இடமும் அக்கூட்டத்தில் கவனிக்கப்பட வேண்டிய முறையும்.

(1) சங்கத்தவர்களின் சாதாரண கூட்டங்கள் சங்கத்தவர்கள் காலத்துக்குக் காலம் நிர்ணயம்செய்து தீர்மானிக்கும் தினத்திலும், நேரத்திலும், இடத்திலும் நடத்தப்படும். எவ்விசேஷமான கூட்டமும் சங்கத்தலைவரின் நற்கருத்தின்படி அல்லது சங்கத்தவர்களில் இருவரால் எழுத்துமூலம் கேட்கப்படும் கேள்விப்படி கூட்டப்படலாம். ஆயின் எந்தக் கூட்டத்தையாவது வேறு தினத்துக்கு அல்லது நேரத்திற்குத் தவணைபோடுவது சங்கத்தவர்களுக்கு நியாயமுறையாகும்.

(2) சங்கத்தைச்சேர்ந்த எல்லாக் காரணங்களுக்கும் அங்கத்தவரின் முதன்மையும் வரிசையும் பின்வருமாறு இருக்க வேண்டும்.

(a) சங்கத்தின் சபாநாயகர்.
(b) "கசெற்" பத்திரிகையில் பிரசித்தம் பண்ணப்பட்டிருக்கும் வரிசைப்படியே தேசாதிபதி யவர்களால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள்.

3. சபாநாயகர் கிரமமுறைகள் கைக்கொள்ளப்படும்படி செய்து கிரம விஷயமாயுள்ள எல்லாக் காரியங்களும் தீர்மானிக்க வேண்டும்.

4. சாதாரண அல்லது விசேஷ கூட்டம் எதுவும் தொடங்க நியமிக்கப்பட்ட மணித்தியாலம் வந்து நிருவாகத் தொகையாக இருக்கவேண்டிய அங்கத்தவர்களும் வந்து சேர்ந்தவுடன் அக்கிராசனம் வகிக்க உரித்துடைய அங்கத்தவர் சபாநாயகராக உட்கார வேண்டும். சங்கத்தவர்கள் அதன்பின் நடத்தவேண்டிய கருமங்களை நடத்தத் தொடங்க வேண்டும். நியமிக்கப்பட்ட நேரத்துக்குப்பின் அரைமணித்தியாலத்துக்குள் நிருவாகத் தொகையாக இருக்க வேண்டிய அங்கத்தவர்கள் வந்திராவிட்டால் அக்கூட்டம் சாதாரண கூட்டமாயிருக்குமாகில் அடுத்த சாதாரண கூட்டம் நடத்த நியமித்திருக்கும் நாளுக்கும், விசேஷ கூட்டமாயிருக்குமாகில் தேதி நியமியாமலும் தவணைபோடப்பட வேண்டும்

5. தருக்கம் நடக்கும் வேளையில் அல்லது அவசரமான காரியங்களின் விஷயத்தில் சங்கத்தின் விசேஷ உத்தரவோடு செய்தாலன்றி, ஒரு கேள்விகேட்க அல்லது பிரேரணைசெய்ய விரும்பும் எவ்வங்கத்தவரும் அக்கேள்வியை அல்லது பிரேரணையைக் குறித்து சங்கத்தின் முந்திய கூட்டம் ஒன்றில், அல்லது தாம் அக்கேள்வி கேட்க அல்லது அப்பிரேரணை செய்ய எண்ணியிருக்கும் நாளுக்கு குறைந்த பட்சம் நாலு நாட்களுக்குமுன் எழுத்துமூலமாக அறிவித்தல் கொடுக்கவேண்டும்.

6. ஒவ்வொரு அங்கத்தவரும் தாம் அவ்விதம் அறிவித்தல் கொடுக்கும்போது அக்கேள்வியின் அல்லது பிரேரணையின் ஓர் பிரதியையும் சங்கத்தலைவரிடம் ஒப்புவிக்க வேண்டும்.

7. ஓர் கூட்டத்தில் கேட்கப்படும் எல்லாக் கேள்விகளும், செய்யப்படும் எல்லாப் பிரேரணைகளும், சங்கத்தவர்கள் வேறுவிதமாகத் தீர்மானித்தாலன்றி அவைகளை குறித்த அறிவித்தல்களின் ஒழுங்கின்படி இருத்தல் வேண்டும்.

8. ஓர் கூட்டத்தில் எதிர் மறுக்கப்பட்ட எந்தப் பிரேரணையும் குறைந்த பட்சம் மூன்று மாசம் முடியும்வரையும் திரும்பக் கொண்டுவரக் கூடாது. மேலும் ஓர் கூட்டத்தில் சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் பிரேரணைக்கு எவ்விதத்திலும் மாறான எந்தப் பிரேரணையும் அக்கால எல்லை முடியும்வரையும் அங்கீகரிக்கப்படலாகாது.

9. எந்த அங்கத்தவராவது யாதும் பெட்டிசங்கள் அல்லது கடிதங்கள் சபைக்குக் கொண்டுவருகிறதானால், அவர் அதிலடங்கிய விஷயங்கள் முற்றாக மரியாதையுள்ளனவாயிருப்பதற்கு உத்தரவாதியாகக் கொள்ளப்படுவார். எழுதுகிறவரின் பெயரும் விலாசமும் அதில் தெளிவாக எழுதப்பட்டிருந்தாலன்றி எப்பத்திரமும் சபை முன்பாக ஓர் அங்கத்தவரால் கொண்டுவரப்படல் ஆகாது.

10. சங்கத்தின் சாதாரண கூட்டங்கள் பின்வரும் ஒழுங்கின்படி நடைபெற வேண்டும்.

(a) முந்திய கூட்டத்தின் குறிப்புகள் வாசிக்கப்பட்டு வேண்டுமானால் திருத்தப்பட்டதன்மேல் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(b) சபைக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள், பெட்டிசங்கள் அல்லது வேறு கடிதங்கள் கூட்டம் முன்பாக வைக்கப்பட்டு அவைகளின் விஷயத்தில் கொடுக்கப்பட வேண்டிய உத்தரவுகள் கொடுக்கப்பட வேண்டும்.

(c) மற்றும் அலுவல்கள் பின்சொல்லிய ஒழுங்கு முறைப் புத்தகத்தில் குறித்திருக்கும் ஒழுங்குப் பிரகாரம் விசாரிக்கப்பட வேண்டும்.

11. ஒவ்வொரு கூட்டத்திலும் தர்க்கிக்கப்படும்படியாகக் கொண்டுவரப்பட வேண்டிய விஷயங்கள் ஒன்றின்பின் ஒன்றாக எழுதப்பட்டு, இலக்கமிடப்பட்டிருக்கும் ஓர் ஒழுங்கு முறைப் புத்தகம் எழுதிவைக்கப்படல் வேண்டும்.

12. சங்கத்தின் வர்த்தமானங்கள் எழுதப்படும் ஓர் குறிப்புப் புத்தகத்தையும் லேககர் வைத்துவர வேண்டும். அப்புத்தகத்தில் எழுதப்பட்டபடி, சங்கத்தின் ஒவ்வொரு கூட்டத்தின் குறிப்புகளும், பிந்திய அக்கூட்டத்திலும் அவை உறுதிப்படுத்தப்பட்டபின் அவ்வண்ணம் அவைகள் உறுதிப்படுத்தப்படும். கூட்டத்தின் சபாநாயகரால் கையொப்பமிடப்பட வேண்டும்.

13. சங்கத்துக்கு வந்திருக்கும் எல்லா முறைப்பாடுகளையும் சங்கத்தின் உத்தியோகத்தரால் எழுதப்பட்ட சகல விஞ்ஞாபனங்களையும் நேர்முந்திய கூட்டத்துக்குப் பிற்பாடு சங்கத்தலைவரால் செய்யப்பட்ட எக்கருமத்தையும் பற்றிய குறிப்புகளையும் லேககர் ஒவ்வொரு கூட்டத்திலும் மேசையில் வைத்தல் வேண்டும்.

14. ஒவ்வொரு விசேஷ கூட்டத்தையும் பற்றிய அறிவித்தல் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் குறைந்த கணக்கு இரண்டு நாளைக்குமுன் ஒப்புவிக்கப்பட வேண்டும் அல்லது அவரது வீட்டில் வைத்துவிடப்பட வேண்டும்.

[9E (2) (b) ம் பிரிவு.]

கட்டுவேலைகள் செய்வித்தல் தெருக்கள், ரோட்டுகள், பாலங்கள்.

பகிரங்க வேலைகளுக்கு வேண்டிய பணத்தொகைகள் முன்னமே செய்யப்பட்டு சங்கத்தவரால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்புப் பத்திரங்களின்படி நியமித்து விடப்படல் வேண்டும்.

[9E (2) c) ம் பிரிவு.]

அப்பம் சுடுதல்.

1. அப்பம் செய்கிறதற்குப் பாவிக்கும் மா, தண்ணீர் மற்றும் பதார்த்தங்கள் நல்லனவாயும் சுகத்துக்கேற்றனவாயுமிருத்தல் வேண்டும். சங்கத்தலைவரால் காலத்துக்குக் காலம் எழுத்துமூலமாக அதிகாரம் கொடுக்கப்படும் எவருக்கும் கொடுக்கவேண்டிய விலையைக் கொடுத்து அப்பதார்த்தங்களின் மாதிரி சாம்பிள்களைக் கேட்டுவாங்குவது நியாயமுறையாகும்.

2. ஒவ்வொரு அப்பமும் அதன் நிறையைத் துலாம்பரமாய்க்காட்டும ஓர் அடையாளத்தை அதன் மேற்பக்கத்தில் உடையதாயிருத்தல் வேண்டும். அவ்வித அடையாளம் ஒன்றுமில்லாத அல்லது அப்படிக் குறிக்கப்பட்ட முழு நிறைக்குக் குறைந்த நிறையுள்ள அப்பம் விற்கும் எவரும் ஓர் அடாத்துச் செய்த குற்றமுடையவர் ஆவர்.

[9E (2) (d) ம் பிரிவு.]

பொதுச் சந்தைகளும் அப்பம்சுடும் இடங்களும் தேத்தண்ணீர் கோப்பிக்கடைகளும், இறைச்சிக்கடைகளும், யாட்டுக் காலைகளும், வண்ணான் துறைகளும் ஸ்தாபித்து நடத்துதல்.

A.—சந்தைகள்.

1. ஒரு பொதுச்சந்தை ஸ்தாபிக்க சங்கத்தால் தீர்மானிக்கப்படும்போது அச்சந்தை தொடங்கும் நேரத்தைப்பற்றி சங்கத்தலைவர் பத்து நாளைக்குக் குறையாமல் அறிவித்தல் கொடுக்க வேண்டும். அவ்வறித்தல் பறைசாற்றல்மூலம் பிரசித்தப்படுத்தப் படவேண்டும்.

2. எச்சௌக்கியாதாரப் பட்டணத்திற்கும் சங்கத்தால் ஒரு பொதுச் சந்தை ஸ்தாபிக்கப்பட்டிருந்தால் சங்கத்தின் உத்தரவுப் பத்திரமின்றி அப்பட்டண எல்லைகளுக்குள் எச்சனங்களும் தங்களுக்காக ஓர் தனிச்சந்தை கூட்டப்படாது.

3. எல்லாப் பொதுச்சந்தைகளும் தினந்தோறும் காலை 6 மணி தொடங்கி சாயந்தரம் 9 மணி வரையும் திறந்திருக்க வேண்டும். சந்தையில் சரியான பிரகாரம் வெளிச்சம் ஏற்றியிருக்கும்படி செய்வது சங்கத்தின் அல்லது குத்தகைக் காரனின் கடமையாகும்.

4. ஓர் பொதுச் சந்தைக்காகக் கொடுக்கவேண்டிய வாடகைகளும் சலார்களும் காலத்துக்குக் காலம் கேட்ட நேரமே சங்கத்தலைவருக்கு அல்லது குத்தகைக்காரனுக்கு அல்லது சங்கத்தாலாவது குத்கைக்காரனாலாவது அதை அறவிடும்படி தத்துவம் பெற்றவருக்கு முற்பணமாகக் கொடுக்கப்பட வேண்டும்.

5. சந்தையில் ஒட்டப்பட்டிருக்கும் அறிவித்தலால் அச்சந்தையில் வைத்திருக்கப்படாது அல்லது விற்கப்படாதென்று விலக்கப்பட்ட எந்தச் சாமானையாவது ஒருவரும் எக்கடையிலும் வைத்திருக்கவேனும் விற்பனவுக்கென்று வெளியாக வைக்கவேனும் படாது.

6. மீனும் உப்பிட்ட மீனுமேயல்லாமல் வேறு பண்டங்களை அல்லது பொருட்களை எந்த மீன் சந்தையிலாவது கடையிலாவது ஒருவரும் வைத்திருக்கவேனும் விற்பனவுக்கென்று வெளியாக வைக்கவேனும் படாது.

7. புதிதாயிருந்தாலும் உப்பிட்டதாயிருந்தாலும் எவ்விறைச்சியையாவது மீனையாவது சமைத்தபோசனம் எதையாவது பழங்கள் அல்லது காய்கறிகளைத்தவிர வேறு போசன பதார்த்தம் எதையாவது, எந்தக காய்கறி அல்லது பழச் சந்தையிலேனும் கடையிலேனும் ஒருவரும் விற்கவேனும் விற்பனவுக்கென்று வெளியாக வைக்கவேனும் படாது.

8. எந்தக் கடைக்காரனாவது ஓர் சந்தையின் எப்பாகத்தையும் எவ்விதத்திலும் அடைக்கவேனும் அல்லது ஓர் மேற்கட்டியையாவது மறைவு திரையையாவது நிலையான எக்கட்டுவேலையையாவது கட்டவேனும் படாது. மேலும் சங்கத்தலைவரின் உத்தரவை முதல் பெற்றல்லாமல் எந்தச்சந்தையிலும இரவு 9 மணிக்கும் காலை 6 மணிக்குமிடையில் எச்சாமான்களையும் அவன் விடப்படாது.

9. எந்தச்சந்தையிலும் ஓர் கடையேனும், வெளியேனும் இருக்குமிடமேனும் வைத்திருக்கும் ஒவ்வொருவனும் அக்கடையை, வெளியை அல்லது இருக்குமிடத்தை துப்பரவாகவும் அழுக்கு, குப்பையில்லாமலும் வைத்திருத்தல் வேண்டும். தொற்றுநோய் அல்லது பரம்பும் நோய் உள்ளவன் எவனும் அல்லது கொஞ்சகாலத்துக்குமுன் அந்நோயாற் பீடிக்கப்பட்டிருந்தவன் எவனும் அல்லது அப்படியான நோயுள்ளவனைக் கொஞ்சகாலத்துக்குமுன் பராமரித்தவன் எவனும் அப்பொதுச் சந்தையில் ஓர் கடை, இருக்குமிடம் அல்லது ஸ்தலம் வைத்திருக்கப்படாது.

10. ஓர் பொதுச் சந்தையின் ஓர் பாகத்தை உபயோகப்படுத்திவரும் அல்லது ஆட்சி பண்ணிவரும் எவரும் —

(a) அச்சந்தையில் அல்லது அதற்குக்கிட்ட ஒழுங்கீனமாய் நடக்கவேனும் அசங்கியம் செய்யவேனும் படாது.

(b) அச்சந்தை எதிலும் சமைக்கப்படாது.

(c) இரவு 9 மணிக்கு அந்த இடத்தில் அலுவல் முடிந்தபின் தான் அங்கே இருப்பதற்கு போதுமான நியாயம் சொல்லக்கூடாதபடியிருந்து அச்சந்தையில் தரித்து நிற்கவேனும் அலைந்து திரியவேனும் படாது.

(d) கட்டடங்களின் எப்பாகத்தையாவது, கடைகளையாக விளக்குகளையாவது அச்சந்தையில் அல்லது அதற்குச்சுற்ற உள்ள சங்கத்தின் சொத்து எதையும் பழுதபடுத்தவேனும சிதைக்கவேனும் அல்லது அச்சந்தையிற் பாவிப்பதற்காக வைக்கப்பட்டிருக்கும் தண்ணீரை எவ்விதத்திலும் கெடுக்கவேனும் அசுசிப் படுத்தவேனும் படாது.

11. சௌக்கியாதாரசங்க எல்லைக்குள் விற்பனவுக்கென்று வெளியாக வைக்கப்பட்டிருக்கும் இறைச்சி, வீட்டுப் பறவைகள், மீன், வேட்டையாடிய மிருகங்கள், மாமிசங்கள். காய்கறி, பழங்கள் எவையும் சௌக்கியத்துக்கேற்றனவல்லவென்று அல்லது மனுஷ சாப்பாட்டுக்கு உதவாதனவென்று சங்கத்தின் பரிசோதகர் அல்லது மேல்விசாரணைக்காரர் அவைகளைப் பிடிக்கும்போது அவ்விடத்தின் வைத்திய உத்தியோகஸ்தரிடம் அல்லது அவர் இல்லாதிருக்கும் நேரத்தில் அல்லது அப்படியான உத்தியோகஸ்தர் ஒருவர் அவ்விடத்தில் இல்லையானால் பொலீஸ் நீதவானிடம், அல்லது பொலீஸ் கோடொன்று இல்லாத இடமானால் ஓர் கிராமகோட்டு நீதவானிடம் அவைகளைக் கொண்டுபோவது அப்பரிசோதகருக்கு அல்லது மேல் விசாரணைக்காரருக்கு நியாயமுறையாகும். அவ்விறைச்சி வீட்டு மிருகங்கள், மீன் காய்கறிகள் பழவர்க்கங்கள், அல்லது மற்றும் போசன பதார்த்தங்கள் மனுஷ சாப்பாட்டுக்கு உதவாதனவென்று அவ்வைத்திய உத்தியோகஸ்தருக்கு, பொலீஸ் நீதவானுக்கு அல்லது கிராமக்கோட்டு நீதவானுக்குத் தோற்றுமாகில், அவைகள் விற்பனவுக்கென்று வைக்கப்படாதபடிக்கு அல்லது போசனமாகப் பாவிக்கப்படாதபடிக்குத் தடுப்பதற்காக அவைகளை அழித்துவிடும்படி அல்லது திட்டம் பண்ணும்படி அவர் கட்டளை பண்ணலாம்.

12. சந்தை எல்லைக்குள், குழப்பமில்லாமல் ஒழுங்காய் வைத்திருப்பது சந்தைக்காவலனின் அல்லது குத்தகைக்காரனின் கடமையாகும். எந்தப் பொதுச்சந்தையையும் மேல் விசாரித்துப்பார்த்து வருவதற்கு அல்லது வாடகைகளை அல்லது சலார்களை அறவிடுவதற்கு, அல்லது அவ்விடத்தில் யாவும் ஒழுங்காயிருக்கவும் இடம் சுத்தமாய் வைத்திருக்கப் படவும் செய்வதற்காக சங்கத்தால் நியமிக்கப்பட்ட எவரும் தன் கடமையைப் பார்க்கும்போது அவரைத் தடைபண்ணும் எவரும் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவர் ஆவர்.

13. குறித்த ஓர் வித மீனை சனங்கள் பாவிப்பது அல்லது சாப்பிடுவது கெடுதிபானதென்று, அல்லது கொள்ளை நோய் எதுவும் பரம்பும் காலத்தில் குறித்த ஓர் பழத்தை அல்லது காய்கறியைப் பாவிப்பது அல்லது சாப்பிடுவது தீங்கானதென்று சங்கத்துக்குத் தோற்றும்போதெல்லாம் சங்க எல்லைக்குள் உள்ள எந்தச் சந்தையிலேனும் வேறிடத்திலேனும், சங்கத்துக்கு தேவையெனக்காணும் காலத்துக்கு, அம்மீன், பழம், அல்லது காய்கறி எதையும் விற்கப்படாதென்று பறைசாற்றுவித்து அல்லது வேறு வகையாக போதிய அறிவித்தல் கொடுத்துத் தடுப்பதும். அவ்வறிவித்தல் கொடுத்தபின் அது விற்பனவுக்கென்று வைக்கப்பட்டாலும் வைக்கப்படாவிட்டாலும் சங்கம் அல்லது சங்கத்தலைவர் கட்டளை செய்யும்வண்ணம் அதைப் பிடித்து அழித்து விடும்படி செய்வதும், சங்கத்துக்கு நியாயமுறையாகும்.

14. எந்தச் சந்தை எல்லைக்குள்ளும் சாமான் ஏற்றுவதற்கு அல்லது இறக்குவதற்கு தேவையான நேரத்துக்கு மேல் எந்த வண்டியையாவது வாகனத்தையாவது ஒருவரும் விடப்படாது.

15. சங்கத்தால் ஒழுங்குப்பண்ணி வைக்கப்பட்ட ஓர் மூடிய பாத்திரத்துள் அன்றி ஓர் பொதுச் சந்தையில் குப்பை, கூளம், எலும்புகள், மிருகத்தோல்கள், அல்லது துர்நாற்றமானவைகளாயிருக்கக் கூடிய அல்லது பொதுச் சுகத்துக்குக் கெடுதியாயிருக்கக் கூடிய வேறு பொருட்களை ஒருவரும் போடப்படாது.

16. மாடாட்டடிப்பதற்கு சங்கத்தால் ஒழுங்கு செய்து வைக்கப்பட்ட ஓர் பொதுக் கொட்டிலில் அடிக்கப்படாத எந்த மிருகத்தின் இறைச்சியையேனும் அதின் எப்பாகத்தையேனும் ஒருவரும் ஒரு பொதுச் சந்தைக்குள்ளாவது சொந்தச் சந்தைக்குள்ளாவது கொண்டு வரவேனும் ஒரு பொதுச் சந்தையிலாவது சொந்தச் சந்தையிலாவது விற்கவேனும் விற்பனவுக்கென்று வெளியாக வைத்திருக்கவேனும் படாது.

17. சங்கத்தலைவர் ஒவ்வொரு சந்தையிலும் சங்கத்தின் வேலைக்காரரால் அல்லது அதன் குத்தகைக்காரனால் அறவிடப்படக்கூடிய வாடகைகளும் வேதனங்களும் குறிக்கப்பட்டிருக்கும் ஓர் அட்டவணையை ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் தமிழிலும் அச்சிட்டு ஒவ்வொரு சந்தையிலும் யாவரும் காணக்கூடிய ஓர் இடத்தில் தூக்கிவைக்கும்படி செய்யவேண்டும். அவ்வறிவித்தலினால் நியமிக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்கக்கூடிய தொகைகளைக் கேட்பது அல்லது வாங்குவது எவருக்கும் நியாய விரோதமானதாயிருக்கும்.

### இறைச்சிச் சந்தை.

விற்பனவுக்கென்று வெளியாக வைக்கப்பட்டிருக்கும் வெள்ளாடு அல்லது செம்மறியாட்டின் இறைச்சியைத்தவிர மற்றும் மிருகங்கள் ஒவ்வொன்றின் இறைச்சிக்கும் நாள் ஒன்றுக்கு 50 சதம்.

விற்பனவுக்கென்று வெளியாக வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு வெள்ளாட்டின் அல்லது செம்மறியாட்டின் இறைச்சிக்கும், நாள் ஒன்றுக்கு 25 சதம்.

### மீன் கடை.

பாவித்து வரும் தளத்தின் ஒவ்வொரு சதுரயாருக்கும், நாள் ஒன்றுக்கு 6 சதம்.

### காய்கறிக் கடை.

சந்தைக்குள் அல்லது சந்தைக்கு வெளியே பாவித்துவரும் நிலத்தின் ஒவ்வொரு சதுரயாருக்கும் வருஷா வருஷம் சங்கத்தால் நியமிக்கப்படலாகும் விகிதம் அல்லது விகிதங்கள்.

18. மீன் அல்லது இறைச்சி வைத்து விற்பதற்கு இடங்கொடுக்கப்பட்டிருக்கும் பொதுச் சந்தைகளில் அம்மீன் அல்லது இறைச்சி விற்பதற்கென்று புறம்பாக வைத்திருக்கும் இடங்களிலன்றி ஓர் பொதுச் சந்தையிலுள்ள வேறெந்த இடத்திலும் எவ்வகையான மீனையாவது இறைச்சியையாவது ஒருவரும் கொண்டு வரவேனும் விற்பனவுக்கென்று வைத்திருக்கவேனும் விற்கவேனும்படாது. அவ்விடங்கள், அம்மீன் அல்லது இறைச்சி தனித்தனி வைத்திருக்கப்படுவதற்கு வெளிக்காட்டப்படுவதற்கு அல்லது விற்கப்படுவதற்கென்று புறம்பாக உபயோகிக்கப்படல் வேண்டும்.

19. சௌக்கியாதார சங்கம் கடைகளுக்காக ஒவ்வொரு பொதுச் சந்தையிலும் தேவையென்று காணும் இடங்களைப் பிரித்துக் குறிப்பிட்டு விடலாம்.

20. பன்னிரண்டு மாசத்துக்கு மேற்படாத எக்காலத்துக்கும் ஓர் பொதுச் சந்தையிலுள்ள கடைகளை சௌக்கியாதார சங்கம் சங்கத்தவர் மூலம் குத்தகைச் சீட்டுக்கள் வாங்கிக்கொண்டு குத்தகை கொடுக்கலாம். சௌக்கியாதார சங்கம் நீதியென்றெண்ணுவதும் குத்தகைக்காரர் ஏற்றுக்கொள்ளுவதுமான நிபந்தனைகளை அக்குத்தகைச் சீட்டுக்கள் அடக்கியிருக்கலாம்.

21. மாசம் ஒன்றுக்கு தளமேற்பரப்பின் ஓர் சதுர அடிக்கு ஒரு சதவீதமான வாடகை அல்லது வேதனம் வாங்கிக்கொண்டு, பன்னிரண்டு மாசத்துக்குக் குறைந்த எக்காலத்துக்கும், காலியாயிருக்கும் எக்கடையையும் சங்கத்தலைவர் வாடகைக்குக் கொடுக்கலாம்.

22. மாடுகள், செம்மறியாடுகள், வெள்ளாடுகள், பன்றிகள் அல்லது வேறு மிருகங்களை, அவைகளை விடுவதற்கென்று புறம்பாக வைக்கப்பட்ட இடத்திலன்றி, ஓர் பொதுச்சந்தையின் வேறெந்தப் பாகத்துள்ளும் ஒருவரும் கொண்டு போகப்படாது. தனது வண்டியில், கரத்தையில் அல்லது வேறு வாகனத்தில் சாமான்கள் ஏற்றும்போது அல்லது அதிலிருந்து சாமான்கள் இறக்கும்போதல்லாமல், சந்தைக்குச்சேர்ந்த நிலத்தின் எப்பாகத்திலும் ஒருவரும் அவ்வண்டியை, கரத்தையை, அல்லது வாகனத்தை விடப்படாது.

23. தொற்றுநோய், சர்மநோய், அல்லது பரம்பும் நோய் ஏதுவும் பிடித்திருக்கும் அல்லது அந்நோயால் வருந்தும் எவரும் எக்கடையையும் ஆட்சிபண்ணி வரவேனும் எப்போசன பதார்த்தங்களையும் விற்பனவுக்கென்று வெளியாக வைத்திருக்கவேனும் படாது.

24. எப்பொதுச் சந்தை நிலத்திலேனும் அந்நிலத்திலுள்ள கட்டடம், குடிசை அல்லது கொட்டிலிலேனும், அல்லது அதற்கருகாகவுள்ள பெரிய றோட்டுக்களிலேனும் ஒருவரும் கழிவுமாமிசம், அழுக்கு, ஊத்தை அல்லது குப்பை கொட்டவேனும், மலங்கழித்து அசங்கியப்படுத்தவேனும் படாது.

25. எப்பொதுச் சந்தையின் எல்லைக்குள்ளாவது, அதற்கருகாகவுள்ள பெரிய றோட்டுக்களிலாவது ஒருவரும் எம்மிருகத்தையும் கொல்லவேனும், கொன்றமிருகத்தை உரிக்கவேனும், கீறிக்குடல் எடுக்கவேனும் படாது.

26. சந்தைக்காவலன் சந்தை துப்பரவாய் வைத்திருக்கப்படும்படியும், சந்தைக்குவரும் சனங்கள் உபவிதிகளைக் கைக்கொண்டொழுகும்படியும் செய்வதுமன்றி, அவ்வுபவிதிகளை எவரும் மீறும்போது அதைக்குறித்து சங்கத்தலைவருக்கு அறிவிக்கவும் வேண்டும்.

### அப்பச்சாலைகள் (பேக்கறிகள்).

27. லைசென்ஸ் உத்தரவுபெறவேண்டிய இடங்களில் பின்வரும் காரியங்கள் செய்யப்பட்டிருந்தாலன்றி ஓர் அப்பச்சாலைவைத்து நடத்துவதற்கு ஓர் லைசென்ஸ் உத்தரவுப்பத்திரம்பெற ஒருவரும் உரித்துடையவர் ஆகமாட்டார்.

(a) மாப்பிசையும் அறை குறைந்தபட்சம் நீட்டில் 15 அடியும் அகலத்தில் 12 அடியுமாயிருக்கவேண்டும்.

(b) யாதும் தடையில்லாமல் ஊடாகக் காற்று வீசத்தக்கதாய் இரண்டு பக்கத்திலாகுதல் அகலத்தில் 7 அடிக்குக் குறையாததாய் காற்றுவெளிகள் வெளிப்பக்கமாக விருத்தல்வேண்டும்.

(c) போறணையின் கதவு மாப்பிசையு மறைக்குள் நேரே திறக்கிறதாய் இருக்கப்படாது. ஒவ்வொரு மாப்பிசையு மறைக்கும் மச்சுப் பலகை அடித்திருக்க வேண்டும்.

(d) ஒவ்வொரு அப்பச்சாலையும் அதற்குள் காற்று நன்றாய் வரத்தக்கதாகவும் வெளிச்சமுள்ளதாயு மிருத்தல் வேண்டும். சுவர்கள் சுண்ணச்சாந்து பூசப்பட்டனவா யிருப்பதோடு ஆறு மாசத்துக் கொருமுறை வெள்ளையடிப்பிக்கப்பட வேண்டும். தளத்துக்கு சிமெந்து போட்டிருக்க வேண்டும். வேண்டிய கான்களும் கட்டியிருக்க வேண்டும்.

28 லைசென்ஸ்காரன், அப்பமும் தீம்பண்டமும் செய்வதில், தளத்தைத் துப்புரவுபண்ணுவதற்காக இடத்திலிருந்து இடத்துக்குக் கொண்டுபோகக்கூடிய தொட்டிகளையும் மற்றும் பாத்திரங்களையும் உபயோகிக்க வேண்டும். அத்தொட்டிகளும் பாத்திரங்களும் மிகத் துப்புரவாய் வைத்திருக்கப்படும்படி அவன் செய்யவேண்டும்.

29. லைசென்ஸ்காரன் இருபத்துநாலு மணித்தியாலத்துக்கு ஒரு தரமாகுதல் தளத்தைக் கவனமாய்ச் சுரண்டிக் கூட்டுவிக்க வேண்டும். கூட்டின குப்பையை உடனே ஒரு துவாரங்களில்லாத மூடப்பட்ட பாத்திரத்தில போடுவித்து அப்பச்சாலையிலிருந்து ஒவ்வொரு நாளும் கொண்டுபோகும்படி செய்ய வேண்டும்.

30. லைசென்ஸ்காரன் ஒவ்வொரு அப்பச்சாலையும் மெத்தத் துப்புரவாயும், ஏதும் ஒரு கான், கக்கூசு அல்லது குழிக்கக்கூசி லிருந்தேனும் அல்லது வேறு அசங்கியம் எதிலுமிருந்தேனும் உண்டாகும் நச்சுக்காற்று வராதபடியும் வைத்திருக்கும்படி செய்யவேண்டும்.

31. லைசென்ஸ்காரன் ஒவ்வொரு சாம்பல் கிடங்கும் குழிக்கக்கூசும், பசளைக் கும்பமும் மூடாமலிருக்கும் கானும் கக்கூசும் அப்பச்சாலைக்குப் புறம்பாயும் அதிலிருந்து குறைந்த அளவில் 30 அடி தூரத்திலும் இருக்கும்படி செய்யவேண்டும்.

32. அப்பமும் தீம்பண்டமும் செய்வதற்கு உபயோகிக்கப்படுவன ஒழிந்த வேறு தட்டு முட்டுகளை அல்லது சாமான்களை ஒருவரும் அப்பச்சாலையில் வைத்திருக்கப் படாது.

33. லைசென்ஸ்காரன் மேசைகளின் மேற்றட்டுகளை முதிர்ந்த இடைவெளியில்லாமல் சேர்ந்திருக்கும் பலகைகளால் அல்லது வேறு தீங்கில்லா ஊறுத பொருட்களால் செய்விதுக்கொள்ள வேண்டும். அவைகளை ஒவ்வொரு நாளும் தேய்ப்பித்து சுத்தப்படுத்துவிக்கவும் வேண்டும்.

34. அப்பச்சாலையில் எவ்விதமான சாட்டிஆம் ஒருவரும் ஒரு மிருகமும் வைத்திருக்கப்படாது.

35. தொற்றுவியாதி அல்லது பரம்பும் வியாதி உள்ளவனை அல்லது லைசென்ஸ்காரன் அல்லது அப்பச்சாலையின் பொறுப்பேற்றிருக்கும் எவரும் அறியக்கூடியதாய் கொஞ்சக் காலத்துக்குமுன் அப்படியான வியாதியுள்ளவனுய் இருந்தவனை அல்லது அப்படியான வியாதியுள்ளவனைக் கொஞ்சக் காலத்துக்குமுன் பராமரித்தவனை அப்பச் சாலைக்குள் போகிறதற்கு அல்லது அப்பம், விசுக்கோத்து அல்லது மிட்டாய் செய்வதற்கு அல்லது விற்பதற்கு லைசென்ஸ்காரன் அல்லது அப்பச் சாலையின் பொறுப்பேற்றிருக்கும் எவரும் விடப்படாது.

36. அப்பம் சுடுவதற்கான ஆயத்தங்கள் செய்யும் அல்லது அப்பம் சுடும் எல்லா ஆட்களும் அப்பம்செய்யத் தொடங்குவதற்குமுன் தங்களுடைய கைகளைக் கழுவவேண்டும். நெஞ்சையும் உடம்பையும் மூடக்கூடிய துப்புரவான வெள்ளை முன்தாங்கித் துணிகளையும் ஒரு வெள்ளைத் தொப்பி அல்லது தலைப்பாகையையும் அவர்கள் அணிந்துகொள்ள வேண்டும்.

37. லைசென்ஸ்காரன் அப்பம், விசுக்கோத்து, மிட்டாய் செய்பவர்களின் பாவிப்புக்காக சுத்தமான தண்ணீரும் சவக்காரமும் வைத்துக் கொடுக்கவேண்டும்.

38. லைசென்ஸ்காரன் விற்பனவுக்காக வெளியே வைத்திருக்கும் எல்லா அப்பத்தையும், விசுக்கோத்தையும், மிட்டாயையும், இனிப்புப் பண்டங்களையும் ஈ இலையான் போகக்கூடாத நேர்த்தியாய் செய்யப்பட்ட கண்ணுடிப் பெட்டிகளில் வைத்திருக்கவேண்டும். அந்தப் பெட்டிகள் மெத்தத் துப்புரவாய் வைத்திருக்கப்படும்படி அவன் செய்ய வேண்டும்.

39. லைசென்ஸ்காரன் அப்பம் சுடும் வேலையில் பாவிக்கப்படுவதற்காக நல்ல சுத்தமான மாவும் தண்ணீரும் மற்றும் பதார்த்தங்களும் வைத்துக் கொடுக்க வேண்டும். மேலும், நிலத்தில் 3 அடிக்கு மேலே யிருக்கும் மேடையில் மா வைத்திருக்கப்படும்படியும் அவன் செய்யவேண்டும்.

40. லைசென்ஸ்காரன் அப்பச்சாலை யிருக்கும் இடத்தைச் சுற்றியுள்ள எல்லா அழுக்கையும் ஒவ்வொரு நாளும் அகற்றுவித்து கான்களை நன்றாய்க் கழுவுவித்துக்கொள்ள வேண்டும்.

41. நிலத்திலிருந்து முகடுமட்டுமுள்ள ஓர் மறைப்பால் நன்றாகப் பிரிக்கப்பட்டிருந்தாலொழிய, அப்பச்சாலை மட்டத்துக்கு இருக்கிறதும் அக்கட்டடத்தின் ஓர் பகுதியாயிருக்கிறதுமான எந்த இடத்தையும் படுக்குமிடமாக ஒருவரும் பாவிக்கப்படாது.

42. நியாயமான எல்லா நேரங்களிலும் அப்பச் சுடு நடக்கும் எந்த நேரத்திலும் எந்த அப்பச் சாலைக்குள்ளும் அப்பம் விற்கப்படும் எந்த இடத்துக்குள்ளும் போய் அவ்விடத்தைச் சோதிப்பது சௌக்கியதாரச்சங்கப் பரிசோதகருக்கு அல்லது சங்கத் தலைவரால் எழுத்துமூலமாக அதிகாரம் கொடுக்கப்பட்ட வேறெவருக்கும் நியாயமுறையாகும்.

43. ஒவ்வொரு அப்பச்சாலையிலும் இந்த உபவிதிகள் அடங்கிய பிரதி ஒன்று மட்டை போடப்பட்டு யாவரும் காணக்கூடிய ஓர் பிரசித்தமான இடத்தில் லைசென்ஸ்காரனுல் தூக்கிவிடப்பட வேண்டும்.

(c) சாப்பாட்டுக் கடைகளும் தேத்தண்ணீர் கோப்பிக் கடைகளும்.

44. ஓர் சாப்பாட்டுக்கடையின் அல்லது தேத்தண்ணீர் கோப்பிக்கடையின் லைசென்ஸ்காரன் சங்கத் தலைவர் திருப்திப்பட்டுக்கொள்ளத்தக்கதாக அக்கடையைத் துப்புரவாயும் சுகத்துக்கேற்ற மாதிரியாயும் வைத்துக்கொள்ள வேண்டும்.

45. லைசென்ஸ்காரன் சாப்பாட்டுக்கடை அல்லது தேத்தண்ணீர் கோப்பிக்கடை எதிலும் பாவிக்கப்படும் அல்லது அக்கடைக்குச்சேர்ந்த எல்லாப் பாத்திரங்களும், வீட்டுத் தளபாடங்களும் மற்றும் சாமான்களும் எப்பொழுதும் துப்புரவாய் வைத்திருக்கப்படும்படி செய்யவேண்டும்.

46. தொற்று வியாதி அல்லது பரம்பும் வியாதியுள்ளவனை அல்லது லைசென்ஸ்காரன் அல்லது சாப்பாட்டுக் கடையின் அல்லது தேத்தண்ணீர் கோப்பிக்கடையின் பொறுப்பேற்றிருக்கிறவன் அறியக்கூடியதாக கொஞ்சக் காலத்துக்குமுன் அப்படியான வியாதியுள்ளவனு யிருந்தவனை அல்லது அப்படியான வியாதியுள்ளவனைக் கொஞ்சக் காலத்துக்குமுன் பராமரித்தவனை லைசென்ஸ்காரன் அல்லது சாப்பாட்டுக் கடையின் அல்லது தேத்தண்ணீர் கோப்பிக் கடையின் பொறுப்பேற்றிருப்பவன் அந்தக் கடையில் அல்லது அதற்குக்கிட்ட வேலைபார்க்கிறதற்கு விடப்படாது.

47. லைசென்ஸ்காரன் பாவிக்கப்படும் சீனியை கண்ணுடி மூடி போட்ட அகன்ற வாயுள்ள போத்தில்களில் வைத்திருக்கப்படும்படி செய்யவேண்டும்.

48. லைசென்ஸ்காரன் விற்பனவுக்காக வைத்திருக்கும் எல்லாப் பணிகாரங்களையும் இனிப்புப் பண்டங்களையும் ஈ இலையான் போகக்கூடாதபடி நன்றாய்ச் செய்யப்பட்ட கண்ணுடிப் பெட்டிகளில் வைத்திருக்கப்படும்படியும், அக்கண்ணுடிப் பெட்டிகள் மெத்தத் துப்புரவாய் வைத்திருக்கப்படும்படியும் செய்யவேண்டும். இலையான்கள் அசுசிப்படுத்தாதபடி மற்றும் போசன பதார்த்தங்களையும் அவ்வண்ணம் மூடிவைத்துக்கொள்ளும்படி அவன் செய்யவேண்டும்.

49. லைசென்ஸ்காரன் பாவிப்புக்குக்கூடாத தேத்தண்ணீர், கோப்பி, பால் அல்லது சாப்பாட்டு மிச்சம் அல்லது பாவிப்புக்குக்கூடாத சமையல் சாமான்கள் யாவையும் சரியான ஒரு பாத்திரத்தில் சேர்த்து ஒவ்வொரு நாளும் அகற்றிவிடும்படி செய்யவேண்டும்.

50. எந்தச் சாப்பாட்டுக்கடை அல்லது தேத்தண்ணீர் கோப்பிக்கடை யிருக்கும் இடத்திலும் ஒருவரும் கலந்த பால் விற்கவேனும், விலைக்கு வாங்கும்படி கேட்கவேனும், விற்பனவுக்கென்று வெளியாக வைத்திருக்கவேனும் படாது.

51. இந்த விதானத்தின் நோக்கத்திற்காக "கலந்த பால்" என்பது தண்ணீர் அல்லது வேறு புற நீர்ப்பதார்த்தம் அல்லது வஸ்து சேர்க்கப்பட்டதால் பழுதாக்கப்பட்ட பால் எனப் பொருள்படும்.

52 லைசென்ஸ்காரன் இந்த உபவிதிகள் அடங்கிய ஓர் பிரதியை மட்டைபோட்டு அச்சாப்பாட்டுக்கடை அல்லது தேத்தண்ணீர் கோப்பிக்கடை ஒவ்வொன்றிலும் யாவரும் காணக்கூடிய ஒரு இடத்தில் தூக்கிவைக்கவேண்டும்

D.—இறைச்சிக் கடைகள்.

53. லைசென்ஸ்காரன் இறைச்சி வைத்திருக்கும் ஒவ்வொரு அறையும் மிகத் துப்புரவாய் வைத்திருக்கப்படும்படி செய்யவேண்டும்.

54. லைசென்ஸ்காரன் ஓர் இறைச்சிக்கடையில் பாவிக்கப்படும் ஒவ்வொரு மேசையும் துத்தநாகத்தால் அல்லது வேறு ஊறுத தீங்கற்ற பொருளால் மூடப்பட்டிருக்கும்படியும், அம்மேசைகளும் இறைச்சிவைத்து வெட்டும் மரக்குற்றியும், எல்லாக் கருவிகளும் மெத்தத் துப்புரவாய் வைத்திருக்கப்படும்படியும் செய்யவேண்டும்.

55. லைசென்ஸ்காரன் மேசையையும் இறைச்சிவைத்து வெட்டும் மரக்குத்திகளையும், கருவிகளையும் பாவித்து முடிந்தவுடன் தண்ணீரினால் கழுவுவித்து ஓர் துப்புரவான தடித்த கற்றையினால் உரைஞ்சித் துடைப்பித்துக்கொள்வதுமன்றி, இறைச்சி தூக்குகிறதற்குப் பாவிக்கும் எல்லாக் கொளுவிகளும் மினுக்கப்படும்படியும் கறைபிடியாமல் வைக்கப்படும்படியும் செய்யவேண்டும்.

56. லைசென்ஸ்காரன், எல்லாக் கழிவுகளையும் விற்றுக்கொள்ளக்கூடாத பதார்த்தங்களையும், கழிவு மாமிசத்தையும் சேர்ப்பித்து, அவைகள் உடனே கொண்டுபோகப்படாவிட்டால், உள்ளே துத்தநாகத்தகடு பிடிக்கப்பட்டதும் துவாரங்களுள்ள துத்தநாக மூடியுள்ளதுமான பெட்டியில் வைப்பிக்க வேணடும். அத்துவாரங்கள் இலையானகள் உள்ளேபோகககூடாத பருப்பமுள்ள துவாரங்களாயிருத்தல் வேண்டும்.

57. தொற்றுவியாதி அல்லது பரம்பும் வியாதியுள்ளவன் அல்லது லைசென்ஸ்காரன் அல்லது இறைச்சிக்கடையின் பொறுப்பேற்றிருக்கும் எவனும் அறியககூடியதாய் கொஞ்சக்காலத்துக்குமுன் அவ்வியாதியுள்ளவனாயிருந்தவனை அல்லத் அவ்வியாதியுள்ளவனைக கொஞசக்காலத்துககுமுன் பராமரித்தவனை அவ்விறைச்சிக்கடையில் வேலைபார்க்கிறதற்கு லைசென்ஸ்காரனேனும் இறைச்சிக்கடைப் பொறுப்பேற்றிருப்பவனேனும் விடப்படாது.

58. ஒவ்வொரு இறைச்சிக்கடைககாரனும் கழிவுபொருட்கள் போடுகிறதற்காக இடத்திலிருந்து இடத்துக்குக் கொண்டுபோகக்கூடிய தகரவாளி அல்லது லோகத்தால் செய்த பாத்திரம் ஒன்று வைத்திருக்கவேண்டும்.

59. ஒவ்வொரு இறைச்சிக்கடையும் அங்கு நடக்கும் வியாபாரத்தின் நிருவாகமும் ஒழுங்கும் சௌக்கியாதார சங்கத்தின் தலைவரால் அல்லது அச்சங்கத்தலைவரால் முறைப்படி அதிகாரம் கொடுக்கப்பட்ட எவராவும் எந்தநேரமும் சோதிககப்படுவதற்கு ஏதுவாயும் அடங்கியதாயு மிருத்தல் வேண்டும்.

60. லைசென்ஸ்காரன் ஒவ்வொரு இறைச்சிககடையிலும் இந்த உபவிதிகள் அடங்கிய ஓர் பிரதியை யாவரும் காணக்கூடிய ஓர் இடத்தில் மட்டைபோட்டுத் தூக்கிவிட வேண்டும்.

E.—காலைகள்.

61. ஒவ்வொரு லைசென்ஸ் முடிபட்ட காலையும் சங்கத்தலைவரால் பதிவுசெய்யப்பட வேண்டும். ஒவ்வொரு காலையின் வாசலிலும் "பதியப்பட்ட காலை இலக்கம் ——" என்ற சொற்களும் சொந்தககாரனுடைய பெயரும் பூச்சுமையால் எழுதப்பட்ட ஓர் விளம்பரப்பலகை லைசென்ஸ்காரனால் தூக்கி வைக்கப்படவேண்டும்.

62. லைசென்ஸ்காரன் ஒவ்வொரு காலையையும் அல்லது வண்டிகள் மாடுகள் வந்து தரிக்குமிடத்தையும் நன்றாக மட்டம்பண்ணுவித்து அங்குள்ள தண்ணீர் கான்கள் வழியாய் ஓடும்படி செய்வித்து, நிலம் கடினமாயும் மட்டமாயு மிருக்கத்தக்கதாய் அதற்குக் கல்லுப்பதிப்பித்து அல்லது சல்லிக்கல்லுப்போட்டு இறுக்குவித்து விடவேண்டும். அவன் அக்காலையை அல்லது தரிக்குமிடத்தை துப்புரவாயும் சுகத்துக்கேற்ற மாதிரியாயும் வைத்திருக்கும்படி செய்து, ஒவ்வொரு நாளும் நன்றாகச் சுத்தப்படுத்துவித்து எல்லாச் சாணியையும் அழுக்கையும் குடியிருககும் வீட்டிலுமிருந்து 50 யார் தூரத்திலுள்ள ஓர் இடத்தில் கொண்டுபோய்ப் போடப்படும்படி செய்யவேண்டும். மேற்சொல்லியபடி ஒவ்வொரு நாளும் துப்பரவுபண்ணுகிறதற்கு இடைஞ்சலாய் இராவண்ணம் எல்லாச் சாமான்கள், பொருட்கள், வஸ்துக்களையும் அக்காலையில் அல்லது தரிக்குமிடத்தில் வைத்திருககும்படியும் அவன் செய்யவேண்டும்.

63. லைசென்ஸ்காரன் ஒவ்வொரு குதிரைமாலையும் மாட்டுக் கொட்டிலையும் ஆடுமாடு தரிக்குமிடத்தையும் ஒவ்வொரு நாளும் நன்றாகத் துப்புரவுபண்ணுவித்து, துப்புரவாயும் சுகத்துக்கேற்ற மாதிரியாயும் வைத்திருக்கப்படும்படி செய்யவேண்டும். குடியிருக்கும் வீட்டிலுமிருந்து 50 யார் தூரத்திலுள்ள ஓரிடத்திற்கு சாணியும் அழுக்கும் அள்ளிக கொண்டுபோகப்படும்படியும் அவன் செய்யவேண்டும்.

64 ஒவ்வொரு காலையும் சங்கத்தின் உத்தியோகஸ்தர்களால் அல்லது சங்கத்தலைவரால் எழுத்துமூலமாக அதிகாரம் கொடுககப்பட்ட வேறெவராவும் நியாயமான எல்லா நேரங்களிலும் சோதிக்கப்படுவதற்கு ஏதுவாயிருக்கும் இந்த உபவிதிகளின்படி சங்கத்தலைவர் செய்வதற்கு அதிகாரமுடையவராயிருக்கும் எல்லா கட்டளைகளும் எழுத்துமூலம் கொடுக்கப்பட வேண்டும்.

F.—பொது.

65. ஓர் சௌக்கியாதாரசங்கப் பட்டணஎல்லைக்குள் எவரும் ஓர் அப்பச்சாலையை, சாப்பாட்டுக்கடையை, தேத்தண்ணீர் அல்லது கோப்பிககடையை அல்லது மாட்டுக் காலையை சௌக்கியாதாரசங்கத் தலைவரிடமிருந்து ஓர் வருஷாந்த லைசென்ஸ்பெறுமல் வைத்திருககப்படாது மேற்சொல்லிய விதானங்கள் எதையும் கைக்கொள்ளத் தவறும் எவருக்கும் அந்த லைசென்ஸ் கொடாமலவிட சங்கத்தலைவருக்கு இதனால் அதிகாரம் கொடுக்கப்படுகின்றது. லைசென்ஸ் கொடுத்த வருஷத்தின் மார்கழி (டிசெம்பர்) மாதம் 31 ந் தேதி மட்டும் அல்லது லைசென்ஸ் பத்திரம் அழிக்கப்படும்வரையும் ஒவ்வொரு லைசென்ஸ் பத்திரமும் பெலப்புடையதாயிருக்கும். அந்த லைசென்ஸ் அதிகாரமந்திரசபையோடு கூடிய தேசாதிபதியவர்களின் அனுமதியோடு சௌக்கியாதாரசங்கம் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கும் சலார்களுக்கும் உட்பட்டதாயிருக்கும்

66. மேற்சொலலிய விதானங்களை மீறினதினால் இரண்டுமுறை அல்லது அதிகம் தரங்களில் எக்கோட்டாராலேனும் எவரும் குற்றப்படுத்தப்பட்டிருந்தால், சௌககியாதார சங்கத்தலைவரால் இந்த அதிகாரத்தின் கீழ் அந்த ஆளுக்குக் கொடுக்கப்பட்ட லைசென்ஸ்உத்தரவை அழிப்பது அப்படி இரண்டாம் அல்லது பிந்தியமுறை அபராதஸ்தாபனம் எழுதும் கோட்டாருக்கு நியாயமுறையாகும். அப்படி ஓர் கோட்டால் லைசென்ஸ் அழிக்கப்படும்போது தம் நற்கருத்தின்படி அந்த ஆளுக்கு புதிய லைசென்ஸ் கொடுக்க மறுப்பதற்கு சௌக்கியாதாரசங்கத் தலைவருக்குத் தத்துவமுண்டு. ஆயின் எந்தப் பிரசித்த கூட்டத்தாராலேனும் ஸ்தாபிககப்பட்ட அல்லத் அவர்கள் பொறுப்பிலுள்ள சந்தைகளிலிருக்கும் கடைகளுக்கு இந்த விதானங்கள் பொருந்தாதனவாம்.

G.—வண்ணான் துறைகள் (சீலைவெளுக்கும் இடங்கள்)

67. இந்த விதானங்களின் நோககத்துககாக சீலைவெளுப்பவன் என்பது கூலிக்கு சீலைகள் வெளுக்கும் தொழிலை நடத்திவரும் எவனும் எனப் பொருள்படும்.

8. சீலைவெளுக்கும் ஒவ்வொருவனும் சங்கத்தலைவரால் கேட்கப்படும்போது, ஊத்தைப்புடவை வைப்பதற்காக புறம்பான அறையொன்று வைத்திருக்க வேண்டும். அவ்வறை காற்று நன்றாய் உலாவத்தககதாய்க் கட்டப்பட்டு எப்பொழுதும் துப்புரவாய் வைத்திருக்கப்படுவதுமன்றி வருஷத்துக்கு இரண்டுமுறை வெள்ளை அடிக்கப்படவும் வேண்டும்.

69. சீலைவெளுப்பவன் ஆட்கள் வசிப்பதற்கு உபயோகிக்கப்படும் எந்த அறையிலும் ஊத்தைப்புடவை வைக்கப்படாது.

70. சௌககியாதார சங்கத்தலைவர் ஊர்ச்சுகம் தேர்ச்சியடைந்து நல் நிலையில் இருப்பதற்காக புறம்பான இடங்கள் தேவையென்று காணும்போது அப்படியான இடங்களை நியமிக்கவேண்டும். அறிவித்தற்பலகையால் அவ்விடங்கள் காண்பிக்கப்படும்.

71. சீலைவெளுப்பவன் ஒருவனுக்கு அல்லது அவன் குடும்பத்தில் அல்லது வீட்டிலுள்ள எவருக்கும் தொற்று நோய் அல்லது பரம்பும் நோய் எதுவும் உண்டுபடுமாகில் அவன் 24 மணித்தியாலத்திற்குள் அதைக்குறித்து சௌக்கியாதார பரிசோதகர் மூலம் அல்லது பொலீஸ் தலைமைக்காரன்மூலம் சங்கத்தலைவருக்கு அறிவிக்கவேண்டும்

72. சீலைவெளுப்பவன் ஒருவனுக்கு அல்லது அவன் குடும்பத்தில் அல்லது வீட்டிலுள்ள எவருக்கும் தொற்று நோய் அல்லது பரம்பும் நோய் எதுவும் உண்டுபடுமாகில, சீலைவெளுக்குமிடத்தில் எல்லாவேலையும் உடனே நிறுத்தப்பட வேண்டும், மேலும் சங்கத்தலைவரின் விசேஷ உத்தரவோடு மாத்திரமன்றி, சீலைவெளுக்கு மிடத்துக்கு அல்லது அங்கிருந்து வெளியே அந்நோய் துவங்கின பிற்பாடும் அது நடக்கும்போதும் புடவைகள் ஒன்றும் கொண்டுபோகப்படாது.

73. சௌக்கியாதார சங்கத்தலைவரின் அல்லது சௌக்கியாதார முதல் உத்தியோகஸ்தரின் உத்தரவின்றி, வீட்டிலுள்ள ஒருவர் தொற்றுநோய் ஒன்றால் பீடிக்கப்பட்டிருக்கிறார் என்று எண்ண இடமிருக்கும் எந்த வீட்டிலுமிருந்து சீலை வெளுப்பவன் எவனும் ஊத்தை உடுப்புக் கொண்டுபோகப்படாது.

74. சீலைவெளுப்பவன் ஒவ்வொருவனும் சௌக்கியாதார சங்கத்தலைவரால் அல்லது சௌக்கியாதார முதல் உத்தியோகஸ்தரால் அல்லது அவருடைய துணைவரால் கேட்கப்படும்போது, தான் புடவைவெளுக்கும் ஆட்களின் பெயர்களைக் காட்டும் ஓர் இடாப்புக் கொடுக்கவேண்டும்.

[9 E (2) (f) ம் பிரிவு.]

அருவருப்பு உண்டாக்கக்கூடிய தொழில்கள்.

1. இந்த விதானங்களின் நோக்கத்திற்காக விக்கினமானவும் அருவருப்பு உண்டாக்கக்கூடியனவுமான தொழில்கள் பின்வருவன எவற்றையும் கருதி உளப்படுத்தும் :—

2. செயற்கையான பசளை சேகரித்தல் அல்லது செய்தல் இரத்தம் அல்லது கழிவுமாமிசம் அவித்தல், இரத்தத்தை அல்லது கழிவு மாமிசத்தை உலர்த்தல், தோல் பதனிடுதல், கொழுப்புருக்குதல், கொழுப்பு வடித்தல், சவுக்காரம் செய்தல் தென்னமட்டை ஊறவைத்தல் தும்புக்கு சாயம் தோய்த்தல், இயந்திர உதவியால் தேங்காய்நெய் வடித்தல், தும்பு சேகரித்தல, அல்லது ஆக்குதல், தோல், எலும்பு செயற்கையான பசளை, அல்லது செயற்கையான பசளை உண்டாக்குவதற்கு வேண்டிய பொருட்கள் சேகரித்தல், 5 அந்தர் நிறைக்கு மேற்பட்ட கருவாடு சேகரித்துவைத்தல், செங்கல்லும் ஓடுகளும் செய்தல், சுண்ணாம்பு நீற்றுதல், சோடா லெமனட் செய்தல், மின்னரம சுத்தப்படுத்தல் அல்லது சேகரித்து வைத்தல்.

3. சௌக்கியாதார சங்கத்தின் எல்லைகட்குள்ளேயிருக்கும் எந்த காணியின் அல்லது வளவின் சொந்தக்காரனாகுதல் ஆட்சிக்காரனாகுதல் வேறு எவருமாகுதல் அவ்வளவில் அல்லது நிலத்தில் விக்கினமான அல்லது அருவருப்பு உண்டாக்கக்கூடிய எந்த வியாபாரம் அல்லது கைத்தொழிலையும் சௌக்கியாதார சங்கத்தலைவரின் லைசென்ஸ் இன்றி நடத்தப்படாது மேலும் இந்த விதானங்கள் எதையும் கைக்கொள்ளத் தவறும் எவருக்கும் அவ்வித லைசென்ஸ் கொடாது விடுவதற்கு சௌக்கியாதாரசங்கத் தலைவருக்கு அதிகாரமுண்டு. அதிகாரமந்திரசபையோடு கூடிய தேசாதிபதி யவர்களின் அனுமதிப்படி காலத்துக்குக் காலம் சௌக்கியாதார சங்கம் விதிக்கும் சலார்கள் அவ்வித லைசென்ஸ் பத்திரங்கள் பெறுவதற்காகக் கட்டப்படவேண்டும்.

4. எவன் ஒருவனாவது இந்த விதானம் எதையும் மீறியதற்காக இரண்டு முறை அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகளில் எக்கோட்டாராலும் குற்றப்படுத்தப்பட்டிருந்தால், அந்த இரண்டாம் அல்லது பிந்தியமுறை அபராதஸ்தாபனம் எழுதும் கோட்டாருக்கு இவ்வதிகாரத்தின் கீழ் சௌக்கியாதார சங்கத்தலைவரால் அவனுக்குக் கொடுக்கப்பட்ட லைசென்சை அழித்துவிடுவது நியாயமுறையாகும். ஒரு கோட்டால் ஓர் லைசென்ஸ் அவ்வண்ணம் அழிக்கப்பட்டதின் பின் அந்த ஆளுக்கு தம் நமகருத்தின்படி ஓர் புது லைசென்ஸ் கொடுப்பதற்கு மறுக்க சௌக்கியாதார சங்கத்தலைவருக்கு அதிகாரம் உண்டு.

5. லைசென்ஸ்காரன் மேற்சொலிய வியாபாரங்கள் முயற்சிகள், கைத்தொழில்கள் எவைகளையும் நடத்துவதற்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் அவைகளிலிருந்து துர்க்கந்தம் புறப்படாமலும் அசங்கியம் உண்டாகாமலும் தடுக்கத் தக்கதாக சேர்த்து வைக்கப்படும்படி செய்யவேண்டும். துர்க்கந்தம் புறப்படக்கூடியனவும் அருவருப்பு உண்டாக்கக் கூடியனவுமான சாமான்களை, யாதும் ஓர் போக்குவரவான வழியால் கொண்டுபோக வேண்டியதாயிருந்தால் அவைகளை உறிஞ்சக்கூடாத, மூடப்பட்ட கொள்கலங்களில வீட்டு, அல்லது யாதும் அசங்கியம் உண்டாகாதவண்ணம், கொண்டு போகப்படும்படியும் அவன்செய்ய வேண்டும்.

6. லைசென்ஸ்காரன் கைத்தொழில்வேலை எதுவும் நடக்கும்போது வெளியேவரும் அருவருப்பு உண்டாகக்கூடிய வாயு அல்லது ஆவி மோசம் வருவிக்கக்கூடாததாயிருக்கும்படி செய்வதற்காக காரியப்படக்கூடிய எத்தனங்கள் செய்வித்துக்கொள்ள வேண்டும். அவ்வித வாயு அல்லது ஆவி ஒன்றில் வெளியில்போய்ச் செறிந்து கெடுதி அல்லது சேதம் விளைவிக்காதபடி வேண்டிய உயரத்திலும் தக்கமாதிரியாகவும் வெளிகாற்றிலே தள்ளப்படும்படி அல்லது நேரே நெருப்புக்கூடாய் அல்லது ஒரு கனிகரணி யந்திரத்துக்கூடாகப் போகும்படி அவன்செய்ய வேண்டும். மேலும் எல்லா வளவுகளிலும் வேண்டிய கான்கள் இருக்கும்படியும் அக்கான்கள் மிகநன்றாக வைத்திருக்கப் படும்படியும். தினமும் கழுவப்படும்படியும் அவன் செய்யவேண்டும்.

7. லைசென்ஸ்காரன் தளத்தை உடைவுகள், பழுதுகள் இல்லாமல் வைத்திருக்கும்படியும் தினமும் சுத்தப்படுத்தப்படும்படியும் செய்யவேண்டும் சங்கத்தலைவர் கட்டளைசெய்திருந்தால் சுவறக்கூடாதவஸ்துவினால் அத்தளங்கள் கட்டப்பட வேண்டும்.

8 லைசென்ஸ்காரன் சுவர்களில் அழுக்குச் சவறுவண்ணம் அச்சுவர்களை நல்ல நிலையில் வைத்திருக்கப்படும்படியும், அவைகள் ஜூன் மாசத்திலும் டிசெம்பர் மாசத்திலுமாக வருஷத்துக்கு இருமுறையும் சௌக்கியாதார சங்கத் தலைவரால் அல்லது சௌக்கியாதார முதல் உத்தியோகஸ்தரால் கட்டளை பண்ணப்பட்டால வேறு காலங்களிலும் வெள்ளை யடிப்பிக்கப்படும்படியும் செய்யவேண்டும்.

9 லைசென்ஸ்காரன் ஆயுதங்களும் பாத்திரங்களும் உட்பட எல்லாக் கருவிகளும் துப்புரவாக வைத்திருக்கப்படும்படியும், கூடுமானால் தினமும் சுத்தம்பண்ணப்படும்படியும் செய்யவேண்டும்.

10. லைசென்ஸ்காரன் கழிவு, குப்பை, சீவுத்துண்டுகள், சிதைவுகள், இடைப்பொருட்கள், வளவிலே வேறு வியாபார முயற்சிக்கு உடனே உபயோகிக்கப்படுவதற் கென்றால் ஒழிய, தினமும் வளவிலே யிருந்து மூடப்பட்ட பாத்திரங்களில் கொண்டுபோகப்படும்படி செய்யவேண்டும்.

11. லைசென்ஸ்காரன் தோல் அல்லது வேறு பொருட்கள் கழுவுவதற்கு அல்லது நனையவைப்பதற்கு உபயோகிக்கப்படும் வக்குகளிலிருந்து துர்க்கந்தம் எழும்பாவண்ணம் அவசியமென்று காணப்படும்போதெல்லாம் அவைகளிலுள்ள அழுக்கு நீரை வெளியே ஊற்றுவித்து அவைகளைத் துப்புரவு பண்ணுவிக்க வேண்டும்.

12 அருவருப்பு உண்டாக்கக்கூடிய முயற்சியை அல்லது கைத்தொழிலை நடத்தும், அல்லது அப்படியான முயற்சி அல்லது கைத்தொழில் செய்யப்படும் நிலத்தை அல்லது வளவை உடைய அல்லது ஆட்சிசெய்யும் எவரும் யாதோர் அழுக்கான, துர்நாற்றமுள்ள, அல்லது அருவருப்பான நீரை அல்லது வேறு ஜலத்தை அதற்குள் செலுத்துவதால் அல்லது ஓடவிடுவதால், அல்லது அங்கே யாதோர் அருவருப்பான பதார்த்தத்தை ஊற்றுவதால் அல்லது கழுவிவிடுவதால், எந்த ஆற்றையாவது, நீரோட்டத்தையாவது, வெட்டாற்றையாவது, வாய்க்காலையாவது, கிணற்றையாவது, குளத்தையாவது, தடாகத்தையாவது, அசுசிப்படுத்தவேனும், வேறெந்தவிதமாயாவது அவ்வாற்றை, நீரோட்டத்தை, வெட்டாற்றை, வாய்க்காலை, கிணற்றை, குளத்தை அல்லது தடாகத்தை அழுக்குப்படுத்தவேனும் படாது.

13. மேற்சொல்லிய தொழில்கள் நடத்தப்படும் இடங்களை நியாயமான எல்லா வேளைகளிலும் சோதிப்பது சௌக்கியாதார சங்கத்தலைவருக்கும், சங்கத்தலைவரால் முறைப்படி அதிகாரம் கொடுக்கப்பட்ட எவருக்கும் நியாயமுறையாகும்.

14. செங்கல்லு அல்லது ஓடுகள் செய்வதற்கு அல்லது கட்டடவேலைக்கு அல்லது வேறெந்த நோக்கத்துக்காவது களிமண், கல்லு, கிறவல், கபுக், அல்லது வேறு பொருட்கள் கிண்டி எடுக்கப்படும் நிலத்தை உடையோன் அல்லது ஆட்சி செய்வோன் அங்கே வேண்டிய கான்கள் கட்டுவித்து வெட்டப்பட்ட குழிகளிலும் அகழ்களிலும் தண்ணீர் தங்கி நில்லாதபடி அவைகளை மூடுவிக்க வேண்டும்.

15. சௌக்கியாதார சங்கத்தால் அநுமதிகொடுக்கப்பட்ட இடங்களில் ஒழிய வேறு இடங்களில் ஒருவரும் காயப்போடுவதற்காக மீன் பரப்பி அல்லது வெளியாக வைக்கப்படாது.

### சோடாலெமனட் செய்தல்.

16. (1) சௌக்கியாதார சங்கத்தின் எல்லைக்குள், சங்கத்தலைவருக்கு ஒரு மாதத்துக்கு முன் எழுத்து மூலமாக அறிவியாமல் ஒருவரும் விற்பனவுக்காக சோடாலெமனட் முதலிய பானங்கள் செய்யத் துவங்கப்படாது.

(2) (a) சோடாலெமனட் முதலியவை செய்யுமிடம் எந்தக் காலையிலிருந்தும், குதிரைமாவிலிருந்தும் அல்லது மிருகங்களை இராவில் அல்லது பகலில் விடும் வேறு கட்டடத்திலிருந்தும் அல்வது எந்தக் கக்கூசிலிருந்தும், கக்கூசக் கிடங்கிலிருந்தும் 150 அடிக்கு மேற்பட்ட தூரத்தில் உள்ளதாயும்,

(b) சோடாலெமனட் முதலியவை செய்யுமிடங்கள் யாவும் நல்ல வெளிச்சம்உள்ளனவாயும், நன்றாய்க் காற்று வரக்கூடியனவாகவும், மச்சுப்பலகை போடப்பட்டனவாகவும், சீமெந்து, நிலம் உள்ளவைவாகவும் அழுக்குகளைக் கழுவித் தள்ளக்கூடியமாதிரியாகக் கட்டப்பட்ட கான்கள் உள்ளனவாகவும், அழுக்கும் தூசியும் இல்லாமல் துப்புரவாக வைக்கப்பட்ட வைகளாகவும்,

(c) அப்பானங்கள் செய்வதில் பாவிக்கப்படும் தண்ணீர் சங்கத்தலைவரின் அனுமதிபெற்றதும் அசுசிப்படாதபடி போதியளவு பாது காக்கப்பட்டதுமான இடத்திலிருந்து கொண்டுவரப்பட்டதாயும், சோடாலெமனட்முதலியவைசெய்கிற இடத்துக்குக்கொண்டுபோகும் வழியில் தண்ணீர் அழுக்குப்படாதபடிக்கு ஏற்றவழிவகைகள் உபயோகித்துக்கொண்டு போகப்பட்டவைகளாயும், சோடாலெமனட் முதலியவை செய்கிறதற்குப் பாவிக்கப்படும் யந்திரங்களோடு சேர்த்து தூசி போகாதபடி இறுக்கமான மூடிகளுள்ள நன்றாய்க் கட்டப்பட்ட வக்குகளில் அல்லது தொட்டிகளில் விடப்பட்டதாயும், இருந்தாலன்றி, ஒருவரும் சோடாலெமனட் முதலியவை செய்யப்படாது,

17. லைசென்ஸ்காரன் சோடாலெமனட் முதலியவை செய்கிறதற்குப் பாவிக்கப்படும் தண்ணீர் முழுவதும் யந்திரத்தோடு சேர்க்கப்பட்ட பூவேல் வடிகலத்துக்கு அல்லது சங்கத்தலைவரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு வடிகலத்துக்கு ஊடாகச் செல்லும்படி செய்ய வேண்டும்; ஆயின் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பொதுஇடத்திலிருந்து கொண்டுவரப்படும் தண்ணீரின் விஷயத்தில் இவ்விதானத்தில் சொல்லியபடி செய்யப்பட வேண்டியதில்லை என்று விலக்குவதற்கு சங்கத்தலைவருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

18. லைசென்ஸ்காரன் சோடா லெமனட் முதலியவை செய்வதில் பாவிக்கப்படும் எல்லாப்போத்தல்களும் வடிகட்டி எடுத்த தண்ணீரால் கழுவப்பட்டு மெத்தத் துப்புரவாய் வைத்திருக்கப்படும்படி செய்யவேண்டும்.

19 லைசென்ஸ்காரன் சோடா லெமனட் முதலிய பானங்கள் விட்டிருக்கும் ஒவ்வொரு போத்தலிலும் என்ன பானம் அதில் உண்டு என்றும், செய்த இடம் இன்னதென்றும் செய்கிற சாலையைச் சொந்தமாகவுடைய ஆளின் அல்லது கூட்டத்தின் பெயர் என்னவென்றும், யந்திரசாலைக்கு சங்கத்தலைவரால் கொடுக்கப்பட்ட இலக்கம் என்னவென்றும் தெரிவிக்கக்கூடியதாய் ஒரு லேபல் ஒட்டியிருக்கும்படி செய்யவேண்டும்.

20. லைசென்ஸ்காரன் பன்னிரண்டு வயதுக்குட்பட்ட எவனையும் அல்லது கரப்பன் வியாதியுள்ள அல்லது தொற்று வியாதியுள்ள எவனையும் சோடா லெமனட் முதலியவை செய்கிற சாலையில் வேலைக்கு வைக்கப்படாது.

21. லைசென்ஸ்காரன் வாயுவிட்டடைக்கும் வேலைசெய்யும் யாவரும் முகத்துக்கும் கழுத்துக்கும் மெல்லிய கம்பி வலையும் தோல்மேசுகளும் போட்டுக்கொள்ளும்படி செய்யவேண்டும்.

22 லைசென்ஸ்காரன் இனிப்புச்சாறுகள் ஈலையான்போகக்கூடாத புறம்பான அறைக்குள் செய்யப்படும்படியும், சோடா லெமனட் முதலிய பானங்கள் செய்வதற்குப் பாவிக்கப்படும் மருந்துச்சாமான்களும் மற்றும் சாமான்களும் திறமானவைகளாயிருக்கும்படியும், அப்பானங்கள் செய்வதற்குப் பாவிக்கப்படும் பாத்திரங்களும் யந்திரங்களும் மெத்தத் துப்புரவாய் வைத்திருக்கப்படும்படியும் செய்யவேண்டும்.

23. சோடா லெமனட் முதலியவை செய்யப்படும் சாலையின் எப்பாகத்தையும் ஒருவரும் குடியிருக்கும் இடமாகப் பாவிக்கப்படாது.

[9 E (2) (i) ம் பிரிவு.]

### பாழ்நிலங்களையும் பொதுநிலங்களையும் பத்திரப்படுத்தல்.

பாழ்நிலங்கள் அல்லது பொதுநிலங்களிலிருந்து எவராவது சங்கத்தலைவரின் உத்தரவின்றி மாட்டுச்சாணி, மணல், மண் கல்லு, அல்லது வளரும் பூண்டுகள், அல்லது மரங்கள் கொண்டுபோகவேனும், எவ்விதத்திலும் அந்த நிலங்களின் மேற்பரப்பை மாற்றவேனும் படாது.

[பிரிவு 9 E (2) (j) ம் பிரிவு].

### எல்லைகள்போட்டுப் பத்திரப்படுத்தல்.

பட்டணத்திற்குள்உள்ள எந்த வீட்டின் தோட்டத்தின், கட்டடத்தின் அல்லது காணியின் சொந்தக்காரனும் அல்லது ஆட்சிக்காரனும் அவ்வீட்டுக்கு தோட்டத்துக்கு, கட்டடத்துக்கு, அல்லது காணிக்கு அதைச்சுற்றி நிலமட்டத்திலிருந்து மூன்றடிக்குக்குறையாமலும் ஆறடிக்குக் கூடாமலும் உயரமுள்ள ஓர் சுவர் கட்டி அல்லது நல்ல வேலிபோட்டு வைத்திருக்க வேண்டும்.

[9 E (2) (*k*) ம் பிரிவு.]

பொதுவான குளிக்கும் இடங்கள்.

1. காலத்துக்குக்காலம் சங்கத்தின் நற்கருத்தின்படி பொதுவான குளிக்கும் இடங்கள் வேறாக்கிவைக்க சங்கத்துக்குத் தத்துவமுண்டு. மேலும் அவ்விடங்களை எந்நேரத்தில் பாவிக்கவேண்டும் என்று தீர்க்கவும் தத்துவமுண்டு.

2 எவராவது சங்கத்தால் நியமிக்கப்பட்ட இடங்களில் அன்றி வேறு இடங்களில் குளிக்கப்படாது. மேலும் சங்கத்தால் நியமித்திருக்கும் இடங்களில், நியமிக்கப்பட்ட நேரத்தில்தான் குளிக்கவேண்டும்.

3. குளிப்பதற்கென்று வேறாய் நியமித்திருக்கும் பொதுவான இடங்களில் எவராவது, குதிரைகள், மாடு, சீலை, பாய் அல்லது வேறு சாமான்களை கழுவ அல்லது கழுவுவிக்கப்படாது.

4. பொதுவான குளிக்கும் இடங்களில் தொற்றுவியாதியால் வருத்தப்படுகிற எவராவது குளிக்கவும் புடவை துவைக்கவும் வேறேதுஞ் சாமான்கள் கழுவவும்படாது.

[9 E (2) (*m*) ம் பிரிவு.]

நாய்கள்.

அலைந்துதிரிகிற எல்லா நாய்களையும் பிடிக்கும்படிசெய்து, வியாதியுள்ளதென்று கண்ட அல்லது வியாதியுண்டென்று சந்தேகமிருக்கும் நாயைக் கொன்றுபோடும்படி கட்டளைபண்ணி அல்லது சங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட ஒரு வீட்டில் அடைத்து வைக்கப்படும்படியும், சௌக்கியாதாரசங்கம் செலவழித்த தொகையை வாங்குவதற்காக அடைத்து வைத்திருக்கும் முதல் நாளுக்கு 40 சதமும் பிந்திய ஒவ்வொரு நாளுக்கும் 15 சதமுமாக, நாயின் சொந்தக்காரன் அது தனதென்று சொல்லி அதைக் கொண்டுபோக விரும்பினால், அவனிடமிருந்து அறவிடும்படியும் எழுத்து மூலமாக அதிகாரம் கொடுப்பது சங்கத்தலைவருக்கு நியாயமுறையாகும். அப்படியாக அடைக்கப்பட்ட நாய்களை, மூன்று நாளைக்குள் உடையவர்கள் அந்நாய்கள் தமதென்று வந்து கேட்காவிட்டால், கொன்றுபோடும்படி சங்கத்தலைவர் செய்யவேண்டும்.

[9 E (2) (*c*) ம் பிரிவு.]

வீடுகளும் குடில்களும்.

1. 21 நாளைக்கு முன் அறிவித்தல் சங்கத்தலைவருக்கு இதன் பின்வருமாறு கொடுத்தல்லாமல் எவராவது சங்கத்துக்குச் சேர்ந்த எல்லைகளுக்குள் வசிக்கும் பொருட்டு வீடு அல்லது குடில் கட்டப்படாது.

(*a*) மனுஷர் குடியிருப்பதற்கான ஒவ்வொரு வீடாவது, குடிலாவது, அறையாவது சதுரஅளவில் 120 அடிக்கும் உயரத்தில் 10 அடிக்கும் குறையாமலும் நிலமட்டத்திலிருந்து குறைந்த அளவில் 6 அடி உயரமுள்ள தாழ்வாரங்கள் உடையதாயு மிருத்தல்வேண்டும்.

(*b*) ஆட்கள் குடியிருக்கும் ஒவ்வொரு அறைக்கும் நீளத்தில் 6 அடிக்கும் அகலத்தில் 3 அடிக்கும் குறையாத ஒரு கதவாகுதல் இருத்தல் வேண்டும்; நீளத்தில் 3 அடிக்கும் அகலத்தில் 2 அடிக்கும் குறையாத ஒரு சன்னல் ஆகுதல் இருத்தல் வேண்டும்.

(*c*) வீட்டுத் தளம் பூமியினின்று ஒரு அடிக்கு மேல் இருக்கவேண்டும். மேலும் சங்கத்தலைவர் இடத்துக்குத்தக்கதாக இன்னும் கூடிய உயரத்துக்கு உயர்த்த வேண்டுமென்று கேட்க அதிகாரமுடையவரா யிருப்பர்.

(*d*) இந்த உபவிதியின் ஏற்பாடுகளுக்கு மாறாக ஒரு வீடு அல்லது குடில் கட்டப்பட்டிருந்து அதை மாற்றும்படி அல்லது இடித்துப்போடும்படி எழுத்துமூலம் அறிவித்தல் கொடுக்கப்பட்டதன்மேல் ஒரு மாசத்துக்குள் சொந்தக்காரன் அப்படிச்செய்யத் தவறினால் அல்லது அசட்டைபண்ணினால் அதைச் சொந்தக்காரனுடைய செலவில் இடிப்பித்துப்போடுவது சங்கத்தலைவருக்கு நியாயமுறையாகும்.

2. பின்வரும் மாதிரியன்றி எந்த சௌக்கியாதாரசங்க எல்லைகளுக்குள்ளும் குடில் அல்லது வீடு எதையும் கட்டுவதாவது, திருப்பிக்கட்டுவதாவது, அல்லது அவைகளோடு இன்னும் கட்டடங்களைக் கூட்டிக்கட்டுவதாவது எவருக்கும் நியாயமுறையாகாது. கட்டப்படும் அல்லது திருப்பிக்கட்டப்படும் எக்குடிலையாவது வீட்டையாவது சுற்றியும், அல்லது ஒரு குடிலோடு அல்லது வீட்டோடு சேர்த்து இன்னும் கட்டடம் ஏதும் கட்டப்பட்டால் அக்கட்டடத்தைச் சுற்றியும் பின் விவரிக்கப்படும் வெளி விடப்படவேண்டும். அந்தக் கட்டடத்தின் சுவர்களின் எப்பாகமாவது அதன் தாழ்வாரங்களில் 2 அடி 6 அங்குலத்துக்கு மேற்பட்ட பாகமாவது அவ்வெளிக்குள் வரப்படாது.

(1) ஒரு றோட்டுக்கு அல்லது தெருவுக்கு பக்கத்தில் அந்த றோட்டு அல்லது தெருவின் நடுவிலிருந்து 25 அடி தூரம்.

(2) பின்பக்கத்தில் ஓர் குசினி, குளிக்குமிடம் அல்லது கக்கூசு ஒழிந்த வேறு குடிசை அல்லது வீடுவரைக்கும் அவ் அவ்வெளியின் தூரம் 50 அடியாய் இருத்தல் வேண்டும். குறிக்கப்பட்ட அவ்வெளியில் அரைவாசியாகுதல், கட்டப்படும், திருப்பிக்கட்டப்படும் அல்லது கூட்டிக்கட்டப்படும் வீடு இருக்கும் காணியின் சொந்தக்காரனுக்குரிய காணியா யிருத்தல் வேண்டும்.

(3) பக்கமாக அதிசமீபத்திலுள்ள கட்டடம் வரைக்கும் அவ்வெளியின் தூரம் 15 அடியாயிருத்தல் வேண்டும். குறிக்கப்பட்ட அவ்வெளியில் அரைவாசியாகுதல் கட்டப்படும், திருப்பிக்கட்டப்படும் அல்லது கூட்டிக்கட்டப்படும் வீடு இருக்கும் காணியின் சொந்தக்காரனுக்குரிய காணியாயிருத்தல் வேண்டும்

ஆயின் எவ்விசேஷ காரியத்தின் விஷயத்திலும் சங்கத்தலைவர் தம் நற்கருத்தின்படி இவ்விதானத்தை வலியுறுத்தாது ஈவுகாட்டலாம், ஆனால் பின்வரும் காரியங்களில் அவர் திருப்திப்பட்டுக்கொண்டாலன்றி அவர் அப்படிச்செய்தல் ஆகாது.—(1) கட்டப்படவிருக்கும், திருப்பிக் கட்டப்படவிருக்கும் அல்லது கூட்டிக் கட்டப்படவிருக்கும் வீட்டின் அல்லது குடிலின் அல்லது ஒரு குடியிருக்கும் இடமாக உபயோகிக்க எண்ணியிருக்கும் அயலிலுள்ள வேறோர் வீட்டின் அல்லது குடிலின் சௌக்கியாதார நிலைக்கு அல்லது அதன் சீருக்கு அதனால் யாதும் குறைவுண்டாகாதிருத்தல் வேண்டும்.

(2) விதானத்தை அவ்வண்ணம் வலியுறுத்தாது ஈவுகாட்டினதினால் எந்த றோட்டையாவது தெருவையாவது இனிமேல் ஸ்தாபித்தல் அகலுவித்தல் அல்லது பெருப்பித்தல் ஆவது அல்லது அந்த றோட்டை அல்லது தெருவைப் பாவிக்கும் சனங்களின் வசதியாவது இடையூறுபடாதிருத்தல் வேண்டும். மேலும், றோட்டில் அல்லது தெருவிலிருந்து அதிக தூரத்திலுள்ள வீட்டின் பக்கத்தில் ஒரு குசினியை, குளிக்குமிடத்தை அல்லது கக்கூசை காற்று உலாவக்கூடிய வெளியாக வைக்கப்பட்ட பாகத்திற் சங்கத்தலைவர் ஏற்றுக்கொள்ளும் இடத்தில் கட்டுவதற்கு சங்கத்தலைவர் இடங்கொடுக்கலாம் மேலும் கக்கூசுகளில் உள்ள அழுக்குக் கொண்டுபோவதற்காக ஒரு ஒழுங்கை இருக்குமாகில் அல்லது சங்கத்தாரால் அப்படியான ஒழுங்கையொன்று திறக்க எண்ணி இருக்கும்போது அக்கக்கூசு அவ்வொழுங்கைக்கு அல்லது திறக்க எண்ணியிருக்கும் ஒழுங்கைக்குப் பக்கமாயிருத்தல் வேண்டும்

[9 E (2) (r) ம் பிரிவு.]

காட்டுக்காய்ச்சல் வராது தடுத்தல்.

1. ஒவ்வொரு வீடு வளவிலும் குடியிருப்பவன் அல்லது சொந்தக்காரன் அவ்வளவில் அல்லது குடியிருக்கும் வீட்டுக்குச் சமீபமாயிருக்கும் பள்ளங்களை மூடி அல்லது கான் எடுத்துத் தண்ணீர் தங்காமல் செய்துகொள்ள வேண்டும். அதற்குள் தண்ணீர் தங்கக்கூடிய பாத்திரங்கள் ஏதுமிருந்தால் அவைகளை அப்புறப்படுத்த வேண்டும்

2 எந்தப் பட்டணத்திலாவது உள்ள காணிகளில் சங்கத்தலைவரால் எழுத்துமூலம் கொடுக்கப்பட்ட உத்தரவின்றி தண்ணீர் கட்டுப்படக் கூடியதாக எக்காணியிலாவது, குழிகள் தோண்டுவதாவது மண்கிண்டிஎடுப்பதாவது எவருக்கும் நியாயமுறையாகாது.

[9 E (s), (a), (b), (c) ம் பிரிவு.]

கக்கூசுகள்.

1. சங்கத்தலைவரால் எழுத்துமூலம் கொடுக்கப்பட்ட உத்தரவின்றி எந்தக்காணியிலாவது, வளவிலாவது, மலஞ் சலம் கழிக்க சொந்தககாரன் ஆவது குடியிருப்பவன் ஆவது எவ்விதமான கக்கூசுகளும் கட்ட அல்லது கட்டுவிக்கப் படாது.

2. (a) முதலாம் உபவிதியின்படி அவ்வுத்தரவு தரும்படி யாரும் விண்ணப்பம்பண்ணு மிடத்து சங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாதிரியான கிடங்கேயன்றி வேறுகிடங்கு கட்டப்படா தென்று கட்டளைபண்ணுவது சங்கத் தலைவருக்காவது சங்கத்துக்காவது தகுதியாகும்

(b) சங்கத்தலைவர் அல்லது சங்கம் அக்கிடங்கு கட்டப்பட வேண்டிய இடத்தை நியமித்து வேறெந்த இடத்திலும் எக்கிடங்கையும் கட்டுவதற்கு உத்தரவுகொடுக்க மறுக்கலாம்.

(c) சௌக்கியாதாரத்தின் பொருட்டு எக்கிடங்கும் கட்ட உத்தரவு கொடுக்கப்படாதென்று சங்கத்தலைவர் அல்லது சங்கம் எண்ணினால் எந்த வளவிலும் ஒரு அழுக்குக் கிடங்கை கட்டவிடாது மறுப்பது சங்கத்தலைவருக்கு அல்லது சங்கத்துக்குத் தகுதியாகும்.

3. (a) உத்தரவின்றி அல்லது சங்கத்தலைவரால் அல்லது சங்கத்தால் கொடுக்கப்பட்ட உத்தரவின் நிபந்தனைகளுக்கு எவ்விதத்திலும் மாறாக, ஓர் அழுக்குக் கிடங்கு, கட்டப்பட்டிருக்கும் ஓர் வளவின் சொந்தக்காரனை அல்லது ஆட்சிக் காரனை, சங்கத்தலைவரால் அல்லது சங்கத்தால் நியமிககப்படும் நியாயமான காலத்துக்குள் அவ்வழுக்குக் கிடங்கை இடித்து மூடிப்போடும்படி எழுத்துமூலம் கட்டளை பண்ணுவது சங்கத்துக்குத் தகுதியாகும்.

(b) (a) ம் உட்பிரிவின்படி கொடுக்கப்பட்ட ஓர் கட்டளையின் பிரகாரம் செய்யத்தவறும் எவரும் ஓர் அடாத்துச் செய்த குற்றமுடையவர் ஆவர்.

4. (a) சங்கம் நியமிக்கும் மாதிரியாயும், அளவுள்ளதாயும், நியமிக்கும் இடத்திலும், அதனோடு தொடுக்கப்பட்ட கான்கள் உள்ளதாயும், ஓர் மலசலக் கூடத்தை அல்லது கக்கூசை, கட்டளையிற் சொல்லப்பட்ட காலத்துக்குள் கட்டும் படி சொந்தக்காரனை அல்லது ஆட்சிக்காரனை சங்கம் எழுதது மூலம் கட்டளை பண்ணலாம்.

(b) (a) ம் உட்பிரிவின்படி கொடுக்கப்பட்ட ஓர் கட்டளையின் பிரகாரம் செய்யத்தவறும் எவரும் ஓர் அடாத்துச் செய்த குற்றமுடையவர் ஆவர்.

5 (a) ஒரு மலசலக்கூடம் அழுக்குக் கிடங்கு கக்கூசு அல்லது கக்கூசு அசங்கியம் வருவிக்கக் கூடுமென்று சங்கம் எண்ணுமாகில் அந்த மலசலக் கூடமேனும், அழுக்குக கிடங்கேனும் கக்கூசேனும் இருக்கும் வளவின் சொந்தக்காரனை அல்லது ஆட்சிக்காரனை, சங்கம் நியமிககும் காலத்துககுள்ளும் நியமிக்கும் மாதிரியாயும் அதைப்பழுது பார்க்கும்படி மாற்றும்படி, அல்லது திருப்பிக் கட்டும்படி அல்லது நியமிக்கப்படும் காலத்துக்குள் அதை இடித்து நிரப்பிவிடும்படி சங்கம் எழுத்துமூலம் கட்டளை பண்ணலாம்.

(b) (a) ம் உட்பிரிவின்படி கொடுக்கப்பட்ட ஓர் கட்டளையின் பிரகாரம் செய்யத்தவறும் எவரும் ஓர் அடாத்துச் செய்த குற்றமுடையவர் ஆவர்.

6. சொற்பொருள் விளக்கம், —— பின்வரும் உபவிதிகளின் நோக்கத்திற்காக. ——

"கிடங்குக் கக்கூசு" என்பது மண்பாவித்து ஒழுங்காக அழுக்குக் கொண்டுபோகப்படும் கக்கூசுகள் ஒழிந்த எல்லா விதமான மலசலக் கூடங்களையும் கக்கூசுகளையும் கருதி உளப்படுத்தும்.

"கு_க்கப்பட்ட இடப்பகுதி," என்பது சங்கம் காலத்துக்காலம் குறிக்கும் சங்கஎல்லைகளுக்குள் அடங்கிய இடப் பகுதியை அல்லது இடப்பகுதிகளைக் கருதி உளப்படுத்தும், அவ்விடப் பகுதி அவ்வெல்லைகளுக்குள் அடங்கிய முழு இடத்தையேனும் அதன் ஓர் பாகத்தையேனும் பாகங்களையேனும் அடக்கியிருக்கும்.

7. குறிக்கப்பட்ட எந்த இடப்பகுதிக்குள்ளும் எவ்விதமான அழுக்குக் கிடங்கையும் பாவிக்கப்படாதென்று சங்கம் நிர்ணயம்செய்து தடுப்பதுமன்றி எல்லாக் கக்கூசுகளும் மலசலக் கூடங்களும் வாளிவைத்துப் பாவிக்கும் கக்கூசுகளாகக் கட்டப்படும்படி கட்டளை பண்ணலாம்.

8. அப்படியான ஓர் நிர்ணயம் செய்யப்பட்டும், அவ்வழுக்குக் கிடங்கு அல்லது அழுக்குக் கிடங்குகள் இருக்கும் வீட்டின் கட்டத்தின் அல்லது காணியின் சொந்தக்காரனுக்கு அல்லது ஆட்சிக்காரனுக்கு அவ்வழுக்குக் கிடங்கை அல்லது அழுக்குக் கிடங்குகளை மூடிப்போடும்படியும் அவைகளுக்குப் பதிலாக வாளி வைத்துப் பாவிக்கும் கைக்கூசை அல்லது கக்கூசுகளை வைத்துக்கொள்ளும்படியும் எழுத்துமூலம் அறிவித்தல் கொடுக்கப்பட்டும் இருந்தால், அவ்வறித்தல் ஒப்புவிக் கப்பட்ட தேதியிலிருந்து சங்கம் தீர்மானிககும் காலத்துக்குள் அவ்வறிவித்தலிற் கேட்டுக்கொள்ளப்பட்ட பிரகாரம் செய்துமுடிப்பது அவ்வாளின் அல்லது ஆட்களின் கடமையாகும் அறிவித்தலிற் கேட்டுக்கொள்ளப்பட்ட பிரகாரம் செய்து முடிப்பது அவ்வாளின் அல்லது ஆட்களின் கடமையாகும் அறிவித்தலிற் குறிக்கப்பட்ட காலத்துக்குள் அல்லது, ஓர் காலம் குறிக்கபட்டி ராவிட்டால், ஓர் நியாயமான காலத்துக்குள் அவ்வறிவித்தலின்படி செய்யத்தவறும் எந்தச் சொந்தகாரனாவது ஆட்சிக்காரனாவது ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவன் ஆவன். ஆயின் இந்த உபவிதியின்படி ஓர் மலசலக்கூடம் அல்லது கக்கூசுகட்டுவதற்கு, சங்கத்தலைவர் மாதிரி, இடம், போக்குகைக் குறித்து வேண்டிய குறிப்புகள் சொல்லிக் கொடுப்பதற்காக, முதலாம் உபவிதியின்படி அவருடைய உத்தரவு பெற்றுக்கொள்ள வேண்டியதா யிருக்கும்.

9. ஓர் மலசலக் கூடம் அல்லது கக்கூசு கட்டப்பட்டிருக்கும் வளவின் சொந்தகாரனாவது ஆட்சிக்காரனாவது அம்மலசலக்கூடத்தை அல்லது கக்கூசை ஒழுங்காகப் பழுதுபார்த்தும், சுத்தமாகவும் சுகத்துக்கேற்ற நிலையிலும் வைத்துக்கொள்ளவும் அதனால் அசங்கியம் உண்டாகாதபடி பார்த்துக்கொள்ளவும் கடமைப்பட்டவன் ஆவன். அப்படிச் செய்யத்தவறும் எந்தச் சொந்தக்காரனாவது ஆட்சிக்காரனாவது ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவன் ஆவன்.

10. மலம் ஒழுங்காக எடுத்துக்கொண்டு போகப்படும்படி செய்வதற்காக, குறிக்கப்பட்ட எந்த இடப்பகுதியிலு முள்ள வீடுகளின், கட்டடங்களின் அல்லது காணிகளின் சொந்தக்காரரை அல்லது ஆட்சிக்காரரை தங்கள் வளவு களின் பின்பக்கத்தில் அல்லது அவ்வளவுகளுக் கூடாக, கக்கூசுகளிலிருந்து அழுக்குக் கொண்டுபோவதற்காக ஓர் ஒழுங் கை திறந்து அதைத் தங்கள் செலவில் வைத்துவரும்படி நிர்ணயம்செய்து கேட்பது சங்கத்துக்கு நியாயமுறையாகும்.

11. குறிக்கப்பட்ட எந்த இடப்பகுதிக்குள்ளும் எல்லாக் கக்கூசுகளிலிருந்தும் அழுக்கு சங்கத்தாரால் அகற்றுவிக் கப்படலாம். சங்கத்தலைவரால் எழுத்துமூலம் கொடுக்கப்பட்ட உத்தரவின்றி தானுயாவது, காரியகாரனைக் கொண்டா வது, வேலைக்காரனைக்கொண்டாவது, அவ்வேலையைச் செய்வதேனும் அவ்வேலையைச் செய்யும்படி ஒருவனை வைப்ப தேனும் எவருக்கும் நியாயமுறையாகாது. அவ்விடப்பகுதிக்குள் அப்படியான வேலைகள் யாவும் சங்கத்தாரால் தகுந்த பிரகாரம் செய்துமுடிக்கப்படக்கூடுமென்று சங்கத்தலைவர் எண்ணுவாராகில் தமது நற்கருத்தின்படி அவ்வுத்தரவைக் கொடுக்க மறுப்பதற்கு அவருக்கு அதிகாரமுண்டு.

12. குறிக்கப்பட்ட எந்த இடப்பகுதிக்குள்ளும் மலசலக் கூடங்கள் அல்லது கக்கூசுகள் கட்டப்பட்டுள்ள வளவு களின் எல்லாச் சொந்தக்காரரும் அல்லது ஆட்சிக்காரரும் கக்கூசுகளிலிருந்து மலம் கொண்டுபோவதற்காக சங்கம் நிய மிக்கும் சலாரை மாசம் மாசம் சங்கத்துக்குக் கொடுக்கவேண்டும். அச்சலார்கள் யாவும் அவ்வேலைசெய்யப்பட்டு வரும் மாசத்தின் 10 ந் தேதிக்கு முன் கொடுக்கப்பட வேண்டும்.

13. பகலிலே வேலைசெய்வதற்கு கூலியாட்கள் வேண்டிய எவரும் சங்கத்திடம் எழுத்துமூலம் கேட்டுக்கொள் ளாமல் அக்கூலியாட்கள் சங்கம் தீர்மானிக்கும் ஒழுங்குகளோடு கொடுக்கப்படுவார்கள். அக்கூலியாட்களின் வேலைக்கா கக் கொடுக்கப்படும் சலார்கள் அவ்வேலை செய்யப்பட்டு வரும் மாசத்தின் 10 ந் தேதிக்கு முன் கொடுக்கப்பட வேண்டும்.

14. ஓர் குறிக்கப்பட்ட பகுதிக்குப் புறம்பேயிருக்கும் எவரும் தனது மலசலக்கூடத்தில் அல்லது கக்கூசிலிருந்து அழுக்கு சங்கத்தால் அகற்றுவிக்கப்படவேண்டுமென்று அல்லது பகலில் வேலைசெய்வதற்கு ஒரு கூலியாள் தனக்குக் கொ டுக்கப்படவேண்டுமென்று விரும்பும் எவரும் அதைக்குறித்து சங்கத்தலைவருக்கு எழுத்துமூலம் அறிவிக்கவேண்டும். அதன்மேல் சங்கம் அழுக்கு அகற்றுவிக்கும் அவ்வேலையைப் பொறுப்பேற்று நடத்தலாம். அவ்வாளிடமிருந்து வரவேண் டிய சலார் அவ்வேலைசெய்யப்பட்டு வரும் மாசத்தின் 10 ந் தேதிக்கு முன் கொடுக்கப்பட வேண்டும்.

15. ஓர் புதிய அழுக்கு நீர்க்கிடங்கு கட்டப்படவேண்டும் அல்லது இப்போ உள்ள அழுக்குநீர்க் கிடங்கு மாற்றிக் கட்டப்படவேண்டும், பழுதுபார்க்கப்படவேண்டும், திருப்பிக் கட்டப்படவேண்டும் அல்லது தூர்க்கப்படவேண்டும் என்று சங்கம் எண்ணினால் எந்தக் காணியினேனும், வளவினேனும் சொந்தக்காரனையாவது ஆட்சிக்காரனையாவது ஓர் புது அழுக்கு நீர்க்கிடங்கு கட்டும்படி அல்லது இப்போவுள்ள ஓர் அழுக்கு நீர்க்கிடங்கை மாற்றிக் கட்டும்படி, பழுதுபார்க்கும் படி, திருப்பிக் கட்டும்படி அல்லது தூர்த்துப்போடும்படி சங்கத்தலைவரால் கையொப்பமிடப்பட்ட அறிவித்தல் மூலம் கேட்பதுமன்றி, அந்த அழுக்கு நீர்க்கிடங்கு இருக்க வேண்டிய இடம், மட்டம், அளவைக்குறித்தும், அதைக் கட்டுவதில் உபயோகிக்கப்படவேண்டிய பொருட்கள் என்னவென்றும், அவ்வேலை எவ்விதமாய் நடத்தப்பட வேண்டு மென்றும் அவ்வேலைகள் சம்பந்தமாக வேறு விவரங்களைக் குறித்தும் கட்டளை பண்ணலாம். அவ்வித அறிவித்தல் கிடைத் தபின் சங்கம் தீர்மானிக்கும் காலத்துக்குள் கேட்டுக்கொள்ளப்பட்டபடி செய்யத் தவறும் சொந்தக்காரனேனும் ஆட்சிக் காரனேனும் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவன் ஆவன்.

16. அழுக்குநீர் ஓடிக்கட்டுப்பட்டு நிற்கும் ஓர் கிடங்குஉள்ள எந்தக்காணியின் அல்லது வளவினதும் சொந்தக் காரனுக்கு அல்லது ஆட்சிக்காரனுக்கு அத்தண்ணீரை அத்தேதி தொடக்கம், அங்கேயிருந்து ஒவ்வொரு நாளும் கொண்டு போகும் பொறுப்பை சங்கம் ஏற்றுக்கொள்ளும் என்று அறிவிப்பது சங்கத்தலைவருக்கு நியாயமுறையாகும். அதின்பின் அவ்வழுக்குத் தண்ணீர் கொண்டுபோவதற்கு சங்கம் தீர்மானிக்கும் நியாயமான சலாரையிறுப்பதற்கு அச்சொந்தக்காரன் அல்லது ஆட்சிக்காரன் கடமைப்பட்டவன் ஆவன். அச்சலார் 12 ம் உபவிதியின்படி கக்கூசுகளிலிருந்து அழுக்கு அகற்று வதற்காகக் கொடுக்கப்படும் அச்சலாரைப்போலக் கொடுக்கப்பட்டு அறவிடப்பட வேண்டும்.

17. அழுக்கு நீர் ஓடிக்கட்டுப்பட்டு நிற்கும் ஓர் கிடங்குஉள்ள எந்தக்காணியின் அல்லது வளவினதும் சொந்தக்கார னுக்கு அல்லது ஆட்சிக்காரனுக்கு 16 ம் உபவிதியின் பிரகாரம் அறிவித்தல் கொடுக்கப்படாவிட்டால், அத்தண்ணீரினால் அசங்கியம் யாதும் உண்டாகாதபடி அதை ஒவ்வொரு நாளும் அகற்றுவிப்பதற்கு அச்சொந்தக்காரன் அல்லது ஆட்சிக் காரன் உத்தரவாதியாவான் மேலே கேட்டுக்கொள்ளப்பட்டபடி அத்தண்ணீரை அகற்றுவிக்கத்தவறும் எச்சொந்தக் காரனாவது ஆட்சிக்காரனாவது ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவன் ஆவன்.

## 9E (2) (t) ம் பிரிவு.—பொதுத் துப்புரவு.

1. சௌக்கியாதாரசங்க எல்லைக்குட்பட்ட எல்லாக் காணிகளின் சொந்தக்காரரும் ஆட்சிக்காரரும் அங்கேகுடியிருப் பவர்களும் அக்காணிகளைச் சுத்தமாகவும், கஞ்சல்குப்பைகளும் அருவருப்புள்ள அல்லது துர்க்கந்தமான பயிர்பூண்டுகளும், சுகத்துக்குத்தீங்கான அல்லது நஷ்டம் வருவிக்கக்கூடிய செடிகள் அல்லது பூண்டுகளும் இல்லாமலும் வைத்திருப்பது மன்றி, தண்ணீர் நிற்பதால் நுளம்புகள் உண்டாகக்கூடிய எல்லாப்பாத்திரங்களையும் அகற்றிவிடவும் வேண்டும்.

2. தனது வளவிலிருந்து சாம்பல், குப்பை கூளம் மற்றும் கஞ்சல் முதலியவற்றை சங்கத்தின் தெருக்கூட்டிக ளே எடுத்துக்கொண்டு போகவேண்டும் என்று விரும்பும் எவரும் சங்கம் குறிக்கும் மாதிரியான மூடிய நல்லதொட்டிக ளில், பெட்டிகளில் அல்லது அப்படியான வேறு பாத்திரங்களில், தன் வளவுக்குவெளியே ரோட்டோரமாக முறைமை யாகப் பிரசித்தப்படுத்தப்பட்ட அறிவித்தலினால், காலத்துக்குக் காலம் சங்கம் நியமிக்கும் நேரங்களில் ஒவ்வொரு நாளும் அவற்றைப் போட்டுவைப்பதுமன்றி, தெருக்கூட்டி அத்தொட்டிகள், பெட்டிகள் மற்றும் பாத்திரங்களிலுள்ள அழுக் கைக் கொட்டிக்கொண்டுபோனபின் அரைமணித்தியாளத்துக்குள் அத்தொட்டிகள், பெட்டிகள் மற்றும் பாத்திரங்களை ரோட்டிலிருந்து எடுத்துப்போடவும் வேண்டும். மேலே சொல்லிய பிரகாரமேயன்றி, சாம்பல், குப்பை கூளம், மற்றும் கஞ்சல் எதையும் ஒருவரும் எத்தெருவிலேனும், அழுக்குப்போடுவதற்காகப் பொதுவிடங்களில் வைக்கப்பட்டிருக்கும் குப்பைத் தகரங்களிலேயன்றி வேறு எப்பொதுவிடத்திலேனும் வைக்கப்படாது.

3. சௌக்கியாதாரசங்க எல்லைக்குட்பட்ட எவ்வீட்டின் கட்டடத்தின் அடைப்பின் அல்லது வளவின் சொந்தக் காரனுக்கும் அல்லது ஆட்சிக்காரனுக்கும, எழுத்துமூலம அறிவித்தல் கொடுத்து, அவ்வீட்டில், கட்டடத்தில், அடைப்பில் அல்லது வளவில்உள்ள அல்லது அதற்குச்சேர்ந்த மலசலக்கூடம், குழி, அல்லது கக்கூசு எதிலுமிருக்கும் அழுக்கை, மேற்சொல்லிய அறிவித்தலில் காட்டியிருக்கும் இடத்துக்கு அல்லது இடங்களுக்கும் அதிற்குறித்த காலத்துக்குள்ளும் கொண்டுபோகும்படி அல்லது கொண்டுபோகப்படச்செய்யும்படி அச்சொந்தக்காரனை அல்லது ஆட்சிக்காரனை எவ்வேளை யிலும் கேட்பது சங்கத்தலைவருக்கு நியாயமுறையாகும், அச்சொந்தக்காரன் அல்லது ஆட்சிக்காரன் அவ்வறிவித்தல் தனக்கு ஒப்புவிக்கப்பட்டு ஏழு நாளுக்குள் அவ்வறிவித்தலிற் கேட்டபடி செய்யத்தவறினால், சங்கத்தலைவர் செய்யப்பட வேண்டிய வேலையைச் செய்வித்துக்கொள்ளலாம். அந்த நோக்கத்துக்காக அவ்வீடு வெளிவீடு, கட்டடம், அடைப்பு, அல்லது வளவு எதற்குள்ளும் தேவையான வேலையாட்கள், கருவிகள் சாமான்களுடன் செல்ல அவருக்கு அதிகாரம் உண்டு, அப்படிச் செய்ததால் வந்த செலவு சொந்தக்காரனிடமிருந்து சங்கத்துக்கு வரவேண்டிய ஓர் கடனாக அறவிடக் கூடியதாயிருத்தல் வேண்டும்.

4. மாடு, குதிரை, செம்மறியாடு, வெள்ளாடு, அல்லது பன்றி எதுவும் ஓர் வீட்டில் அல்லது வளவிற் சாகுமாகில் அவ்வீட்டின் அல்லது வளவின் ஆட்சிக்காரன் அம்மிருகம் செத்து நாலு மணித்தியாலத்துக்குள், அல்லது மிருகம் இராவிலே செத்ததானால், விடிந்து நாலு மணித்தியாலத்துக்குள் ஒன்றில் பிணத்தைத் தன் செலவில் புதைப்பித்து விடவேண்டும், அல்லது சங்கத்தின் மேல்விசாரணைக்காரருக்கு அல்லது பரிசோதகருக்கு அதைப்பற்றி அறிவிக்கவேண்டும். பிந்திச் சொல்லிய பிரகாரம் செய்தால் சங்கத்தலைவர் தீர்மானிக்கும் வீதப்படி பிணத்தைக் கொண்டுபோவதில் அல்லது புதைப்பதில் வந்த செலவை அவன் சங்கத்துக்குக் கொடுக்கவேண்டும்.

5. காலை 7 மணிக்கும் சாயங்காலம் 5 மணிக்கும் இடையில் சங்க எல்லைக்குட்பட்ட எந்தக் கட்டடத்துக்குள்ளும் வளவுக்குள்ளும் சென்று, அக்கட்டடம் அல்லது வளவு சௌக்கியாதார நிலையில் வைத்திருக்கப்படுகிறதோவென்று அறிந்துகொள்வதற்காக வேண்டிய சகல காரியங்களையும் செய்வது எந்தப் பரிசோதகருக்கேனும் சங்கத்தலைவரால் எழுத்து மூலம் அதிகாரம் கொடுக்கப்பட்ட எவ்வுத்தியோகஸ்தருக்கேனும் நியாயமுறையாகும்.

6. ஊத்தை, பசளை, அழுக்கு, குப்பை, அல்லது எவ்விதமான கஞ்சலையும், அல்லது பழைய போத்தில்கள், தகரங்கள், சட்டிகள், சிரட்டைகள், அல்லது மழைத்தண்ணீர் தங்கி நிற்கக்கூடிய எவ்விதமான வேறு பாத்திரங்களையும் தெருவு, றோட்டு, அல்லது பொது இடம் எதிலும், அல்லது அத்தெருவின், றோட்டின் அல்லது பொது இடத்தின் சான்களில், அல்லது குடியிருக்கும் வீட்டுக்குக் கிட்டவிருக்கும் நிலத்தில் அல்லது வளவில் ஒருவரும் போடப்படாது, அந்த ஊத்தை, பசளை, அழுக்கு, குப்பை, அல்லது எவ்விதமான கஞ்சலும், பழைய போத்தில்களும் தகரங்களும், சட்டிகளும், சிரட்டைகளும், மழைத்தண்ணீர் நிற்கக்கூடிய எவ்விதமான பாத்திரங்களும் எரித்துப்போடப்பட வேண்டும் அல்லது சௌக்கியாதார சங்கத்துக்குச்சொந்த குப்பை கொட்டும் இடங்களுக்குக் கொண்டுபோகப்பட வேண்டும்.

7. களைப்புல்லுகள் அல்லது துர்க்கந்தமுள்ள பூண்டுகள் முளைத்தெழும்பியிருப்பதால் அல்லது பசளை ஊத்தை, அல்லது கஞ்சல் குவிந்திருப்பதால், அல்லது ஓடாமல் நிற்கும் தண்ணீரால், அல்லது மழைத்தண்ணீர் சேர்ந்து நிற்கக்கூடிய பாத்திரங்கள் கிட்டவிருப்பதால், குடியிருக்கும் வீடுகளுக்குக் கிட்டவிருக்கும் நிலம் அல்லது வளவு சுகவீனத்தை வருவிக்கக்கூடிய நிலையில் இருக்கிறதாக சங்கத்தலைவருக்குத் தோற்றினால், அந்த நிலத்தைச் சுகத்துக்கேற்ற நிலையில் வைப்பதற்குத் தேவையான வேலையை, அறிவித்தற் கடுதாசியில் காட்டிய ஓர் நியாயமான காலத்துக்குள் செய்யும்படி எழுத்துமூலமாக அறிவித்து அந்த நிலத்தின் சொந்தக்காரனை அல்லது ஆட்சிக்காரனை சங்கத்தலைவர் கட்டளை பண்ணலாம். குறிக்கப்பட்ட காலத்துக்குள் மேற்சொல்லிய வேலையை சொந்தக்காரன் அல்லது ஆட்சிக்காரன் செய்யத் தவறினால் அல்லது மேற்சொல்லிய பிரகாரம் சுகவீனத்தை வருவிக்கக்கூடிய நிலையில் அந்த நிலத்தைப் பிறகும் வரவிட்டால் சங்கத்தலைவர் தேவையான வேலையைச் செய்விக்கலாம், அப்படிச் செய்விக்கிறதற்காகத் தேவையான வேலையாட்களோடும் ஆயுதங்களோடும் சாமான்களோடும் அக்காணிக்குள் போவதற்கு சங்கத்தலைவருக்கு அதிகாரம்உண்டு. அப்படிச் செய்வித்ததினால் வந்த செலவு சொந்தக்காரன் சங்கத்துக்குக் கொடுக்கவேண்டிய கடனாக அறவிடப்படக்கூடியதாகும். ஆயின் வழக்குத் தொடருவது புத்தியென்று சங்கத்தலைவர் எண்ணினால் இந்த விதானங்களின்படி அவர் எந்த நேரத்திலும் வழக்குகள் தொடருவதை இந்த விதானத்தில் அடங்கிய ஒன்றும் தடைபண்ணமாட்டாது.

8. மனுஷர் குடியிருப்பதற்குப் பாவிக்கப்படும் ஒவ்வொரு வீட்டையும் குடிசையையும் பழுதுகள் இல்லாமல் வைத்திருப்பது அவ்வீட்டின் அல்லது குடிசையின் சொந்தக்காரனுடைய கடமையாகும். ஆனால் அக்கடமையை வாடகைகாரன் அல்லது ஆட்சிக்காரன் ஏற்றுக்கொண்டால் அக்கடமை, காரியத்துக்கேற்றபடி அவ்வாடகைக் காரனுக்கு அல்லது ஆட்சிக்காரனுக்கு உரியதாகும்.

9. சுகவீனத்துக்கு ஏதுவான நிலையிலும் வீட்டிலிருப்பவர்களின் அல்லது அயலாரின் சுகத்துக்குக் கேடானதாயும் இருக்கக்கூடியதாக அப்படியான வீடு அல்லது குடிசை எதுவும் பழுதடைந்துபோனதென்று சங்கத்தலைவருக்குத் தோற்றினால் அவ்வீட்டை அல்லது குடிசையை சுகத்துக்கேற்ற நிலையில் கொண்டுவருகிறதற்குச் செய்யவேண்டிய வேலையை அறிவித்தற் பத்திரத்தில் காட்டியிருக்கும் நியாயமான ஓர் காலத்துக்குள் செய்யும்படி அவ்வீட்டைப் பழுதகளில்லாமல் வைத்திருக்கவேண்டிய கடமையுள்ள சொந்தக்காரனுக்கு, வாடகைக்காரனுக்கு அல்லது ஆட்சிக்காரனுக்கு சங்கத்தலைவர் எழுத்துமூலமாக ஓர் கட்டளை கொடுப்பிக்கலாம். குறிக்கப்பட்ட காலத்துக்குள் செய்யவேண்டிய வேலையை அச்சொந்தக்காரன், வாடகைக்காரன் அல்லது ஆட்சிக்காரன் செய்யாமல் விட்டால், அவ்வேலையைச் சங்கத்தலைவர் செய்விக்கலாம். அப்படிச் சொய்வித்ததினால் வந்த செலவு அச்சொந்தக்காரனிடம், வாடகைகாரனிடம் அல்லது ஆட்சிக்காரனிடமிருந்து சங்கத்துக்கு வரவேண்டிய கடனாக அறவிடக் கூடியதாகும். ஆயின் இந்த விதானத்தின்படி சங்கத்தலைவர் செய்த செய்கையொன்றும் 8 ம் விதானத்தை மீறி நடந்ததற்கு சொந்தக்காரனுக்கு, வாடகைக்காரனுக்கு அல்லது ஆட்சிக்காரனுக்குத் தண்டனை விதிப்பதைத் தடுக்கமாட்டாது.

10. எப்பட்டண எல்லைகளுக்குள்ளும, ஓர் பொதுக் கக்கூசில் அல்லது அதற்கென்று புறம்பாக வைக்கப்பட்ட ஓர் கட்டடத்தில் அல்லது அடைப்பிலன்றி, வேறெங்கேப் பெருவீதியிலேனும், தெருவிலேனும் றோட்டிலேனும், பாதையிலேனும், பொது இடத்திலேனும் எவரும் மலபாதைக்குப் போவது சட்டவிரோதமானதாயிருக்கும்.

மேற்சொல்லிய உபவிதிகளின்படி வருடாந்த லைசென்ஸ்களுக்காக அறவிடப்படவேண்டிய சலார் அட்டவணை :—

| | வருடாந்தச் சலார். ரூ. | ச. | | வருடாந்தச் சலார். ரூ. | ச. |
|---|---|---|---|---|---|
| அப்பச்சாலை .. .. | 5 | 0 | தும்பு எடுத்தலும் சேர்த்து வைத்தலும் .. | 25 | 0 |
| சாப்பாட்டுக்கடை .. .. | 3 | 0 | 5 அந்தருக்குமேல் கருவாடு சேர்த்து வைத்தல் .. .. .. | 5 | 0 |
| தேத்தண்ணீர் கோப்பிக்கடை .. | 2 | 0 | தோல்கள், எலும்புகள், செயற்கைப் பசளை அல்லது செயற்கைப்பசளை செய்வதற்கான பொருட்கள் ஒரு சாக்குக்கு அதிகசாகச் சேர்த்து வைத்தல .. .. | 10 | 0 |
| மாட்டுக்காலை .. .. | 5 | 0 | செங்கல் அல்லது ஓடுகள் செய்தல் .. | 7 | 50 |
| பசளைசெய்யுமிடம் .. .. | 100 | 0 | சுண்ணாம்புக் காளவாய் .. .. | 5 | 0 |
| இரத்தம் அல்லது களிவுமாமிசம் அவித்தல் அல்லது உலர்த்தல் .. .. | 100 | 0 | மின்னரம் சேர்த்து வைக்குமிடம் அல்லது சுத்தப்படுத்தும் முற்றம் .. .. | 25 | 0 |
| தோல் பதனிடும் இடம் .. .. | 100 | 0 | | | |
| கொழுப்பு உருக்குதல் அல்லது வடித்தல் .. | 50 | 0 | | | |
| சவுக்காரம் செய்தல் .. .. | 50 | 0 | | | |
| இயந்திர உதவியால் தேங்காய் நெய் வடித்தல் | 100 | 0 | | | |

குறிப்பு.—அப்பச்சாலைகள், சாப்பாட்டுக்கடைகள். தேத்தண்ணீர்க் கோப்பிக் கடைகளுக்காகக் கொடுக்கவேண்டிய சலார்கள் அரைவருடத்திற் கொருமுறை முற்பணமாகக் கொடுக்கப்படலாம்.

வியாக்கியானப் பிரிவு.—இந்த ஒழுக்கவிதிகளில் "பட்டணம்" என்னும் பதம் "1892 ம் ஆண்டின் 18 ம் இலக்க, சிறுபட்டணச் சௌக்கியாதாரச் சட்டத்தின்படி பிரசித்தப்படுத்தப்பட்ட சலாப டிஸ்திறிக்கிலுள்ள ஓர்பட்டணம் அல்லது கிராமம் எனப் பொருள்படும்.

## காணி விற்பனவுகள்.

**Puttalam No. 6.**—1927 ம் ஆண்டு (ஜூலை) ஆடி மாதம் 23 ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு தோணிக்கலே விடுதிவீட்டில் வடமேல் மாகாணத்து புத்தளம் டிஸ்திறிக்கு கவற்ணமேந்து உதவி ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றிச் செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும் அல்லது நீக்கிவிடப்படும் அல்லது வேறுமாதிரியாக விற்கப்படும்.

47 காணித்துண்டுகள், வடமேல் மாகாணத்து புத்தளம் டிஸ்திறிக்கு, தமிளகத்பத்து பகுதியி லிருக்கின்றது.

பிளான் இலக்கம் 5,777. குறிச்சி—பெத்திகமெ. உரித்தாளி—எச். றன்காமி.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | தரிப்புவிலே ஏக்கர் ஒன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கொங்ககாவனெ | எச். றன்காமி | தென்னந்தோட்டம் | 3 | 1 | 13 | 59 |
| | | | உரித்தாளி—முடி. | | | | |
| 2 | ஷை | — | குளத்துக் கட்டுக்காகச் சேமிக்கப்பட்டது | 0 | 1 | 4 | —* |

பிளான் இலக்கம் 5,811. குறிச்சி—பெருமக்குட்டுவ. உரித்தாளி—முடி.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | ஏ. | றூ. | ப. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கிக்ககாவனெ | சீ. ஜூசேசில்வா | சேனை | 2 | 0 | 21 | 53 |
| 2 | கெலம்பகாமுல்லவனெ | ஆர். மெனிக்கனநதெ | சேனை | 1 | 0 | 9 | 50 |
| 3 | ஷை | — | ரோட்டுக்காகச் சேமிக்கப்பட்டது | 0 | 1 | 0 | —* |
| 4 | போககாவனெ | ஏ. சவானைதெ | சேனை | 0 | 3 | 34 | 40 |
| 5 | ஷை | — | ரோட்டுக்காகச் சேமிக்கப்பட்டது | 0 | 0 | 11 | —* |

பிளான் இலக்கம் 4,944. குறிச்சி—நவகத்தேகமெ. உரித்தாளி—முடி.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | ஏ. | றூ. | ப. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 2 | கிறியாககாவனெ | ஆர். ஏ. எச். எம். புஞ்சிபண்டா | சேனை | 3 | 0 | 0 | 25 |
| 3 | ஷை | — | சேனை | 0 | 3 | 34 | 25 |

பிளான் இலக்கம் 5,058. குறிச்சி—சந்தனன்குளமெ. உரித்தாளி—முடி.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | ஏ. | றூ. | ப. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | சந்தனன்குளமெ கெலெ | புஞ்சிருளெ பழய விதானை | சோலைக்காடு | 4 | 1 | 26 | 70 |
| 2 | ஷை | ஷை | ஷை | 3 | 1 | 31 | 55 |
| 4 | ஷை | பீ. கமருளெயும் மற்றவரும் | சேனை | 8 | 2 | 34 | 40 |

பிளான் இலக்கம் 5,093. குறிச்சி—பளுகாஸ்வெவெ. உரித்தாளி—முடி.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | ஏ. | றூ. | ப. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பளுகஸ்வெவெகெலெ | டபிலியு. சுத்தா | சேனை | 9 | 0 | 29 | 37·50 |
| 2 | பளுகஸ்வெவெகும்புறுயாய | பீ. மெனிக்கிருளெ | பாழ்வயல் | 32 | 1 | 27 | 40 |

பிளான் இலக்கம் 5,308. குறிச்சி—வெஹுவெவெ. உரித்தாளி—முடி.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | ஏ. | றூ. | ப. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | டன்கஹாஇடமெ | பீ. சொகொண்டிருளெ | சேனை | 9 | 0 | 30 | 20 |

பிளான் இலக்கம் 5,442. குறிச்சி—பலகொலாகமெ. உரித்தாளி—முடி.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | ஏ. | றூ. | ப. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | ஹெத்தினிகமெஇடமெ | எஸ். கேறத்காமியும் மற்றவரும் | சேனை | 11 | 2 | 7 | 51 |

பிளான் இலக்கம் 5,539. குறிச்சி—குடமடவாச்சிய. உரித்தாளி—முடி.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | ஏ. | றூ. | ப. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 2 | அம்பலமெகெலெ அல்லது பளுகாஇடமெ | எஸ். எம். முதலிகாமி | சோலைக்காடு | 2 | 2 | 30 | 42 |

பிளான் இலக்கம் 4,772. குறிச்சி—குறத்திஹேனெ. உரித்தாளி—முடி.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | ஏ. | றூ. | ப. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | குறத்திஹேனெகெலெ | — | குளக்கட்டுக்காக சேமிக்கப்பட்டது | 0 | 2 | 25 | —* |
| 2 | ஷை | பீ. மெனிக்கிருளெயும் மற்றவர்களும் | சோலைக்காடு | 10 | 3 | 24 | 32·50 |

பிளான் இலக்கம் 5,694. குறுச்சி—தலகொலாவெவெ. உரித்தாளி—முடி.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | ஏ. | றூ. | ப. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கிடலெவெ | ஏ. பி. கிறிகாமி | சேனை | 0 | 3 | 26 | 42 |
| 2 | ஷை | ஏ. ஆற். புஞ்சிருளெ | சேனை | 1 | 3 | 35 | 42 |
| 3 | ஷை | ஏ. ஜி. பண்டா | சேனை | 0 | 3 | 33 | 42·50 |
| 4 | ஷை | ஏ. புஞ்சிருளெ, பழய விதானை | சேனை | 1 | 0 | 29 | 42 |
| 8 | மீகஹாஹேனெ | ஏ. பி. கிறிகாமி | கட்டாங்காடு | 0 | 3 | 28 | 45 |
| 9 | ஷை | ஏ. புஞ்சிருளெ பழய விதானை | ஷை | 0 | 3 | 3 | 45 |
| 10 | ஷை | ஏ. கே. குனறத்காமி | ஷை | 0 | 3 | 36 | 45 |
| 11 | ஷை | ஏ. ஆற். வீ. புஞ்சிருளெ | சேனை | 1 | 3 | 37 | 45 |
| 12 | ஷை | ஏ. ஜி. பண்டா | சேனை | 0 | 3 | 35 | 45 |

பிளான் இலக்கம் 5,780. குறிச்சி—சங்கடயாகமெ. உரித்தாளி—முடி.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | ஏ. | றூ. | ப. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கிறியகஹாயாயெ | — | கரத்தை வளிக்காகச் சேமிக்கப்பட்டது | 0 | 0 | 15 | —* |
| 2 | ஹெலெம்பகஹாவத்தெ | ஏ. எச். பயாவும் மத்தவரும் | நெல்வயல் | 0 | 3 | 18 | 45 |

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. றூ. ப. | தரிப்புவிலை எக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| | | பிளான் இலக்கம் 5,780. குறிச்சி—சங்கடயாகமெ. உரித்தாளி—முடி. | | | |
| 3 | டன்ககாகும்புற .. | — .. | குளத்துக் கட்டுக்காகச் சேமிக்கப்பட்டது | 0 1 12 | —* |
| 4 | ஷை .. | ஏ. எச். பையாஉம் மத்தவரும் | நெல்வயல் .. .. | 0 3 18 | 45 |
| 5 | அருககாவத்தெ .. | எஸ். கிரிமல்லும் மத்தவரும்.. | சேனை .. .. | 0 3 33 | 40 |
| 6 | டன்ககாவத்தெ .. | பீ. வீ. கெனெயாஉம் மத்தவரும் | தென்னந்தோட்டம் .. | 1 0 14 | 68 |
| 7 | ஷை .. | — .. | குளத்துக் கட்டுக்காகச் சேமிக்கப்பட்டது | 0 2 28 | —* |
| 8 | ஷை .. | டி. பிறுவும் மத்தவரும் .. | சேனை .. .. | 1 2 0 | 40 |
| 9 | டங்ககாகேனெ .. | பீ கிரு .. .. | சேனை .. .. | 1 0 19 | 35 |
| | | பிளான் இலக்கம் 5.329. குறிச்சி—றடபளியாகமெ. உரித்தாளி—முடி. | | | |
| 1 | மட்ன்ககாகேனெ .. | டபிளியு. கே. பறனுந்து .. | கட்டாங்காடு .. | 2 0 34 | 46 |
| 2 | ஷை .. | — .. | ஷை .. .. | 0 3 1 | 46 |
| | | பிளான் இலக்கம் 5,373. குறிச்சி—கொட்டுக்கச்சிய. உரித்தாளி—முடி. | | | |
| 1 | விகாறெகமெகெலெ .. | எல். அப்புகாமி .. | காடு .. .. | 3 2 14 | 45 |
| | | பிளான் இலக்கம் 5,529. சிறிச்சி—கொட்டுக்கச்சிய. உரித்தாளி—முடி. | | | |
| 1 | விகாறெகமெகெலே .. | பீ. முதலிகாமி .. | காடு .. .. | 1 2 8 | 41 |
| | | பிளான் இலக்கம் 5,598. குறிச்சி—கலவெவெ. உரித்தாளி—முடி. | | | |
| 1 | மொறகஹாலந்தெ .. | எம். பாஉளுபிள்ளை .. | காடு .. .. | 2 3 39 | 46 |
| 2 | ஷை .. | ஆர். எம் பி. கிரிகாமி .. | காடு .. .. | 1 3 38 | 46 |
| | | பிளான் இலக்கம் 5,742. குறிச்சி—ஊறியகமுவ (பாஹு) (கொல்லங்குளமெ). உரித்தாளி—முடி. | | | |
| 4 | ஊறியாகெலெ .. | ஏ. எம். ஆர். முதலிகாமி .. | கட்டாங்காடு .. | 1 0 12 | 37·50 |
| 5 | ஷை .. | ஏ. எச். யு. பி. வீ. ஹேறத்காமி | ஷை .. .. | 0 3 35 | 37·50 |
| 7 | ஷை .. | டி. ஜீ. எம் ஹேறத்காமி .. | ஷை .. .. | 1 0 12 | 40 |
| | | F. V. P. பிளான் இலக்கம் 1,828. குறிச்சி—கம்மன்தளுவெ. உரித்தாளி—முடி. | | | |
| 36 | டன்கஹாவத்தெ .. | ஏ எல். அபுபக்கர் .. | சேனை .. .. | 1 0 38 | 35 |

* சேமிககப்பட்ட நிலம். (விற்பனவுக்கல்ல).

இக்காணிகளைப்பற்றிய மறுவிபரங்கள் புத்தளத்து உதவி ஏசன்டரிடத்திலும், அவைகளின் படங்கள் அழவைக் கந்தோர் தலைவரிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

கலோனியல் சக்கிறத்தார் கந்தோர்,
கொழும்பு, 1927 ம் வ்ஷ ஆனிமீ 4 ந் வ.

எவ். ஜீ. திரேல்,
கலோனியல் சக்கிறத்தாரின் வேலைபார்ப்பவர்.

---

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் வ்ஷ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கிரிலபொன-பாதுக்கை வளி திறப்படுத்துகிறதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 19,115.

குறிச்சி—கொமாகமை, பிட்டிபாண, கிரிலபொண, பனுகொடயும் கொடகமையும்.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கினககாலந்தவத்த .. | 31 தென்னமரமும் மணணல் கட்டப்பட்ட 1 வீடும் உள்ளது | ஜே. தொன் மானிசும இன்னம் ஆட்களும் | 0 2 15·2 |
| 2 | ஷை .. | காடும் தரைநிலமும் .. | ஷை .. | 0 0 34·5 |
| 3 | ஷை .. | 3 தென்னம்பிள்ளை அடங்கியது .. | என். பஸ்தியானு பெரேரா. | 0 0 3·1 |
| 4 | ஹொன்டறவள தெனியெகுமபுற | ஷை .. .. | ஜே. தொன் மானிசும் இன்னம் ஆட்களும | 0 1 33·6 |
| 5 | கெந்தலந்தவத்த .. | 18 தென்னம்பிள்ளை அடங்கிய காணி . | ஜே. க்ரெஸ்பி ரெத்றிகொவும் இன்னம் ஆன்கள் | 0 0 33·2 |
| 6 | ஷை .. | 214 தென்னமரம் முதல் 1 கிணறு 1 சிறுவளி அடங்கிய காணி | ஷை .. | 2 2 10·5 |

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 7 | கெந்தலந்தவத்தை .. | 53 தென்னமரம் 8 தென்னங்கண்டு 3 பிலாமரம் 10 பாக்குமரம் 1 கிணத்தால் பாதியும் | ஏ. மந்திஸ்அப்பு .. | 0 | 3 | 18·3 |
| 8 | ஷை .. | சிறுகாடு முதல் விடுதலெயின் கிணறும் | ஷை .. | 0 | 0 | 19·2 |
| 9 | ஷை .. | 11 பாக்குமரம் அடங்கியது .. | எ. சாள்ஸ்அப்புவும் இன்னம் ஆள்கள் | 0 | 0 | 5·1 |
| 10 | ஹொந்தறவள தெனியே ஒவிற்ற | ஒவிட்ட .. .. | எம் சுவாரிஸ் அப்பு முதல் இன்னம் ஆள்கள் | 0 | 0 | 5·1 |
| 11 | கெந்தலந்தெவத்த .. | 49 தென்னமரம், 2 பிலாமரம், 8 பாக்குமரம், 3 மாங்காமரம் அடங்கியது | எ. சார்லிஸ்அப்புமுதல் இன்னம் ஆள்களும் | 0 | 2 | 14·7 |
| 12 | ஷை .. | 194 றப்பர்மரம், 8 தென்னமரம், ஒரு ஓடையில் பாதி | ஏ. கொறனேலிஸ் அப்பு .. | 0 | 3 | 13·5 |
| 13 | ஷை .. | 72 தென்னமரம், 1 மாங்காமரம், இன்னம் ஒரு ஓடையில் பாதி | பீ. தொன் ஹெந்திரிக் அப்பு முதல் இன்னும் ஆள்கள் | 1 | 1 | 17·5 |
| 14 | கட்டுக்குருந்துககாவத்த .. | 2 தென்னம்பிள்ளை அடங்கிய காணி .. | ஏ. ஸயிமன்அப்பு அருது டி. பீ. சேனாநுயக்க | 0 | 0 | 13·1 |
| 15 | ஷை .. | 1 தென்னமரம் 3 தென்னம்பிள்ளை .. | டி. பி. சேனுநாயக | 0 | 0 | 5·1 |
| 16 | கிறிம்பிறியமூகலானவத்த | கறுவாமுதல் 5 தென்னமர மடங்கியது | தெ. எ. இலிசாகாமி .. | 0 | 0 | 18·6 |
| 17 | ஷை .. | 20, தென்னமரம், 2 பிலாமரம், 4 பாக்குமரம், 1 மாங்காமரம். 1 ஈரபிலா மரம், 2 மணுைல் கட்டிய வீடு, 1 மண்ணுல் கட்டிய கக்கூசு | ஷை .. | 0 | 1 | 4·8 |
| 18 | ஷை .. | கறுவாமரமும், 3 தென்னமரமும் .. | ஷை .. | 0 | 0 | 4·5 |
| 19 | கிறிம்பியாதோட்டம் .. | தென்னந்தோட்டம், 140 தென்னமரமும் 4 பிலாமரமும் அடங்கியது | ஜே. ஆர். மார்பட்னஸ் .. | 1 | 3 | 14·7 |
| 21 | ஷை .. | தென்னந்தோட்டம், (கல்லுபூமி) 63 தென்னமரம், 2 பிலாமரம், 3 றபர் மரம் அடங்கியது | ஷை .. | 1 | 3 | 26 7 |
| 22 | ஷை .. | தென்னந்தோட்டம். 56 தென்னமாம், 6 தென்னம்கண்டு, 2 றபர்மரம், 1 பிலா, 2 தேசிக்காய்மரம், 1 ஓடையில் பாதி | ஷை .. | 1 | 0 | 18·6 |
| 23 | தம்பகந்ததோட்டம் .. | 106 தென்னமரம் முதல் ஒரு சிறு வளி உள்ளது | சார்லிஸ பீரிஸ நோனு .. | 1 | 2 | 4·8 |
| 24 | முதக்குவாவத்த .. | 22 தென்னமரம், 4 பிலாமரம், 5 மாங்காமரம், 1 மண்சிவரு, இன்னம் ஒரு கிணறு மண்சிவரும் | டப்ளிவ். ஜேமிஸஅப்பு .. | 0 | 1 | 1·7 |
| 25 | ஷை .. | 45 தென்னமரம், 21 பிலாமரம், 2 ஈரப்பிலா மரம் | டப்ளிவ். சேதன்பெரேரா .. | 0 | 1 | 34·2 |
| 26 | ஷை .. | தறைநிலம் .. | டப்ளிவ். பொடிசிஞ்ஞோ .. | 0 | 0 | 0·4 |
| 27 | ஷை .. | 23 தென்னமரம், 3 மாங்காமரம், 12 பிலாமரம், 2 பனிதொடம்மரம் | ஷை .. | 0 | 1 | 2·4 |
| 28 | முதக்குவேவத்த - .. | 25 தென்னமரம், 16 பிலாமரம், 19 பாக்குமரம் | டபிள்யு. தீயோனிஸ் .. | 0 | 0 | 28·8 |
| 29 | ஷை .. | 2 தென்னமரம் அடங்கியது .. | ஜே. ஆர். மாட்டனஸ் .. | 0 | 0 | 2·5 |
| 30 | ஷை .. | 12 தென்மைரமும் 2 பலாமரமும் அடங்கியது | ஷை .. | 0 | 0 | 26·6 |
| 31 | ஷை .. | 65 றப்பர் மரம் .. .. | ஷை .. | 0 | 2 | 15·6 |
| 32 | ஷை .. | 49 றப்பர் மரம் ஒரு சிறு வளியில் பாதி | ஷை .. | 0 | 1 | 14·8 |
| 33 | கந்தஎனவத்த அல்லது மதுக்குருவத்த | 19 தென்னமரம் 1 மாங்காய் மரம் .. | ஜே. அட்வின் அல்விஸ்முதல் இன்னம் ஆட்கள் | 0 | 1 | 14·6 |
| 34 | ஷை .. | 10 தென்னமரம் 2 மாங்காய் மரம் (கல்லு பூமி) | ஷை .. | 0 | 2 | 1·6 |
| 35 | ஷை .. | (கல்லு பூமி) கொஞ்சம் கறுவா 15 தென்னமரம் 1 ஈரப்பிலா மரம் | ஜே. பபுசிஞ்ஞோ அல்விஸ். | 0 | 1 | 38·6 |
| 36 | ஷை .. | 19 தென்னமரம் 10 பாக்கு மரம் 1 தேசிக்கா மரம் 1 தொடங்கா மரம் அடங்கியது | ஷை .. | 0 | 1 | 12·2 |
| 37 | ஷை .. | 28 தென்னமரம் 1 பிலாமரம் 3 பாக்கு மரம் | ஜே. ஆர். மார்ட்டனஸ் .. | 0 | 1 | 26·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யுமபடி 1876 ம வருஷ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம பிரிவின்படி வேணடிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளமபரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும தாமாக அல்லது அவரவருடைய கரியகாரர் மூலமாய் 1927 ம வருஷ ஜுலை மாசம் 4 ந தேதியிலன்று 9 மணிக்கு கொமாகமை றெட்டவுசில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளி லுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தை களுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப் படுகின்றது.

கொளும்புக் கச்சேரி,
1927 ம் வருஷ ஜுன்மீ 4 ந் வ.

டி. பி. ஸெனவிரத்ன,
மிகுதியான உதவி அரசாட்சி ஏஜண்டு, மேன்மாகாணம்.

1876 ம் ஷு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கவண்மேந்து ஆங்கிலேய—சுதேச பாடசாலை கட்டுதல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 6,838. குறிச்சி—யாழ்ப்பாண நகரச்சங்கத் தெல்லைக்குட்பட்ட சிவியாதெரு மேற்கு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பறைபன்காடு .. | பனங்தென்னங்தோட்டம் .. | விசுவனுதர் காசிப்பிள்ளை, ஜெ. பி., அரியாலைத் தோட்டம், யாழ்ப்பாணம் | 1 3 23 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஷு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1927 ம் ஷு ஆடி மாசம் 2 ௳ தேதியிலன்று மாலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தை களுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

யாழ்ப்பாணம் கச்சேரி,
1927 ம் ஷு வைகாசிமீ 22 ௳ உ.

எல். ஏ. நோர்த்கிருவ்ட்,
வடமாகாண அரசாட்சி ஏஜண்டுக்காக.

---

1876 ம் ஷு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வதுளை அரசாட்சி உத்தியோகஸ்தருக்கு வீடுகள்கட்ட என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 2,575. குறிச்சி—அளுத்வெலகம (வ்துளை லோக்கல்போட் எல்லைக்குள்.)

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பற்றியாகுமபுற .. | வேளாண்மை வயல் .. | வதுளை கதிர்காம தேவாலயம் .. | 0 3 29·1 |
| 2 | கெனயாசேகும்புற .. | ஷை .. | வதுளையிலிருக்கும ச. ச. சத்தியான் .. | 0 0 25·2 |
| 3 | வோகாகாகராவ .. | ஷை (இதற்குள் ஒரு புதிய ஓட்டால் வேய்ந்த வங்களா இருக்கிறது) | ரெத்தினபுரியில் இருக்கும பெருக்குதோர் அ. விசற்றலிக்கும மற்றவர்களுக்கும | 0 0 19·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஷு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1927 ம் ஷு ஆடி மாசம் 12 ௳ தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு வதுளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தை களுக்காய்த் தாம்சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப் படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1927 ம் ஷு ஆனிமீ 6 ௳ உ.

ஆர். ஏ. ஜீ. பெஸ்டிங்,
அரசாட்சி ஏசண்டு.

---

## உரிமைபெறும பாழ்நிலத்தின முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இலக்கம் 9,551 குருநாக்கல்.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுங் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1927 ம் ஷு (ஜூன்) ஆனிமீ 10 ௳ திகதி துவக்கம் மூன்று மாசத்திறகுள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் என். ஜே. லடிங்ரன் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுங் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணிகளை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

என். ஜே. லடிங்ரன்,
விசேஷ உத்தியோகத்தர்.

குறிப்பு —(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் கொழும்பு (செற்றில்மென் ஒபிசர்) காணி நிர்ணய உத்தியோகத்தரிடமும், அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெறறுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விபரம்.

வடமேன் மாகாணம், குருநாகல டிஸ்திறிக தேவமெதி ஹற்பத்து திசாவக் கோறளையைச்சார்ந்த வலஸ்வெவக் கிராமத்திலிருக்குங் கீழ்க்குறிக்கப்படுங் காணித்துண்டுகள்:—

இலங்கை அழவைப் பிரதமபடம் 2,251.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|
| 1 | .. | ஹெலன்ஸலண்ட்தோட்டம் .. .. .. .. | 12 2 19 |
| 2 | .. | கொகொம்பக்காமுலவன, கசட்டக்காமுலவன, கோங்காமுலவன .. .. | 12 2 6 |
| 3 | .. | வலஸ்வெவ (குளமும் கட்டும்) .. .. .. .. | 4 3 24 |
| 4 | .. | சியம்பலாகாமுலவன (குளக்கட்டுக்குச் சேமநிலம) .. .. | 0 0 20 |
| 5 | .. | கோங்காமுலவன, தொறக்கப்புவன, தலகாமுலவன, சியம்பலாகாவன, சியம்பலாகாமுலவன, நுககாமுலவன .. .. .. .. | 19 3 10 |
| 7 | .. | கோங்காமுலவன அல்லது நுககாமுலவன (குளத்துக்கும கட்டுக்கும சேமநிலம) .. | 0 2 3 |
| | | | 50 2 2 |

எல்லைகளாவன: வடக்கு-தொறபவிலக் கிராம எல்லை; கிழக்கு-கடவலகெதறக் கிராம எல்லை; தெற்கு-தோழக்கொட்டுவ, புவாக்பிட்டிகமக் கிராமஎல்லைகள்; மேற்கு-புவாக்பிட்டிகம.

கவனிப்பு.—மேற்குறித்த எல்லைகளுக் குட்பட்டனவாகிய கீழ்க் குறிக்குங் காணித்துண்டுக ளிவ்வறிவித்தலினின்றும் விலக்கப்பட்டிருக்கின்றன வென்பதையு மவைகளின் விசாலத்தொகையாகிய 10 ஏக்கர் 6 பேட்சி னெப்பகுதியாவது மேற் சொல்லிய 50 ஏக்கர் 2 றூட் 2 பேட்சிக்குள்ளு மடங்கியிருக்கவில்லை யென்பதையுங் கவனிக்கவேண்டியது:—

இலங்கை அழவைப் பிரதமபடம் 2,251.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ றூ. ப. |
|---|---|---|---|
| 6 | .. | மீகாகும்புற, சூரியகாகும்புற .. .. .. .. | 7 2 31 |
| 8 | .. | மாறகாமுலவத்த .. .. .. .. | 0 1 29 |
| 9 | .. | மீகாமுலவத்த .. .. .. .. | 1 3 26 |
| | | | 10 0 6 |

[குருநாக்கல் வி. உ. 37—1927.]

---

[அறிவித்தல் இலக்கம் 9,552, குருநாக்கல்.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1927 ம் ஞூ (ஜூன்) ஆனிமீ 10 ந் தேதி துவககம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் என். ஜே. லடிங்ரன் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டென்னும் உரித்தை அல்லது உடநதையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப் பேசப்படாததாகிய சொல்லிய காணிகளை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாததிட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

என். ஜே. லடிங்ரன்,
விசேஷ உத்தியோகத்தர்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் கொழும்பு (செற்றில்மென் ஒபிசர்) காணி நிர்ணய உத்தியோகத்தரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனரல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளுக்குள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விபரம்.

வடமேன் மாகாணம், குருநாகல டிஸ்திறிக் தேமமெதிஹற்பத்து திசாவக் கோறளையைச்சார்ந்த கறக்காகமக் கிராமத்திலிருக்குங் கீழ்க்குறிக்கப்படுங் காணித்துண்டுகள்:—

இலங்கை அழவைப் பிரதமபடம் 2,244.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|---|
| 1 | .. | கறக்காகமஹேன, கோங்காஹேன்யாய .. .. .. | 44 0 23 |
| 3 | .. | அநுத்இஸ்வெட்டிய (குளமும கட்டும்) .. .. .. | 1 1 36 |

| காணித் துண்டு. | | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. | | |
|---|---|---|---|---|---|
| 4 | .. | கோங்காஹேன்யாய | 0 | 1 | 34 |
| 7 | .. | மகாவெவ (குளம்) | 1 | 1 | 37 |
| 8 | .. | கோங்காஏன்யாய, கறக்காகமஏன்யாய (குளக்கட்டுக்குச் சேமநிலம) | 1 | 0 | 5 |
| 9 | .. | பறனஇஸ்வெட்டியவெவ (குளமும கட்டும) | 1 | 3 | 32 |
| | | | 50 | 2 | 7 |

எல்லைகளாவன: வடக்கு-நல்லூர்க் கிராம எல்லை, பலதொறக் கோறளையின் எல்லை; கிழக்கு பலதொறக் கோறளையின் எல்லை (பலதொறகுறுக் கொட விலிருந்து குருநாகல்லுக்குப் போகும் றேட்டு); தெற்கு-வடிகமக் கிராம எல்லை; மேற்கு-நல்லூர்க் கிராம எல்லை.

கவனிப்பு.—மேற்குறித்த எல்லைகளுக் குட்பட்டனவாகிய கீழ்க் குறிக்கும் காணித்துண்டுக ளிவ்வறிவித்தலினின்றும் விலக்கப்பட்டிருக்கின்றன வென்பதையு மவைகளின் விசாலத் தொகையாகிய 6 ஏக்கர் 9 பேட்சும் மேற்சொல்லிய 50 ஏக்கர் 2 றூட் 7 பேட்சுக்குள்ளு மடங்கியிருக்கவில்லை யென்பதையுங் கவனிக்கவேண்டியது:—

இலங்கை அழவைப் பிரதமபடம் 2,244.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. | | |
|---|---|---|---|---|---|
| 2 | .. | தங்காகுமபுற | 0 | 0 | 31 |
| 5 | .. | கறகாகமவத்த | 0 | 3 | 16 |
| 6 | .. | தங்காகுமபுற, கறகாகமகும்புற | 5 | 0 | 2 |
| | | | 6 | 0 | 9 |

[குருநாக்கல் வி. உ. 38—1927.]

---

[அறிவித்தல் இலக்கம் 9,553, குருநாக்கல்.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1927 ம் ஞூ (ஜூன்) ஆனி மீ 10 ந் திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் என். ஜே. லடிங்ரன் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்து அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப் படாததாகிய சொல்லிய காணிகளை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

என். ஜே. லடிங்ரன்
விசேஷ உத்தியோகத்தர்

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் கொழும்பு (செற்றில்மென் ஒபிசர்) காணி நிர்ணய உத்தியோகத்தரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளுக்குள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விபரம்.

வடமேன் மாகாணம் குருநாகல டிஸ்திறிக் தேவமெதிஹற்பத்து திசாவக் கோறளையைச்சார்ந்த சியம்பலாகடவறக் கிராமத்திலிருக்குங் கீழ்க்குறிக்கப்படுங் காணித்துண்டுகள்:—

இலங்கை அழவைப் பிரதமபடம் 2,257.

| காணித்துண்டு | | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. | | |
|---|---|---|---|---|---|
| 3 | .. | வெவகாவஹேன (குளக்கட்டுக்குச் சேமநிலம்) | 0 | 0 | 30 |
| 4 | .. | சியம்பலாகடவறவெவ (குளமும் கட்டும்) | 10 | 3 | 38 |
| 5 | .. | விலந்தக்காமுலஹேன, மீகாமுலவத்தேகொட்டுவ விலந்தக்காமுல்ஹேன, யக்குப்புக் கேஹேன, மாறகாமுலஹேன, கொலங்காமுலஹேன | 19 | 2 | 18 |
| 6 | .. | வெவகாவவத்த | 0 | 3 | 23 |
| 7 | .. | விலந்தக்காமுலஹேன (குளக்கட்டுக்குச் சேமநிலம்) | 0 | 1 | 13 |
| 10 | .. | பெரியறேட்டு (அரைவாசி) | 0 | 0 | 30 |
| 16 | .. | மீகாமுலவத்த (பெரியறேட்டுக்குச் சேமநிலம்) | 0 | 0 | 13 |
| 17 | .. | பெரியறேட்டும் சேமநிலமும் | 2 | 0 | 35 |
| 17½ | .. | சியம்பலாகாமுலவத்த (பெரியறேட்டுக்குச் சேமநிலம்) | 0 | 0 | 11 |
| 18 | .. | பத்தஸ்வல கெறக்கொப்புவ (சவக்காலை) | 0 | 3 | 20 |
| 19 | .. | பாதையும சேமநிலமும (வழி) | 0 | 0 | 33 |
| 20 | .. | கொலங்காமுலஹேன, கோங்காமுல்ஹேன | 9 | 0 | 25 |
| 22 | .. | கன்சபாவறேட்டு | 0 | 1 | 26 |
| 26 | .. | வெறலகொல்லஹேன | 3 | 3 | 34 |
| | | | 49 | 0 | 29 |

எல்லைகலாவன : வடக்கு கப்புகம, நதாகமக் கிராமஎல்லைகள் ; கிழக்கு ஆச்சிரிகமக கிராமஎல்லை ; தெறகு படல்கமக் கிராமஎல்லை ; மேற்கு உடஹிப்பன்பொலக் கிராமஎல்லை, உடஹிப்பன்பொலக கிராமஎல்லை (சிலாபத்திலிருந்துபோகும் பெரியறோட்டின் அரைவாசி), உடஹிப்பன்பொல, கஹாசொல்லக் கராமஎல்லைகள்.

கவனிப்பு.—மேற்குறித்த எல்லைகளுக்குட்பட்டனவாகிய கீழ்க்குறிகருங் காணித்துண்டு இவ்வறிவித்தலினின்றும் விலக்கப்பட்டிருக்கின்றன வென்பதையு மவைகளின் விசாலத்தொகையாகிய 68 ஏக்கா 5 பேட்சினைப் பகுதியாவது மேற சொல்லிய 49 ஏககர் 29 பேட்சுக்குள்ளு மடங்கிருக்கவில்லை யென்பதையுங் கவனிக்க வேண்டியது :—

இலங்கை அழவைப் பிரதமபடம் 2,257.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|
| 1 | .. | பறம்பொலகமஹேன, பறம்பொலகமவெல, வறம்பொலகமவெவ .. | 33 1 3 |
| 1½ | .. | பறம்பொலகமஹேன .. .. .. .. | 0 2 36 |
| 2 | .. | சியம்பலாகடவறவெல்யாய .. .. .. .. | 0 1 12 |
| 2½ | .. | காற்பாதை (106,313 ம் உரிமைப்படத்திற் சொல்லிய காணியின் பகுதி) .. | 0 0 13 |
| 8 | .. | சியமபலாகடவறவெல்யாய .. .. .. .. | 16 3 29 |
| 9 | .. | மடுகாலண்டிவத்த .. .. .. .. | 1 1 16 |
| 11 | .. | அமபகாமுலவத்த .. .. .. .. | 4 2 2 |
| 12 | .. | தேகிவத்த, தாச்சிவத்த .. .. .. .. | 2 0 28 |
| 13 | .. | கதுருகாமுலவத்த .. .. .. .. | 0 3 16 |
| 14 | .. | சோங்காமுலவத்த .. .. .. .. | 0 3 37 |
| 14½ | .. | சியமபலாகாமுலவத்த .. .. .. .. | 1 1 31 |
| 15 | .. | மீகாமுலவத்த .. .. .. .. .. | 0 3 12 |
| 21 | .. | சியம்பலாகடவறாதோட்டம் .. .. .. .. | 1 2 14 |
| 23 | .. | மீகாமுலஹேன .. .. .. .. | 0 1 12 |
| 24 | .. | மீகாமுலவத்த .. .. .. .. .. | 0 1 7 |
| 25 | .. | ஷை .. .. .. .. .. | 2 1 17 |
| | | | 68 0 5 |

[குருநாக்கல் வி. உ. 39—1927.]

---

[அறிவித்தல் இலக்கம் 9,554, அநுராசபுரம்.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடைமையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1927 ம் ஞூ (ஜூன்) ஆனிமீ 10 ந தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எல். டி. சீ. ஹியூஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப் பேசப்படாதகாகிய சொல்லிய காணிகளை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க

எல். டி. சி. ஹியூஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் கொழும்பு (செற்றில்யென் றெசிசர்) காணி திர்ணய உத்தியோகத்தரிடமும் அளவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளுக்குள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விபரம்.

வடமத்திய மாகாணம் கெலசம்பலாத்தை கிரிலொவக் கோறளை மெதலசத்துளாணையைச் சார்ந்த வெஹேரகமக் கிராமத்திலிருக்குங் கீழ்க்குறிக்கப்படுங் காணித்துண்டுகள் :—

இலங்கை அழவைப் பிரதமபடம் 1,030.

| காணித்துண்டு. | | காணியின் பெயர் | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|
| 1 | .. | ஹெலமபக்காவன, மீகாவன (குளக்கட்டுக்குச் சேமநிலம்) .. .. | 1 0 13 |
| 2 | .. | மீகாவன, போகாவன, வெஹேரகாலந்த .. .. .. | 8 1 29 |
| 3 | .. | பகிரங்கவேலைக்கந்தோர் மைனர்றோட்டு .. .. | 0 1 23 |
| 4 | .. | வெஹேரகமலந்த .. .. .. .. | 2 0 18 |
| 5 | .. | மொறக்காஎல .. .. .. .. | 0 0 10 |
| 6 | .. | வெஹேரகமலந்த .. .. .. .. | 0 0 27 |
| 7 | .. | பகிரங்கவேலைக் கந்தோர் மைனர்றோட்டு (பகுதி) .. | 0 0 19 |
| 9 | .. | மொறக்காமூக்கலான, மொறக்காஎலமூக்கலான .. .. | 2 1 23 |
| 10 | .. | மொறக்காஎல .. .. .. .. .. | 0 0 16 |
| 14 | .. | கொறெவ்எல (வாய்க்கால்) .. .. .. .. | 0 0 5 |
| 15 | .. | வேக்கந்தேபிம, வெவபகாலபிட்டிய (குளக்கட்டுக்குச் சேமநிலம்) .. | 0 0 15 |
| 16 | .. | வேக்கந்தபகாலகேன (குளக்கட்டுககுச் சேமநிலம்) .. .. | 0 0 23 |
| 19 | .. | வெகோகமவெவ (குளமும் கட்டும்) .. .. .. | 17 3 39 |
| 20 | .. | கலப்பாஉலயாய .. .. .. .. .. | 9 0 25 |

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 21 | உல்பொத்தேகல | 10 0 4 |
| 22 | கலப்பாஉலலந்த | 3 1 1 |
| 23 | பங்எல (பகுதி) | 0 0 16 |
| 24 | பங்எல | 0 0 12 |
| 25 | உஸ்கலப்பாஉலலந்த | 0 1 12 |
| 26 | வெகேரகம்கல | 5 1 4 |
| 28 | மொறக்காலந்த தியுள்காகெலே, மொறக்காகெலே | 5 0 2 |
| 29 | மொறக்காஎல (பகுதி) | 0 2 2 |
| | | 66 3 18 |

எல்லைகளாவன: வடக்கு-உல்பொத்தவெவ தியுள்வெவக் கிராம எல்லைகள்; கிழக்கு மீவெவக் கிராமஎல்லை, திகனே கமக் கிராம எல்லை, திகனேகமக் கிராம எல்லை (மைனர் ஙேரட்டின் பகுதி), ஹிங்குறுவெவக் கிராம எல்லை (மொறக்காஎலவின் பகுதி); தெற்கு-ஹிங்குறுவெவக் கிராம எல்லை, உத்துறுவதுன்னுவக கிராம எல்லை, உத்துறுவதுன்னுவக் கிராம எல்லை (பங்எலவின் பகுதி); மேற்கு-உத்துறுவதுன்னுவ, உல்பொத்தவெவக் கிராம எல்லைகள்.

கவனிப்பு.—மேற்குறித்த எல்லைகளுக் குட்பட்டனவாகிய கீழ்க்குறிக்குங் காணித்துண்டுக ளிவ்வறிவித்தலினின்றும் விலக்கப்பட்டிருக்கின்றன வென்பதையு மவைகளின் விசாலத்தொகையாகிய 11 ஏக்கர் 1 றூட் 38 பேட்சும் மேற்சொல்லிய 66 ஏக்கர் 3 றூட் 18 பேட்சுக்குள்ளு மடங்கியிருக்கவில்லை யென்பதையுங் கவனிக்க வேண்டியது:—

இலங்கை அழவைப் பிரதமபடம் 1,030.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 8 | போகாஅக்கரே (365,496 ம உரிமைப்படத்திற் சொல்லிய காணி) | 1 3 12 |
| 11 | மொறக்காஎல (356,492 ம டிை) | 0 0 2 |
| 12 | புருண அக்கரே மாறகா அக்கரே (334,763, 154,287, 334,888, 356,492 ம உரிமைப் படங்களில் சொல்லிய காணிகள்) | 5 0 2 |
| 13 | மாறகாவெல (154,587 ம உரிமைப்படத்திற் சொல்லிய காணியின் பகுதி) | 0 1 13 |
| 17 | புருணவெல | 2 3 25 |
| 18 | வெவபஹூலகமத்த | 0 0 7 |
| 27 | கேங்காபிம, கோங்காகும்புற | 1 1 17 |
| | | 11 1 38 |

[அநுராசபுர வி. உ. 28—1927.]

---

அரசாட்சியாரின் விளம்பரம்.—தொடர்பு.

---

1892ம் ஆண்டின் சிறுபட்டணச் சௌக்கியாதாரச் சட்டம்.

வடமேல் மாகாணம் புத்தளம் டிஸ்திறிக்கின் சௌக்கியாதார சங்கத்தவரால் 1892 ம் ஆண்டின் சிறுபட்டணச் சௌக்கியாதாரச் சட்டத்தின் 9E 2) ம் பிரி ன்படி உண்டாக்கப்பட்டு அதிகார மந்திரசபையோடு கூடிய உத்தம தேசாதிபதி யவர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஒழுக்கவிதிகள்.

உத்தம தேசாதிபதி அவர்களின் கட்டளைப்படி,

கலோனியல் சக்கிறுத்தாரின் கந்தோர், கொழும்பு, 1927ம் ஆண்டு ஆனிமீ 8 ௳ தேதி.

எப். ஜீ. திறெல், கலோனியல் சக்கிறுத்தாரின் வேலைபார்ப்பவர்.

மேற்சுட்டிய ஒழுக்கவிதிகள்.

9E (2) (a)ம் பிரிவு.

சங்கம்கூடும் நேரமும் இடமும் அக்கூட்டத்தில் கவனிக்கப்பட வேண்டிய முறையும்.

(1) சங்கத்தவர்களின் சாதாரண கூட்டங்கள் சங்கத்தவர்கள் காலத்துக்குக் காலம் நிர்ணயம்செய்து தீர்மானிக்கும் தினத்திலும், நேரத்திலும், இடத்திலும் நடத்தப்படும். எவ்விசேஷமான கூட்டமும் சங்கத்தலைவரின் நற்கருத்தின்படி அல்லது சங்கத்தவர்களில் இருவரால் எழுத்துமூலம் கேட்கப்படும் கேள்விப்படி கூட்டப்படலாம். ஆயின் எந்தக் கூட்டத்தையாவது வேறு தினத்துக்கு அல்லது நேரத்திற்குத் தவணைபோடுவது சங்கத்தவர்களுக்கு நியாயமுறையாகும்.

(2) சங்கத்தைச்சேர்ந்த எல்லாக் காரணங்களுக்கும் அங்கத்தவரின் முதன்மையும் வரிசையும் பின்வருமாறு இருக்க வேண்டும்.

(a) சங்கத்தின் சபாநாயகர்.

(b) "கசெற்" பத்திரிகையில் பிரசித்தம் பண்ணப்பட்டிருக்கும் வரிசைப்படியே தேசாதிபதி யவர்களால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள்.

3. சபாநாயகர் கிரமமுறைகள் கைக்கொள்ளப்படும்படி செய்து கிரம விஷயமாயுள்ள எல்லாக் காரியங்களும் தீர்மானிக்க வேண்டும்.

4. சாதாரண அல்லது விசேஷ கூட்டம் எதுவும் தொடங்க நியமிக்கப்பட்ட மணித்தியாலம் வந்து நிருவாகத் தொகையாக இருக்கவேண்டிய அங்கத்தவர்களும் வந்து சேர்ந்தவுடன் அக்கிராசனம் வகிக்க உரித்துடைய அங்கத்தவர் சபாநாயகராக உட்கார வேண்டும். சங்கத்தவர்கள் அதன்பின் நடத்தவேண்டிய கருமங்களை நடத்தத் தொடங்க வேண்டும். நியமிக்கப்பட்ட நேரத்துக்குப்பின் அரைமணித்தியாலத்துக்குள் நிருவாகத் தொகையாக இருக்க வேண்டிய அங்கத்தவர்கள் வந்திராவிட்டால் அக்கூட்டம் சாதாரண கூட்டமாயிருக்குமாகில் அடுத்த சாதாரண கூட்டம் நடத்த நியமித்திருக்கும் நாளுக்கும், விசேஷ கூட்டமாயிருக்குமாகில் தேதி நியமியாமலும் தவணைபோடப்பட வேண்டும்.

5. தருக்கம் நடக்கும் வேளையில் அல்லது அவசரமான காரியங்களின் விஷயத்தில் சங்கத்தின் விசேஷ உத்தரவோடு செய்தாலன்றி, ஒரு கேள்விகேட்க அல்லது பிரேரணைசெய்ய விரும்பும் எவ்வங்கத்தவரும் அக்கேள்வியை அல்லது பிரேரணையைக் குறித்து சங்கத்தின் முந்திய கூட்டம் ஒன்றில், அல்லது தாம் அக்கேள்வி கேட்க அல்லது அப்பிரேரணை செய்ய எண்ணியிருக்கும் நாளுக்கு குறைந்த பட்சம் நாலு நாட்களுக்குமுன் எழுத்துமூலமாக அறிவித்தல் கொடுக்கவேண்டும்.

6. ஒவ்வொரு அங்கத்தவரும் தாம் அவ்விதம் அறிவித்தல் கொடுக்கும்போது அக்கேள்வியின் அல்லது பிரேரணையின் ஓர் பிரதியையும் சங்கத்தலைவரிடம் ஒப்புவிக்க வேண்டும்.

7. ஓர் கூட்டத்தில் கேட்கப்படும் எல்லாக் கேள்விகளும், செய்யப்படும் எல்லாப் பிரேரணைகளும், சங்கத்தவர்கள் வேறுவிதமாகத் தீர்மானித்தாலன்றி அவைகளைக் குறித்த அறிவித்தல்களின் ஒழுங்கின்படி இருத்தல் வேண்டும்.

8. ஓர் கூட்டத்தில் எதிர் மறுக்கப்பட்ட எந்தப் பிரேரணையும் குறைந்த பட்சம் மூன்று மாசம் முடியும்வரையும் திரும்பக் கொண்டுவரக் கூடாது. மேலும் ஓர் கூட்டத்தில் சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் பிரேரணைக்கு எவ்விதத்திலும் மாறுன எந்தப் பிரேரணையும் அக்கால எல்லை முடியும்வரையும் அங்கீகரிக்கப்படலாகாது.

9. எந்த அங்கத்தவராவது யாதும் பெட்டிசங்கள் அல்லது கடிதங்கள் சபைக்குக் கொண்டுவருகிறதானால், அவர் அதிலடங்கிய விஷயங்கள் முற்றுக மரியாதையுள்ளனவாயிருப்பதற்கு உத்தரவாதியாகக் கொள்ளப்படுவார். எழுதுகிறவரின் பெயரும் விலாசமும் அதில் தெளிவாக எழுதப்பட்டிருந்தாலன்றி எப்பத்திரமும் சபை முன்பாக ஓர் அங்கத்தவரால் கொண்டுவரப்படல் ஆகாது.

10. சங்கத்தின் சாதாரண கூட்டங்கள் பின்வரும் ஒழுங்கின்படி நடைபெற வேண்டும்.

(a) முந்திய கூட்டத்தின் குறிப்புகள் வாசிக்கப்பட்டு வேண்டுமானால் திருத்தப்பட்டதன்மேல் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

(b) சபைக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள், பெட்டிசங்கள் அல்லது வேறு கடிதங்கள் கூட்டம் முன்பாக வைக்கப்பட்டு அவைகளின் விஷயத்தில் கொடுக்கப்பட வேண்டிய உத்தரவுகள் கொடுக்கப்படவேண்டும்.

(c) மற்றும் அலுவல்கள் பின்சொல்லிய ஒழுங்கு முறைப் புத்தகத்தில் குறித்திருக்கும் ஒழுங்குப் பிரகாரம் விசாரிக்கப்பட வேண்டும்.

11. ஒவ்வொரு கூட்டத்திலும் தர்க்கிக்கப்படும்படியாகக் கொண்டுவரப்பட வேண்டிய விஷயங்கள் ஒன்றின்பின் ஒன்றாக எழுதப்பட்டு, இலக்கமிடப்பட்டிருக்கும் ஓர் ஒழுங்கு முறைப் புத்தகம் எழுதிவைக்கப்படல் வேண்டும்.

12. சங்கத்தின் வர்த்தமானங்கள் எழுதப்படும் ஓர் குறிப்புப் புத்தகத்தையும் லேககர் வைத்துவர வேண்டும். அப்புத்தகத்தில் எழுதப்பட்டபடி சங்கத்தின் ஒவ்வொரு கூட்டத்தின் குறிப்புகளும், பிந்திய கூட்டத்திலும் அவை உறுதிப்படுத்தப்பட்டபின் அவ்வண்ணம் அவைகள் உறுதிப்படுத்தப்படும். கூட்டத்தின் சபாநாயகரால் கையொப்பமிடப்படவேண்டும்.

13. சங்கத்துக்கு வந்திருக்கும் எல்லா முறைப்பாடுகளையும் சங்கத்தின் உத்தியோகத்தரால் எழுதப்பட்ட சகல விஞ்ஞாபனங்களையும், நேர்முந்திய கூட்டத்துக்குப் பிற்பாடு சங்கத்தலைவரால் செய்யப்பட்ட எக்கருமத்தையும் பற்றிய குறிப்புகளையும், லேககர் ஒவ்வொரு கூட்டத்திலும் மேசையில் வைத்தல் வேண்டும்.

14. ஒவ்வொரு விசேஷ கூட்டத்தையும் பற்றிய அறிவித்தல் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் குறைந்த கணக்கு இரண்டு நாளைக்குமுன் ஒப்புவிக்கப்பட வேண்டும் அல்லது அவரது வீட்டில் வைத்துவிடப்பட வேண்டும்.

[9E (2) (b) ம் பிரிவு.]

கட்டுவேலைகள் செய்வித்தல் தெருக்கள், ரோட்டுகள், பாலங்கள்.

பகிரங்க வேலைகளுக்கு வேண்டிய பணத்தொகைகள் முன்னமே செய்யப்பட்டு சங்கத்தவரால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்புப் பத்திரங்களின்படி நியமித்து விடப்படல் வேண்டும்.

[9E (2) (c) ம் பிரிவு.]

அப்பம் சுடுதல்.

1. அப்பம் செய்கிறதற்குப் பாவிக்கும் மா, தண்ணீர் மற்றும் பதார்த்தங்கள் நல்லனவாயும் சுகத்துக்கேற்றனவாயுமிருத்தல் வேண்டும். சங்க தலைவரால் காலத்துக்குக் காலம் எழுத்துமூலமாக அதிகாரம் கொடுக்கப்படும் எவருக்கும் கொடுக்கவேண்டிய விலையைக் கொடுத்து அப்பதார்த்தங்களின் மாதிரி சாம்பிள்களைக் கேட்டுவாங்குவது நியாயமுறையாகும்.

2. ஒவ்வொரு அப்பமும் அதன் நிறையைத் துலாம் பரமாய்க்காட்டும் ஓர் அடையாளத்தை அதன் மேற்பக்கத்தில் உடையதாயிருத்தல் வேண்டும். அவ்வித அடையாளம் ஒன்றுமில்லாத அல்லது அப்படிக் குறிக்கப்பட்ட முழு நிறைக்குக் குறைந்த நிறையுள்ள அப்பம் விற்கும் எவரும் ஓர் அடாத்துச் செய்த குற்றமுடையவர் ஆவர்.

[9E (2) (d) ம் பிரிவு.]

பொதுச் சந்தைகளும் அப்பம்சுடும் இடங்களும் தேத்தண்ணீர் கோப்பிக்கடைகளும், இறைச்சிக்கடைகளும், மாட்டுக் காலைகளும், வண்ணான் துறைகளும் ஸ்தாபித்து நடத்துதல்.

A.—சந்தைகள்.

1. ஒரு பொதுச்சந்தை ஸ்தாபிக்க சங்கத்தால் தீர்மானிக்கப்படும்போது அச்சந்தை தொடங்கும் நேரத்தைப்பற்றி சங்கத்தலைவர் பத்து நாளைக்குக் குறையாமல் அறிவித்தல் கொடுக்க வேண்டும். அவ்வறிவித்தல் பறைசாற்றல்மூலம் பிரசித்தப்படுத்தப் படவேண்டும்.

2 எச்சௌக்கியாதாரப் பட்டணத்திற்கும் சங்கத்தால் ஒரு பொதுச் சந்தை ஸ்தாபிக்கப்பட்டிருந்தால் சங்கத்தின் உத்தரவுப் பத்திரமின்றி அப்பட்டண எல்லைகளுக்குள் எச்சனங்களும் தங்களுக்காக ஓர் தனிச்சந்தை கூடப்படாது.

3. எல்லாப் பொதுச்சந்தைகளும் தினந்தோறும் காலை 6 மணி தொடங்கி சாயந்தரம் 9 மணி வரையும் திறந்திருக்க வேண்டும். சந்தையில் சரியான பிரகாரம் வெளிச்சம் ஏற்றியிருக்கும்படி செய்வது சங்கத்தின் அல்லது குத்தகைக் காரனின் கடமையாகும்.

4. ஓர் பொதுச் சந்தைக்காகக் கொடுக்கவேண்டிய வாடகைகளும் சலார்களும் காலத்துக்குக் காலம் கேட்ட நேரமே சங்கத்தலைவருக்கு அல்லது குத்தகைக்காரனுக்கு அல்லது சங்கத்தாலாவது குத்தகைக்காரனாலாவது அதை அறவிடும்படி தத்துவம் பெற்றவருக்கு முற்பணமாகக் கொடுக்கப்பட வேணடும்.

5. சந்தையில் ஒட்டப்பட்டிருக்கும் அறிவித்தலால் அச்சந்தையில் வைத்திருக்கப்படாது அல்லது விற்கப்படாதென்று விலக்கப்பட்ட எந்தச் சாமானையாவது ஒருவரும் எக்கடையிலும் வைத்திருக்கவேனும் விற்பனவுக்கென்று வெளியாக வைக்கவேனும் படாது.

6. மீனும் உப்பிட்ட மீனுமேயல்லாமல் வேறு பண்டங்களை அல்லது பொருட்களை எந்த மீன் சந்தையிலாவது கடையிலாவது ஒருவரும் வைத்திருக்கவேனும் விற்பனவுக்கென்று வெளியாக வைக்கவேனும் படாது.

7. புதிதாயிருந்தாலும் உப்பிட்டதாயிருந்தாலும் எவ்விறைச்சியையாவது மீனையாவது சமைத்தபோசனம் எதையாவது பழங்கள் அல்லது காய்கறிகளைத்தவிர வேறு போசன பதார்த்தம் எதையாவது, எந்தக் காய்கறி அல்லது பழச் சந்தையிலேனும் கடையிலேனும் ஒருவரும் விற்கவேனும் விற்பனவுக்கென்று வெளியாக வைக்கவேனும் படாது.

8. எந்தக் கடைக்காரனாவது ஓர் சந்தையின் எப்பாகத்தையும் எவ்விதத்திலும் அடைக்கவேனும் அல்லது ஓர் மேற்கட்டியையாவது மறைவு திரையையாவது நிலையான எக்கட்டுவேலையையாவது கட்டவேனும் படாது. மேலும் சங்கத்தலைவரின் உத்தரவை முதல் பெறாமல் எந்தச்சந்தையிலும் இரவு 9 மணிக்கும் காலை 6 மணிக்குமிடையில் எச்சாமான்களையும் அவன் விடப்படாது.

9. எந்தச்சந்தையிலும் ஓர் கடையேனும், வெளியேனும் இருக்குமிடமேனும் வைத்திருக்கும் ஒவ்வொருவனும் அக்கடையை, வெளியை அல்லது இருக்குமிடத்தை துப்பரவாகவும் அழுக்கு, குப்பையில்லாமலும் வைத்திருத்தல் வேண்டும். தொற்றுநோய் அல்லது பரம்பும் நோய் உள்ளவன் எவனும் அல்லது கொஞ்சகாலத்துக்குமுன் அந்நோயாற் பீடிக்கப்பட்டிருந்தவன் எவனும் அல்லது அப்படியான நோயுள்ளவனைக் கொஞ்சகாலத்துக்குமுன் பராமரித்தவன் எவனும் அப்பொதுச் சந்தையில் ஓர் கடை, இருக்குமிடம் அல்லது ஸ்தலம் வைத்திருக்கப்படாது.

10. ஓர் பொதுச் சந்தையின் ஓர் பாகத்தை உபயோகப்படுத்திவரும் அல்லது ஆட்சி பண்ணிவரும் எவரும்—

(a) அச்சந்தையில் அல்லது அதற்குக்கிட்ட ஒழுங்கீனமாய் நடக்கவேனும் அசங்கியம் செய்யவேனும் படாது.

(b) அச்சந்தை எதிலும் சமைக்கப்படாது.

(c) இரவு 9 மணிக்கு அந்த இடத்தில் அலுவல் முடிந்தபின் தான் அங்கே இருப்பதற்கு போதுமான நியாயம் சொல்லக்கூடாதபடியிருந்து அச்சந்தையில் தரித்து நிற்கவேனும் அலைந்து திரியவேனும் படாது.

(d) கட்டடங்களின் எப்பாகத்தையாவது, கடைகளையாக விளக்குகளையாவது அச்சந்தையில் அல்லது அதற்குச்சுற்ற உள்ள சங்கத்தின் சொத்து எதையும் பழுதபடுத்தவேனும் சிதைக்கவேனும் அல்லது அச்சந்தையிற் பாவிப்பதற்காக வைக்கப்பட்டிருக்கும் தண்ணீரை எவ்விதத்திலும் கெடுக்கவேனும் அசுசிப் படுத்தவேனும் படாது.

11. சௌக்கியாதாரசங்க எல்லைக்குள் விற்பனவுக்கென்று வெளியாக வைக்கப்பட்டிருக்கும் இறைச்சி, வீட்டுப் பறவைகள், மீன், வேட்டையாடிய மிருகங்கள், மாமிசங்கள், காய்கறி, பழங்கள் எவையும் சௌக்கியத்துக்கேற்றனவல்லவென்று அல்லது மனுஷ சாப்பாட்டுக்கு உதவாதனவென்று சங்கத்தின பரிசோதகர் அல்லது மேல்விசாரணைக்காரர் அவைகளைப் பிடிக்கும்போது அவ்விடத்தின் வைத்திய உத்தியோகஸ்தரிடம் அல்லது அவர் இல்லாதிருக்கும் நேரத்தில் அல்லது அப்படியான உத்தியோகஸ்தர் ஒருவர் அவ்விடத்தில் இல்லையானால் பொலீஸ் நீதவானிடம், அல்லது பொலீஸ் கோடொன்று இல்லாத இடமானால் ஓர் கிராமகோட்டு நீதவானிடம் அவைகளைக் கொண்டுபோவது அப்பரிசோதகருக்கு அல்லது மேல் விசாரணைக்காரருக்கு நியாயமுறையாகும். அவ்விறைச்சி வீட்டு மிருகங்கள், மீன் காய்கறிகள் பழவர்க்கங்கள், அல்லது மற்றும் போசன பதார்த்தங்கள் மனுஷ சாப்பாட்டுக்கு உதவாதனவென்று அவ்வைத்திய உத்தியோகஸ்தருக்கு, பொலீஸ் நீதவானுக்கு அல்லது கிராமக்கோட்டு நீதவானுக்குத் தோற்றுமாகில், அவைகள் விற்பனவுக்கென்று வைக்கப்படாதபடிக்கு அல்லது போசனமாகப் பாவிக்கப்படாதபடிக்குத் தடுப்பதற்காக அவைகளை அழித்துவிடும்படி அல்லது திட்டம் பண்ணும்படி அவர் கட்டளை பண்ணலாம்.

12. சந்தை எல்லைக்குள், குழப்பமில்லாமல் ஒழுங்காய் வைத்திருப்பது சந்தைக்காவலனின் அல்லது குத்தகைக் காரனின் கடமையாகும். எந்தப் பொதுச்சந்தையையும் மேல் விசாரித்துப்பார்த்து வருவதற்கு அல்லது வாடகைகளை அல்லது சலார்களை அறவிடுவதற்கு, அல்லது அவ்விடத்தில் யாவும் ஒழுங்காயிருக்கவும் இடம் சுத்தமாய் வைத்திருக்கப் படவும் செய்வதற்காக சங்கத்தால் நியமிக்கப்பட்ட எவரும் தன் கடமையைப் பார்க்கும்போது அவரைத் தடைபண்ணும் எவரும் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவர் ஆவர்.

13. குறித்த ஓர் வித மீனை சனங்கள் பாவிப்பது அல்லது சாப்பிடுவது கெடுதியானதென்று, அல்லது கொள்ளை நோய் எதுவும் பரம்பும் காலத்தில் குறித்த ஓர் பழத்தை அல்லது காய்கறியைப் பாவிப்பது அல்லது சாப்பிடுவது தீங்கானதென்று சங்கத்துக்குத் தோற்றும்போதெல்லாம் சங்க எல்லைக்குள் உள்ள எந்தச் சந்தையிலேனும் வேறிடத்திலேனும், சங்கத்துக்கு தேவையெனக்காணும் காலத்துக்கு, அம்மீன், பழம், அல்லது காய்கறி எதையும் விற்கப்படாதென்று பறைசாற்றுவித்து அல்லது வேறு வகையாக போதிய அறிவித்தல் கொடுத்துத் தடுப்பதும், அவ்வறிவித்தல் கொடுத்ததின் பின் அது விற்பனவுக்கென்று வைக்கப்பட்டாலும் வைக்கப்படாவிட்டாலும் சங்கம் அல்லது சங்கத்தலைவர் கட்டளை செய்யும்வண்ணம் அதைப் பிடித்து அழித்து விடும்படி செய்வதும், சங்கத்துக்கு நியாயமுறையாகும்.

14. எந்தச் சந்தை எல்லைக்குள்ளும் சாமான் ஏற்றுவதற்கு அல்லது இறக்குவதற்கு தேவையான நேரத்துக்கு மேல் எந்த வண்டியையாவது வாகனத்தையாவது ஒருவரும் விடப்படாது.

15. சங்கத்தால் ஒழுங்குபண்ணி வைக்கப்பட்ட ஓர் மூடிய பாத்திரத்துள் அன்றி ஓர் பொதுச் சந்தையில் குப்பை கூளம், எலும்புகள், மிருகத்தோல்கள், அல்லது அர்நாற்றமானவைகளாயிருக்கக் கூடிய அல்லது பொதுச் சுகத்துக்குக் கெடுதியாயிருக்கக் கூடிய வேறு பொருட்களை ஒருவரும் போடப்படாது.

16. மாடாட்டிப்பதற்கு சங்கத்தால் ஒழுங்கு செய்து வைக்கப்பட்ட ஓர் பொதுக் கொட்டிலில் அடிக்கப்படாத எந்த மிருகத்தின் இறைச்சியையேனும் அதின் எப்பாகத்தையேனும் ஒருவரும் ஒரு பொதுச் சந்தைக்குள்ளாவது சொந்தச் சந்தைக்குள்ளாவது கொண்டு வரவேனும் ஒரு பொதுச் சந்தையிலாவது சொந்தச் சந்தையிலாவது விற்கவேனும் விற்பனவுக்கென்று வெளியாக வைத்திருக்கவேனும் படாது.

17. சங்கத்தலைவர் ஒவ்வொரு சந்தையிலும் சங்கத்தின் வேலைக்காரரால் அல்லது அதன் குத்தகைக்காரனால் அறவிடப்படக்கூடிய வாடகைகளும் வேதனங்களும் குறிக்கப்பட்டிருக்கும் ஓர் அட்டவணையை ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் தமிழிலும் அச்சிட்டு ஒவ்வொரு சந்தையிலும் யாவரும் காணக்கூடிய ஓர் இடத்தில் தூக்கிவைக்கும்படி செய்யவேண்டும். அவ்வறிவித்தலினால் நியமிக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்கக்கூடிய தொகைகளைக் கேட்பது அல்லது வாங்குவது எவருக்கும் நியாய விரோதமானதாயிருக்கும்.

### இறைச்சிச் சந்தை.

விற்பனவுக்கென்று வெளியாக வைக்கப்பட்டிருக்கும் வெள்ளாடு அல்லது செம்மறியாட்டின் இறைச்சியைத்தவிர மற்றும் மிருகங்கள் ஒவ்வொன்றின் இறைச்சிக்கும் நாள் ஒன்றுக்கு 50 சதம்.

விற்பனவுக்கென்று வெளியாக வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு வெள்ளாட்டின் அல்லது செம்மறியாட்டின் இறைச்சிக்கும், நாள் ஒன்றுக்கு 25 சதம்.

### மீன் கடை.

பாவித்து வரும் தளத்தின் ஒவ்வொரு சதுரயாருக்கும், நாள் ஒன்றுக்கு 6 சதம்.

### காய்கறிக் கடை.

சந்தைக்குள் அல்லது சந்தைக்கு வெளியே பாவித்துவரும் நிலத்தின் ஒவ்வொரு சதுரயாருக்கும் வருஷா வருஷம் சங்கத்தால் நியமிக்கப்படலாகும் விகிதம் அல்லது விகிதங்கள்.

18. மீன் அல்லது இறைச்சி வைத்து விற்பதற்கு இடங்கொடுக்கப்பட்டிருக்கும் பொதுச் சந்தைகளில் அம்மீன் அல்லது இறைச்சி விற்பதற்கென்று புறம்பாக வைத்திருக்கும் இடங்களிலன்றி ஓர் பொதுச் சந்தையிலுள்ள வேறெந்த இடத்திலும் எவ்வகையான மீனையாவது இறைச்சியையாவது ஒருவரும் கொண்டு வரவேனும் விற்பனவுக்கென்று வைத்திருக்கவேனும் விற்கவேனும்படாது. அவ்விடங்கள், அம்மீன் அல்லது இறைச்சி தனித்தனி வைத்திருக்கப்படுவதற்கு வெளிக்காட்டப்படுவதற்கு அல்லது விற்கப்படுவதற்கென்று புறம்பாக உபயோகிக்கப்படல் வேண்டும்.

19. சௌக்கியாதார சங்கம் கடைகளுக்காக ஒவ்வொரு பொதுச் சந்தையிலும் தேவையென்று காணும் இடங்களைப் பிரித்துக் குறிப்பிட்டு விடலாம்.

20. பன்னிரண்டு மாசத்துக்கு மேற்படாத எக்காலத்துக்கும் ஓர் பொதுச் சந்தையிலுள்ள கடைகளை சௌக்கியாதார சங்கம் சங்கத்தவர் மூலம் குத்தகைச் சீட்டுக்கள் வாங்கிக்கொண்டு குத்தகை கொடுக்கலாம். சௌக்கியாதார சங்கம் நீதியென்றெண்ணுவதும் குத்தகைக்காரர் ஏற்றுக்கொள்ளுவதுமான நிபந்தனைகளை அக்குத்தகைச் சீட்டுக்கள் அடக்கியிருக்கலாம்.

21. மாசம் ஒன்றுக்கு தளமேற்பரப்பின் ஓர் சதுர அடிக்கு ஒரு சதவீதமான வாடகை அல்லது வேதனம் வாங்கிக்கொண்டு, பன்னிரண்டு மாசத்துக்குக் குறைந்த எக்காலத்துக்கும், காலியாயிருக்கும் எக்கடையையும் சங்கத்தலைவர் வாடகைக்குக் கொடுக்கலாம்.

22. மாடுகள், செம்மறியாடுகள், வெள்ளாடுகள், பன்றிகள் அல்லது வேறு மிருகங்களை, அவைகளை விடுவதற்கென்று புறம்பாக வைக்கப்பட்ட இடத்திலன்றி, ஓர் பொதுச்சந்தையின் வேறெந்தப் பாகத்துள்ளும் ஒருவரும் கொண்டு போகப்படாது. தனது வண்டியில், கரத்தையில் அல்லது வேறு வாகனத்தில் சாமான்கள் ஏற்றும்போது அல்லது அதிலிருந்து சாமான்கள் இறக்கும்போதல்லாமல் சந்தைக்குச்சேர்ந்த நிலத்தின் எப்பாகத்திலும் ஒருவரும் அவ்வண்டியை கரத்தையை, அல்லது வாகனத்தை விடப்படாது.

23. தொற்றுநோய், சர்மநோய், அல்லது பரம்பும் நோய் ஏதவும் பிடித்திருக்கும் அல்லது அந்நோயால் வருந்தும் எவரும் எக்கடையையும் ஆட்சிபண்ணி வரவேனும் எப்போசன பதார்த்தங்களையும் விற்பனவுக்கென்று வெளியாக வைத்திருக்கவேனும் படாது.

24. எப்பொதுச் சந்தை நிலத்திலேனும் அந்நிலத்திலுள்ள கட்டடம், குடிசை அல்லது கொட்டிலிலேனும், அல்லது அதற்கருகாகவுள்ள பெரிய ரோட்டுக்களிலேனும் ஒருவரும் கழிவுமாமிசம், அழுக்கு, ஊத்தை அல்லது குப்பை கொட்டவேனும், மலங்கழித்து அசங்கியப்படுத்தவேனும் படாது.

25. எப்பொதுச் சந்தையின் எல்லைக்குள்ளாவது, அதற்கருகாகவுள்ள பெரிய ரோட்டுக்களிலாவது ஒருவரும் எம்மிருகத்தையும் கொல்லவேனும், கொன்றமிருகத்தை உரிக்கவேனும், கீறிக்குடல் எடுக்கவேனும் படாது.

26. சந்தைக்காவலன் சந்தை துப்பரவாய் வைத்திருக்கப்படும்படியும், சந்தைக்குவரும் சனங்கள் உபவிதிகளைக் கைக்கொண்டொழுகும்படியும் செய்வதுமன்றி, அவ்வுபவிதிகளை எவரும் மீறும்போது அதைககுறித்து சங்கத்தலைவருக்கு அறிவிக்கவும் வேண்டும்.

### அப்பச்சாலைகள் (பேக்கறிகள்).

27. லைசென்ஸ் உத்தரவுபெறவேண்டிய இடங்களில் பின்வரும் காரியங்கள் செய்யப்பட்டிருந்தாலன்றி ஓர் அப்பச்சாலைவைத்து நடத்துவதற்கு ஓர் லைசென்ஸ் உத்தரவுப்பத்திரம்பெற ஒருவரும் உரித்துடையவர் ஆகமாட்டார்.

(a) மாப்பிசையும் அறை குறைந்தபட்சம் நீட்டில் 15 அடியும் அகலத்தில் 12 அடியுமாயிருக்கவேண்டும்.

(b) யாதும் தடையில்லாமல் ஊடாகக் காற்று வீசத்தக்கதாய் இரண்டு பக்கத்திலாகுதல் அகலத்தில் 7 அடிக்குக் குறையாததாய் காற்றுவெளிகள் வெளிப்பக்கமாக விருத்தல்வேண்டும்.

(c) போறணையின் கதவு மாப்பிசையு மறைக்குள் நேரே திறக்கிறதாய் இருக்கப்படாது. ஒவ்வொரு மாப்பிசையு மறைக்கும் மச்சுப் பலகை அடித்திருக்க வேண்டும்.

(d) ஒவ்வொரு அப்பச்சாலையும் அதற்குள் காற்று நன்றாய் வரத்தக்கதாகவும் வெளிச்சமுள்ளதாயு மிருத்தல் வேண்டும், சுவர்கள் சுண்ணச்சாந்து பூசப்பட்டனவா யிருப்பதோடு ஆறு மாசத்துக்கொருமுறை வெள்ளையடிப்பிக்கப்பட வேண்டும். தளத்துக்கு சிமெந்து போட்டிருக்க வேண்டும். வேண்டிய கான்களும் கட்டியிருக்க வேண்டும்.

28 லைசென்ஸ்காரன், அப்பமும் தீம்பண்டமும் செய்வதில் தளத்தைத் துப்புரவுபண்ணுவதற்காக இடத்திலிருந்து இடத்துக்குக் கொண்டுபோகக்கூடிய தொட்டிகளையும் மற்றும் பாத்திரங்களையும் உபயோகிக்க வேண்டும். அத்தொட்டிகளும் பாத்திரங்களும் மிகத் துப்புரவாய் வைத்திருக்கப்படும்படி அவன் செய்யவேண்டும்

29. லைசென்ஸ்காரன் இருபத்துநாலு மணித்தியாலத்துக்கு ஒரு தரமாகுதல் தளத்தைக் கவனமாய்ச் சுரண்டிக் கூட்டுவிக்க வேண்டும் கூட்டின குப்பையை உடனே ஒரு துவாரங்களில்லாத மூடப்பட்ட பாத்திரத்தில போடுவித்து அப்பச்சாலையிலிருந்து ஒவ்வொரு நாளும் கொண்டுபோகும்படி செய்ய வேண்டும்.

30. லைசென்ஸ்காரன் ஒவ்வொரு அப்பச்சாலையும் மெத்தத் துப்புரவாயும் ஏதும் ஒரு கான், கக்கூசு அல்லது குழிக்கக்கூசி லிருந்தேனும் அல்லது வேறு அசங்கியம் எதிலுமிருந்தேனும் உண்டாகும் நச்சுக்காற்று வாரதபடியும் வைத்திருக்கும்படி செய்யவேண்டும்.

31. லைசென்ஸ்காரன் ஒவ்வொரு சாம்பல்கிடங்கும் குழிக்கக்கூசும், பசளைக் கும்பமும் மூடாமலிருக்கும் கானும் கக்கூசும் அப்பச்சாலைக்குப் புறம்பாயும் அதிலிருந்து குறைந்த அளவில் 30 அடி தூரத்திலும் இருக்கும்படி செய்ய வேண்டும்.

32. அப்பமும் தீம்பண்டமும் செய்வதற்கு உபயோகிக்கப்படுவன ஒழிந்த வேறு தட்டு முட்டுகளை அல்லது சாமான்களை ஒருவரும் அப்பச்சாலையில் வைத்திருக்கப் படாது.

33. லைசென்ஸ்காரன் மேசைகளின் மேற்தட்டுகளை முதிர்ந்த இடைவெளியில்லாமல் சேர்ந்திருக்கும் பலகைகளால் அல்லது வேறு தீங்கில்லா ஊறுத பொருட்களால் செய்வித்துக்கொள்ள வேண்டும். அவைகளை ஒவ்வொரு நாளும் தேய்ப்பித்து சுத்தப்படுத்துவிக்கவும் வேண்டும்.

34. அப்பச்சாலையில் எவ்விதமான சாட்டிலும் ஒருவரும் ஒரு மிருகமும் வைத்திருக்கப்படாது.

35. தொற்றுவியாதி அல்லது பரம்பும் வியாதி உள்ளவனை அல்லது லைசென்ஸ்காரன் அல்லது அப்பச்சாலையின் பொறுப்பேற்றிருக்கும் எவரும் அறியக்கூடியதாய் கொஞ்சக் காலத்துக்குமுன் அப்படியான வியாதியுள்ளவனாய் இருந்தவனை அல்லது அப்படியான வியாதியுள்ளவனைக் கொஞ்சக் காலத்துக்குமுன் பராமரித்தவனை அப்பச் சாலைக்குள் போகிறதற்கு அல்லது அப்பம், விசுக்கோத்து அல்லது மிட்டாய் செய்வதற்கு அல்லது விற்பதற்கு லைசென்ஸ்காரன் அல்லது அப்பச் சாலையின் பொறுப்பேற்றிருக்கும் எவரும் விடப்படாது.

36. அப்பம் சுடுவதற்கான ஆயத்தங்கள் செய்யும் அல்லது அப்பம் சுடும் எல்லா ஆட்களும் அப்பம்செய்யத் தொடங்குவதற்குமுன் தங்களுடைய கைகளைக் கழுவவேண்டும். நெஞ்சையும் உடம்பையும் மூடக்கூடிய துப்புரவான வெள்ளை முன்தாங்கித் துணிகளையும் ஒரு வெள்ளைத் தொப்பி அல்லது தலைப்பாகையையும் அவர்கள் அணிந்துகொள்ள வேண்டும்.

37. லைசென்ஸ்காரன் அப்பம், விசுக்கோத்து, மிட்டாய் செய்பவர்களின் பாவிப்புக்காக சுத்தமான தண்ணீரும் சவக்காரமும் வைத்துக் கொடுக்கவேண்டும்.

38. லைசென்ஸ்காரன் விற்பனவுக்காக வெளியே வைத்திருக்கும் எல்லா அப்பத்தையும், விசுக்கோத்தையும், மிட்டாயையும், இனிப்புப் பண்டங்களையும் ஈ இலையான் போகக்கூடாத நேர்த்தியாய் செய்யப்பட்ட கண்ணாடிப் பெட்டிகளில் வைத்திருக்கவேண்டும். அந்தப் பெட்டிகள் மெத்தத் துப்புரவாய் வைத்திருக்கப்படும்படி அவன் செய்ய வேண்டும்.

39. லைசென்ஸ்காரன் அப்பம் சுடும் வேலையில் பாவிக்கப்படுவதற்காக நல்ல சுத்தமான மாவும் தண்ணீரும் மற்றும் பதார்த்தங்களும் வைத்துக் கொடுக்க வேண்டும். மேலும், நிலத்தில் 3 அடிக்கு மேலே யிருக்கும் மேடையில் மா வைத்திருக்கப்படும்படியும் அவன் செய்யவேண்டும்.

40. லைசென்ஸ்காரன் அப்பச்சாலை யிருக்கும் இடத்தைச் சுற்றியுள்ள எல்லா அழுக்கையும் ஒவ்வொரு நாளும் அகற்றுவித்து கான்களை நன்றாய்க் கழுவுவித்துக்கொள்ள வேண்டும்.

41. நிலத்திலிருந்து முகடுமட்டுமுள்ள ஓர் மறைப்பால் நன்றாகப் பிரிக்கப்பட்டிருந்தாலொழிய, அப்பச்சாலை மட்டத்துக்கு இருக்கிறதும் அக்கட்டடத்தின் ஓர் பகுதியாயிருக்கிறதுமான எந்த இடத்தையும் படுக்குமிடமாக ஒருவரும் பாவிக்கப்படாது.

42. நியாயமான எல்லா நேரங்களிலும் அப்பச் சூடு நடக்கும் எந்த நேரத்திலும் எந்த அப்பச் சாலைக்குள்ளும் அப்பம் விற்கப்படும் எந்த இடத்துக்குள்ளும் போய் அவ்விடத்தைச் சோதிப்பது சௌக்கியாதாரச்சங்கப் பரிசோதகருக்கு அல்லது சங்கத் தலைவரால் எழுத்துமூலமாக அதிகாரம் கொடுக்கப்பட்ட வேறெவருக்கும் நியாயமுறையாகும்.

43. ஒவ்வொரு அப்பச்சாலையிலும் இந்த உபவிதிகள் அடங்கிய பிரதி ஒன்று மட்டை போடப்பட்டு யாவரும் காணக்கூடிய ஓர் பிரசித்தமான இடத்தில் லைசென்ஸ்காரனால் தூக்கிவிடப்பட வேண்டும்.

(c) சாப்பாட்டுக் கடைகளும் தேத்தண்ணீர் கோப்பிக் கடைகளும்.

44. ஓர் சாப்பாட்டுக்கடையின் அல்லது தேத்தண்ணீர் கோப்பிக் கடையின் லைசென்ஸ்காரன் சங்கத் தலைவர் திருப்திப்பட்டுக்கொள்ளத்தக்கதாக அக்கடையைத் துப்புரவாயும் சுகத்துக்கேற்ற மாதிரியாயும் வைத்துக்கொள்ள வேண்டும்.

45. லைசென்ஸ்காரன் சாப்பாட்டுக்கடை அல்லது தேத்தண்ணீர்கோப்பிக்கடை எதிலும் பாவிக்கப்படும் அல்லது அக்கடைக்குச்சேர்ந்த எல்லாப் பாத்திரங்களும் வீட்டுத் தளபாடங்களும் மற்றும் சாமான்களும் எப்பொழுதும் துப்புரவாய் வைத்திருக்கப்படும்படி செய்யவேண்டும்.

46. தொற்று வியாதி அல்லது பரம்பும் வியாதியுள்ளவனை அல்லது லைசென்ஸ்காரன் அல்லது சாப்பாட்டுக் கடையின் அல்லது தேத்தண்ணீர் கோப்பிக்கடையின் பொறுப்பேற்றிருக்கிறவன் அறியக்கூடியதாக கொஞ்சக் காலத்துக்குமுன் அப்படியான வியாதியுள்ளவனா யிருந்தவனை அல்லது அப்படியான வியாதியுள்ளவனைக் கொஞ்சக் காலத்

துக்குமுன் பராமரித்தவனை லைசென்ஸ்காரன் அல்லது சாப்பாட்டுக் கடையின் அல்லது தேத்தண்ணீர் கோப்பிக் கடையின் பொறுப்பேற்றிருப்பவன் அக்கடையில் அல்லது அதற்குக்கிட்ட வேலைபார்க்கிறதற்கு விடப்படாது.

47. லைசென்ஸ்காரன் பாவிக்கப்படும் சீனியை கண்ணாடி மூடி போட்ட அகன்ற வாயுள்ள போத்தில்களில் வைத்திருக்கப்படும்படி செய்யவேண்டும்.

48. லைசென்ஸ்காரன் விற்பனவுக்காக வைத்திருக்கும் எல்லாப் பணிகாரங்களையும் இனிப்புப் பண்டங்களையும் ஈ இலையான் போகக்கூடாதபடி நன்றாய்ச் செய்யப்பட்ட கண்ணாடிப் பெட்டிகளில் வைத்திருக்கப்படும்படியும், அக்கண்ணாடிப் பெட்டிகள் மெத்தத் துப்புரவாய் வைத்திருக்கப்படும்படியும் செய்யவேண்டும். இலையான்கள் அசுசிப்படுத்தாதபடி மற்றும் போசன பதார்த்தங்களையும் அவ்வண்ணம் மூடிவைத்துக்கொள்ளும்படி அவன் செய்யவேண்டும்.

49. லைசென்ஸ்காரன் பாவிப்புக்குக்கூடாத தேத்தண்ணீர், கோப்பி, பால் அல்லது சாப்பாட்டு மிச்சம் அல்லது பாவிப்புக்குக்கூடாத சமையல் சாமான்கள் யாவையும் சரியான ஒரு பாத்திரத்தில் சேர்த்து ஒவ்வொரு நாளும் அகற்றிவிடும்படி செய்யவேண்டும்.

50. எந்தச் சாப்பாட்டுக்கடை அல்லது தேத்தண்ணீர் கோப்பிக்கடை யிருக்கும் இடத்திலும் ஒருவரும் கலந்த பால் விற்கவேனும், விலைக்கு வாங்கும்படி கேட்கவேனும், விற்பனவுக்கென்று வெளியாக வைத்திருக்கவேனும் படாது.

51. இந்த விதானத்தின் நோக்கத்திற்காக "கலந்த பால்" என்பது தண்ணீர் அல்லது வேறு புற நீர்ப்பதார்த்தம் அல்லது வஸ்து சேர்க்கப்பட்டதால் பழுதாக்கப்பட்ட பால் எனப் பொருள்படும்.

52 லைசென்ஸ்காரன் இந்த உபவிதிகள் அடங்கிய ஓர் பிரதியை மட்டைபோட்டு அச்சாப்பாட்டுக்கடை அல்லது தேத்தண்ணீர் கோப்பிக்கடை ஒவ்வொன்றிலும் யாவரும் காணக்கூடிய ஒரு இடத்தில் தூக்கிவைக்கவேண்டும்

## D.—இறைச்சிக் கடைகள்.

53. லைசென்ஸ்காரன் இறைச்சி வைத்திருக்கும் ஒவ்வொரு அறையும் மிகத் துப்புரவாய் வைத்திருக்கப்படும்படி செய்யவேண்டும்.

54. லைசென்ஸ்காரன் ஓர் இறைச்சிக்கடையில் பாவிக்கப்படும் ஒவ்வொரு மேசையும் துத்தநாகத்தால் அல்லது வேறு ஊறுத தீங்கற்ற பொருளால் மூடப்பட்டிருக்கும்படியும், அம்மேசைகளும் இறைச்சிவைத்து வெட்டும் மரக்குத்தியும், எல்லாக் கருவிகளும் மெத்தத் துப்புரவாய் வைத்திருக்கப்படும்படியும் செய்யவேண்டும்.

55. லைசென்ஸ்காரன் மேசையையும் இறைச்சிவைத்து வெட்டும் மரக்குத்திகளையும், கருவிகளையும் பாவித்து முடிந்தவுடன் தண்ணீரினால் சுழுவுவித்து ஓர் துப்புரவான தடித்த கற்றையினால் உரைஞ்சித் துடைப்பித்துக்கொள்வதுமன்றி, இறைச்சி தூக்குகிறதற்குப் பாவிக்கும் எல்லாம் கொளுவிகளும் மினுக்கப்படும்படியும் கறைபிடியாமல் வைக்கப்படும்படியும் செய்யவேண்டும்.

56. லைசென்ஸ்காரன், எல்லாக் கழிவுகளையும் விற்றுக்கொள்ளக்கூடாத பதார்த்தங்களையும், கழிவு மாமிசத்தையும் சேர்ப்பித்து, அவைகள் உடனே கொண்டுபோகப்படாவிட்டால், உள்ளே துத்தநாகத்தகடு பிடிக்கப்பட்டதும் துவாரங்களுள்ள துத்தநாக மூடியுள்ளதுமான பெட்டியில் வைப்பிக்க வேண்டும். அத்துவாரங்கள் இலையான்கள் உள்ளேபோகக்கூடாத பருப்பமுள்ள துவாரங்களாயிருத்தல் வேண்டும்.

57. தொற்றுவியாதி அல்லது பரம்பும் வியாதியுள்ளவன் அல்லது லைசென்ஸ்காரன் அல்லது இறைச்சிக்கடையின் பொறுப்பேற்றிருக்கும் எவனும் அறியக்கூடியதாய் கொஞ்சக்காலத்துக்குமுன் அவ்வியாதியுள்ளவனாயிருந்தவனை அல்லது அவ்வியாதியுள்ளவனைக் கொஞ்சக்காலத்துக்குமுன் பராமரித்தவனை அவ்விறைச்சிக்கடையில் வேலைபார்க்கிறதற்கு லைசென்ஸ்காரனேனும் இறைச்சிக்கடைப் பொறுப்பேற்றிருப்பவனேனும் விடப்படாது.

58. ஒவ்வொரு இறைச்சிக்கடைக்காரனும் கழிவுபொருட்கள் போடுகிறதற்காக இடத்திலிருந்து இடத்துக்குக் கொண்டுபோகக்கூடிய தகரவாளி அல்லது லோகத்தால் செய்த பாத்திரம் ஒன்று வைத்திருக்கவேண்டும்.

59. ஒவ்வொரு இறைச்சிக்கடையும் அங்கு நடக்கும் வியாபாரத்தின் நிருவாகமும் ஒழுங்கும் சௌக்கியாதார சங்கத்தின் தலைவரால் அல்லது அச்சங்கத்தலைவரால் முறைப்படி அதிகாரம் கொடுக்கப்பட்ட எவராலும் எந்தநேரமும் சோதிக்கப்படுவதற்கு எதுவாயும் அடங்கியதாயுமிருத்தல் வேண்டும்.

60. லைசென்ஸ்காரன் ஒவ்வொரு இறைச்சிக்கடையிலும் இந்த உபவிதிகள் அடங்கிய ஓர் பிரதியை யாவரும் காணக்கூடிய ஓர் இடத்தில் மட்டைபோட்டுத் தூக்கிவிட வேண்டும்.

## E—காலைகள்.

61. ஒவ்வொரு லைசென்ஸ் முடிபட்ட காலையும் சங்கத்தலைவரால் பதிவுசெய்யப்பட வேண்டும். ஒவ்வொரு காலையின் வாசலிலும் "பதியப்பட்ட காலை இலக்கம் ——" என்ற சொற்களும் சொந்தக்காரனுடைய பெயரும் பூச்சுமையால் எழுதப்பட்ட ஓர் விளம்பரப்பலகை லைசென்ஸ்காரனால் தூக்கி வைக்கப்படவேண்டும்.

62. லைசென்ஸ்காரன் ஒவ்வொரு காலையையும் அல்லது வண்டிகள் மாடுகள் வந்து தரிக்குமிடத்தையும் நன்றாக மட்டம்பண்ணுவித்து அங்குள்ள தண்ணீர் கான்கள் வழியாய் ஓடும்படி செய்வித்து, நிலம் கடினமாயும் மட்டமாயுமிருக்கத்தக்கதாய் அதற்குக் கல்லுப்பதிப்பித்து அல்லது சல்லிக்கல்லுப்போட்டு இறுக்குவித்து விடவேண்டும். அவன் அக்காலையை அல்லது தரிக்குமிடத்தை துப்புரவாயும் சுகத்துக்கேற்ற மாதிரியாயும் வைத்திருக்கும்படி செய்து, ஒவ்வொரு நாளும் நன்றாகச் சுத்தப்படுத்துவித்து எல்லாச் சாணியையும் அழுக்கையும் குடியிருக்கும் வீட்டிலுமிருந்து 50 யார் தூரத்திலுள்ள ஓர் இடத்தில் கொண்டுபோய்ப் போடப்படும்படி செய்யவேண்டும். மேற்சொல்லியபடி ஒவ்வொரு நாளும் துப்பரவுபண்ணுகிறதற்கு இடைஞ்சலாய் இராவண்ணம் எல்லாச் சாமான்கள், பொருட்கள், வஸ்துக்களையும் அக்காலையில் அல்லது தரிக்குமிடத்தில் வைத்திருக்கும்படியும் அவன் செய்யவேண்டும்.

63. லைசென்ஸ்காரன் ஒவ்வொரு குதிரைமாலையும் மாட்டுக் கொட்டிலையும் ஆடுமாடு தரிக்குமிடத்தையும் ஒவ்வொரு நாளும் நன்றாகத் துப்புரவுபண்ணுவித்து, துப்புரவாயும் சுகத்துக்கேற்ற மாதிரியாயும் வைத்திருக்கப்படும்படி செய்யவேண்டும். குடியிருக்கும் வீட்டிலுமிருந்து 50 யார் தூரத்திலுள்ள ஓரிடத்திற்கு சாணியும் அழுக்கும் அள்ளிக் கொண்டுபோகப்படும்படியும் அவன் செய்யவேண்டும்.

64. ஒவ்வொரு காலையும் சங்கத்தின் உத்தியோகஸ்தர்களால் அல்லது சங்கத்தலைவரால் எழுத்துமூலமாக அதிகாரம் கொடுக்கப்பட்ட வேறெவராலும் நியாயமான எல்லா நேரங்களிலும் சோதிக்கப்படுவதற்கு ஏதுவாயிருக்கும். இந்த உபவிதிகளின்படி சங்கத்தலைவர் செய்வதற்கு அதிகார முடையவராயிருக்கும் எல்லா கட்டளைகளும் எழுத்துமூலம் கொடுக்கப்பட வேண்டும்.

## F.—பொது.

65. ஓர் சௌக்கியாதாரசங்கப் பட்டணஎல்லைக்குள் எவரும் ஓர் அப்பச்சாலையை, சாப்பாட்டுக்கடையை, தேத்தண்ணீர் அல்லது கோப்பிக்கடையை அல்லது மாட்டுக் காலையை சௌக்கியாதாரசங்கத் தலைவரிடமிருந்து ஓர் வருஷாந்த லைசென்ஸ்பெறாமல் வைத்திருக்கப்படாது. மேற்சொல்லிய விதானங்கள் எதையும் கைக்கொள்ளத் தவறும் எவருக்கும் அந்த லைசென்ஸ் கொடாமல்விட சங்கத்தலைவருக்கு இதனால் அதிகாரம் கொடுக்கப்படுகின்றது. லைசென்ஸ் கொடுத்த வருஷத்தின் மார்கழி (டிசெம்பர்) மாதம் 31 ந் தேதி மட்டும் அல்லது லைசென்ஸ் பத்திரம் அழிக்கப்படும்வரையும் ஒவ்வொரு லைசென்ஸ் பத்திரமும் பெலப்புடையதாயிருக்கும். அந்த லைசென்ஸ் அதிகாரமந்திரசபையோடு கூடிய தேசாதிபதியவர்களின் அனுமதியோடு சௌக்கியாதாரசங்கம் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கும் சலார்களுக்கும் உட்பட்டதாயிருக்கும்.

66. மேற்சொல்லிய விதானங்களை மீறினதினால் இரண்டுமுறை அல்லது அதிகம் தரங்களில் எக்கோட்டாராலேனும் எவரும் குற்றப்படுத்தப்பட்டிருந்தால், சௌக்கியாதார சங்கத்தலைவரால் இந்த அதிகாரத்தின் கீழ் அந்த ஆளுக்குக் கொடுக்கப்பட்ட லைசென்ஸ்உத்தரவை அழிப்பது அப்படி இரண்டாம் அல்லது பிந்தியமுறை அபராத ஸ்தாபனம் எழுதும் கோட்டாருக்கு நியாயமுறையாகும். அப்படி ஓர் கோட்டால் லைசென்ஸ் அழிக்கப்படும்போது தம் நற்கருத்தின்படி அந்த ஆளுக்கு புதிய லைசென்ஸ் கொடுக்க மறுப்பதற்கு சௌக்கியாதாரசங்கத் தலைவருக்குத் தத்துவமுண்டு. ஆயின் எந்தப் பிரசித்த கூட்டத்தாராலேனும் ஸ்தாபிக்கப்பட்ட அல்லது அவர்கள் பொறுப்பிலுள்ள சந்தைகளிலிருக்கும் கடைகளுக்கு இந்த விதானங்கள் பொருந்ாதனவாம்.

## G.—வண்ணான் துறைகள் (சீலைவெளுக்கும் இடங்கள்).

67. இந்த விதானங்களின் நோக்கத்துக்காக சீலைவெளுப்பவன் என்பது கூலிக்கு சீலைகள் வெளுக்கும் தொழில் நடத்திவரும் எவனும் எனப் பொருள்படும்.

68. சீலைவெளுக்கும் ஒவ்வொருவனும் சங்கத்தலைவரால் கேட்கப்படும்போது, ஊத்தைப்புடவை வைப்பதற்காக புறம்பான அறையொன்று வைத்திருக்க வேண்டும். அவ்வறை காற்று நன்றாய் உலாவத்தக்கதாய்க் கட்டப்பட்டு எப்பொழுதும் துப்புரவாய் வைத்திருக்கப்படுவதுமன்றி வருஷத்துக்கு இரண்டுமுறை வெள்ளை அடிக்கப்படவும் வேண்டும்.

69. சீலைவெளுப்பவன் ஆட்கள் வசிப்பதற்கு உபயோகிக்கப்படும் எந்த அறையிலும் ஊத்தைப்புடவை வைக்கப்படாது.

70. சௌக்கியாதார சங்கத்தலைவர் ஊர்ச்சுகம் தேர்ச்சியடைந்த நல் நிலையில் இருப்பதற்காக புறம்பான இடங்கள் தேவையென்று காணும்போது அப்படியான இடங்களை நியமிக்கவேண்டும். அறிவித்தற்பலகையால் அவ்விடங்கள் காண்பிக்கப்படும்.

71. சீலைவெளுப்பவன் ஒருவனுக்கு அல்லது அவன் குடும்பத்தில் அல்லது வீட்டிலுள்ள எவருக்கும் தொற்றுநோய் அல்லது பரம்பும் நோய் எதுவும் உண்டுபடுமாகில் அவன் 24 மணித்தியாலத்திற்குள் அதைக்குறித்து சௌக்கியாதார பரிசோதகர் மூலம் அல்லது பொலீஸ் தலைமைக்காரன்மூலம் சங்கத்தலைவருக்கு அறிவிக்கவேண்டும்.

72. சீலைவெளுப்பவன் ஒருவனுக்கு அல்லது அவன் குடும்பத்தில் அல்லது வீட்டிலுள்ள எவருக்கும் தொற்றுநோய் அல்லது பரம்பும் நோய் எதுவும் உண்டுபடுமாகில், சீலைவெளுக்குமிடத்தில் எல்லாவேலையும் உடனே நிறுத்தப்படவேண்டும், மேலும் சங்கத்தலைவரின் விசேஷ உத்தரவோடு மாத்திரமன்றி, சீலைவெளுக்கு மிடத்துக்கு அல்லது அங்கிருந்து வெளியே அந்நோய் துவங்கின பிற்பாடும் அது நடக்கும்போதும் புடவைகள் ஒன்றும் கொண்டுபோகப்படாது.

73. சௌக்கியாதார சங்கத்தலைவரின் அல்லது சௌக்கியாதார முதல் உத்தியோகஸ்தரின் உத்தரவின்றி, வீட்டிலுள்ள ஒருவர் தொற்றுநோய் ஒன்றால் பீடிக்கப்பட்டிருக்கிறார் என்று எண்ண இடமிருக்கும் எந்த வீட்டிலுமிருந்து சீலை வெளுப்பவன் எவனும் ஊத்தை உடுப்புக் கொண்டுபோகப்படாது.

74. சீலைவெளுப்பவன் ஒவ்வொருவனும் சௌக்கியாதார சங்கத்தலைவரால் அல்லது சௌக்கியாதார முதல் உத்தியோகஸ்தரால் அல்லது அவருடைய துணைவரால் கேட்கப்படும்போது, தான் புடவைவெளுக்கும் ஆட்களின் பெயர்களைக் காட்டும் ஓர் இடாப்புக் கொடுக்கவேண்டும்.

[9E (2) (f) ம் பிரிவு.]

## அருவருப்பு உண்டாக்கக்கூடிய தொழில்கள்.

1. இந்த விதானங்களின் நோக்கத்திற்காக விக்கினமானவும் அருவருப்பு உண்டாக்கக்கூடியனவுமான தொழில்கள் பின்வருவன எவற்றையும் கருதி உளப்படுத்தும் :—

2. செயற்கையான பசளை சேகரித்தல் அல்லது செய்தல் இரத்தம் அல்லது கழிவுமாமிசம் அவித்தல், இரத்தத்தை அல்லது கழிவு மாமிசத்தை உலர்த்தல், தோல் பதனிடுதல், கொழுப்புருக்குதல், கொழுப்பு வடித்தல், சவுக்காரம் செய்தல் தென்னமட்டை ஊறவைத்தல் தும்புக்கு சாயம் தோய்த்தல், இயந்திர உதவியால் தேங்காய்நெய் வடித்தல், தும்பு சேகரித்தல், அல்லது ஆக்குதல், தோல், எலும்பு செயற்கையான பசளை, அல்லது செயற்கையான பசளை உண்டாக்குவதற்கு வேண்டிய பொருட்கள் சேகரித்தல், 5 அந்தர் நிறைக்கு மேற்பட்ட கருவாடு சேகரித்துவைத்தல், செங்கல்லும் ஓடுகளும் செய்தல், சுண்ணாம்பு நீற்றுதல், சோடா லெமனட் செய்தல், மின்னரம சத்தப்படுத்தல் அல்லது சேகரித்து வைத்தல்.

3. சௌக்கியாதார சங்கத்தின் எல்லைகட்குள்ளேயிருக்கும் எந்தக் காணியின் அல்லது வளவின் சொந்தக்காரனாகுதல் ஆட்சிக்காரனாகுதல் வேறு எவருமாகுதல் அவ்வளவில் அல்லது நிலத்தில் விக்கினமான அல்லது அருவருப்பு உண்டாக்கக்கூடிய எந்த வியாபாரம் அல்லது கைத்தொழிலையும், சௌக்கியாதார சங்கத்தலைவரின் லைசென்ஸ் இன்றி நடத்தப்படாது. மேலும் இந்த விதானங்கள் எதையும் கைக்கொள்ளத் தவறும் எவருக்கும் அவ்வித லைசென்ஸ் கொடாது விடு

வதற்கு சௌக்கியாதாரசங்கத் தலைவருக்கு அதிகாரமுண்டு. அதிகாரமந்திரசபையோடு கூடிய தேசாதிபதி யவர்களின் அனுமதிப்படி காலத்துக்குக் காலம் சௌக்கியாதார சங்கம் விதிக்கும் சலார்கள் அவ்வித லைசென்ஸ் பத்திரங்கள் பெறுவதற்காகக் கட்டப்படவேண்டும்.

4. எவன் ஒருவனுவது இந்த விதானம் எதையும் மீறியதற்காக இரண்டு முறை அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகளில் எக்கோட்டாராலும் குற்றப்படுத்தப்பட்டிருந்தால், அந்த இரண்டாம் அல்லது பிந்தியமுறை அபராதஸ்தாபனம் எழுதும் கோட்டாருக்கு இவ்வதிகாரத்தின் கீழ் சௌக்கியாதார சங்கத்தலைவரால் அவனுக்குக் கொடுக்கப்பட்ட லைசென்சை அழித்துவிடுவது நியாயமுறையாகும். ஒரு கோட்டால் ஓர் லைசென்ஸ் அவ்வண்ணம் அழிக்கப்பட்டதின் பின் அந்த ஆளுக்கு தம் நம்கருத்தின்படி ஓர் புது லைசென்ஸ் கொடுப்பதற்கு மறுக்க சௌக்கியாதார சங்கத்தலைவருககு அதிகாரம் உண்டு.

5. லைசென்ஸ்காரன் மேற்சொலிய வியாபாரங்கள் முயற்சிகள், கைத்தொழில்கள் எவைகளையும் நடத்துவதற்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் அவைகளிலிருந்து துர்க்கந்தம் புறப்படாமலும் அசங்கியம் உண்டாகாமலும் தடுக்கத் தக்கதாக சேர்த்து வைக்கப்படும்படி செய்யவேண்டும். துர்க்கந்தம் புறப்படக்கூடியனவும் அருவருப்பு உண்டாக்கக் கூடியனவுமான சாமான்களை, யாதும் ஓர் போக்குவரவான வழியால் கொண்டுபோக வேண்டியதாயிருந்தால் அவைகளை உறிஞ்சக்கூடாத, மூடப்பட்ட கொள்கலங்களில விட்டு, அல்லது யாதும் அசங்கியம் உண்டாகாதவண்ணம், கொண்டு போகப்படும்படியும் அவன்செய்ய வேண்டும்.

6. லைசென்ஸ்காரன் கைத்தொழில்வேலை எதுவும் நடக்கும்போது வெளியேவரும் அருவருப்பு உண்டாகக்கூடிய வாயு அல்லது ஆவி மோசம் வருவிக்கக்கூடாததாயிருக்கும்படி செய்வதற்காக சாரியப்படக்கூடிய எத்தனங்கள் செய்வித்துக் கொள்ள வேண்டும். அவ்வித வாயு அல்லது ஆவி ஒன்றில் வெளியில்போய்ச் செறிந்து கெடுகி அல்லது சேதம் விளைவிக்காதபடி வேண்டிய உயரத்திலும் தக்கமாதிரியாகவும் வெளிக்காற்றிலே தள்ளப்படும்படி அல்லது நேரே நெருப்புக்கூடாய் அல்லது ஒரு கனிகரணி யந்திரத்துக்கூடாகப் போகும்படி அவன்செய்ய வேண்டும். மேலும் எல்லா வளவுகளிலும் வேண்டிய கான்கள் இருக்கும்படியும் அக்கான்கள் மிகநன்ருக வைத்திருக்கப் படும்படியும்; தினமும் கழுவப்படும்படியும் அவன் செய்யவேண்டும்.

7. லைசென்ஸ்காரன் தளத்தை உடைவுகள், பழுதுகள் இல்லாமல் வைத்திருக்கும்படியும் தினமும் சுத்தப்படுத்தப்படும்படியும் செய்யவேண்டும் சங்கத்தலைவர் கட்டளைசெய்திருந்தால் சுவறககூடாத வஸ்துவினுல் அத்தளங்கள் கட்டப்பட வேண்டும்.

8 லைசென்ஸ்காரன் சுவர்களில் அழுக்குச் சவருவண்ணம் அச்சுவர்களை நல்ல நிலையில் வைத்திருக்கப்படும்படியும் அவைகள் ஜுன் மாசத்திலும் டிசெம்பர் மாசத்திலுமாக வருஷத்துக்கு இருமுறையும் சௌக்கியாதார சங்கத் தலைவரால் அல்லது சௌக்கியாதார முதல் உத்தியோகஸ்தரால் கட்டளைபண்ணப்பட்டால வேறு காலங்களிலும் வெள்ளை யடிப்பிக்கப்படும்படியும் செய்யவேண்டும்.

9 லைசென்ஸ்காரன் ஆயுதங்களும் பாத்திரங்களும் உட்பட எல்லாக் கருவிகளும் துப்புரவாக வைத்திருக்கப்படும்படியும், கூடுமானுல் தினமும் சுத்தம்பண்ணப்படும்படியும் செய்யவேண்டும்.

10. லைசென்ஸ்காரன் கழிவு, குப்பை, சீவுத்துண்டுகள், சிதைவுகள், இடைப்பொருட்கள், வளவிலே வேறு வியாபார முயற்சிக்கு உடனே உபயோகிக்கப்படுவதற் கென்றுல் ஒழிய, தினமும் வளவிலே யிருந்து மூடப்பட்ட பாத்திரங்களில் கொண்டுபோகப்படும்படி செய்யவேண்டும்.

11. லைசென்ஸ்காரன் தோல் அல்லது வேறு பொருட்கள் கழுவுவதற்கு அல்லது நனையவைப்பதற்கு உபயோகிக்கப்படும் வக்குகளிலிருந்து துர்க்கந்தம் எழும்பாவண்ணம் அவசியமென்று காணப்படும்போதெல்லாம் அவைகளிலுள்ள அழுக்கு நீரை வெளியே ஊற்றுவித்து அவ்வக்குகளைத் துப்புரவு பண்ணுவிக்க வேண்டும்.

12 அருவருப்பு உண்டாக்கக்கூடிய முயற்சியை அல்லது கைத்தொழிலை நடத்தும், அல்லது அப்படியான முயற்சி அல்லது கைத்தொழில் செய்யப்படும் நிலத்தை அல்லது வளவை உடைய அல்லது ஆட்சிசெய்யும் எவரும் யாதோர் அழுக்கான, துர்நாறமுள்ள, அல்லது அருவருப்பான நீரை அல்லது வேறு ஜலத்தை அதற்குள் செலுத்துவதால் அல்லது ஓடவிடுவதால், அல்லது அங்கே யாதோர் அருவருப்பான பதார்த்தத்தை ஊற்றுவதால் அல்லது கழுவிவிடுவதால் எந்த ஆற்றையாவது, நீரோட்டத்தையாவது, வெட்டாற்றையாவது, வாய்க்காலையாவது கிணற்றையாவது குளத்தையாவது, தடாகத்தையாவது, அசுசிப்படுத்தவேனும், வேறெந்தவிதமாயாவது அவ்வாறறை, நீரோட்டத்தை, வெட்டாற்றை, வாய்க்காலை, கிணற்றை, குளத்தை அல்லது தடாகத்தை அழுக்குப்படுத்தவேனும் படாது.

13. மேற்சொல்லிய தொழில்கள் நடத்தப்படும் இடங்களை நியாயமான எல்லா வேளைகளிலும் சோதிப்பது சௌக்கியாதார சங்கத்தலைவருக்கும், சங்கத்தலைவரால் முறைப்படி அதிகாரம் கொடுக்கப்பட்ட எவருக்கும் நியாயமுறையாகும்.

14. செங்கல்லு அல்லது ஓடுகள் செய்வதற்கு அல்லது கட்டடவேலைக்கு அல்லது வேறெந்த நோக்கத்துக்காவது களிமண், கல்லு, கிறவல், கபுக், அல்லது வேறு பொருட்கள் கிண்டி எடுக்கப்படும் நிலத்தை உடையோன அல்லது ஆட்சி செய்வோன் அங்கே வேண்டிய கான்கள் கட்டுவித்து வெட்டப்பட்ட குழிகளிலும் அகழ்களிலும் தண்ணீர் தங்கி நில்லாதபடி அவைகளை மூடுவிகக வேண்டும்.

15. சௌக்கியாதார சங்கத்தால் அநுமதிகொடுக்கப்பட்ட இடங்களில் ஒழிய வேறு இடங்களில் ஒருவரும் காயப்போடுவதற்காக மீன் பரப்பி அல்லது வெளியாக வைக்கப்படாது.

### சோடாலெமனட் செய்தல்.

16. (1) சௌக்கியாதார சங்கத்தின் எல்லைக்குள், சங்கத்தலைவருக்கு ஒரு மாதத்துக்கு முன் எழுத்து மூலமாக அறிவியாமல் ஒருவரும் விற்பனவுக்காக சோடாலெமனட் முதலிய பானங்கள் செய்யத் துவங்கப்படாது.

(2) (a) சோடாலெமனட் முதலியவை செய்யுமிடம் எந்தக் காலையிலிருந்தும், குதிரைமாலிலிருந்தும் அல்லது மிருகங்களை இராவில் அல்லது பகலில் விடும் வேறு கட்டடத்திலிருந்தும் அல்லது எந்தக் கக்கூசிலிருந்தும், கக்கூசுக் கிடங்கிலிருந்தும் 150 அடிக்கு மேற்பட்ட தூரத்தில் உள்ளதாயும்,

(b) சோடாலெமனட் முதலியவை செய்யுமிடங்கள் யாவும் நல்ல வெளிச்சம்உள்ளனவாயும், நன்ருய்க் காற்று வரக்கூடியனவாகவும், மச்சுப்பலகை போடப்பட்டனவாகவும், சீமெந்து, நிலம் உள்ளனவாகவும் அழுக்குகளைக் கழுவித் தள்ளக்கூடியமாதிரியாகக் கட்டப்பட்ட கான்கள் உள்ளனவாகவும், அழுக்கும் தூசியும் இல்லாமல் துப்புரவாக வைக்கப்பட்ட வைகளாகவும்,

(c) அப்பானங்கள் செய்வதில் பாவிக்கப்படும் தண்ணீர் சங்கத்தலைவரின் அனுமதிபெற்றதும் அசுசிப்படாதபடி போதியளவு பாது காக்கப்பட்டதுமான இடத்திலிருந்து கொண்டுவரப்பட்டதாயும், சோடாலெமனட்முதலியவைசெய்கிற இடத்துக்குக்கொண்டுபோகும் வழியில் தண்ணீர் அழுக்குப்படாதபடிக்கு ஏற்றவழிவகைகள் உபயோகித்துக்கொண்டு போகப்பட்டவைகளாயும், சோடாலெமனட் முதலியவை செய்கிறதற்குப் பாவிககப்படும் யந்திரங்களோடு சேர்த்து தூசி போகாதபடி இறுக்கமான மூடிகளுள்ள நன்ருய்க் கட்டப்பட்ட வகைகளில் அல்லது தொட்டிகளில் விடப்பட்டதாயும், இருந்தாலன்றி, ஒருவரும் சோடாலெமனட் முதலியவை செய்யப்படாது.

17. லைசென்ஸ்காரன் சோடாலெமனட் முதலியவை செய்கிறதற்குப் பாவிக்கப்படும் தண்ணீர் முழுவதும் யந்திரத்தோடு சேர்ககப்பட்ட பூவேல் வடிகலத்துக்கு அல்லது சங்கத்தலைவரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு வடிகலத்துக்கு ஊடாகச் செல்லும்படி செய்ய வேண்டும்; ஆயின் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பொதுஇடத்திலிருந்து கொண்டுவரப்படும் தண்ணீரின் விஷயத்தில் இவ்விதானத்தில் சொல்லியபடி செய்யப்பட வேண்டியதில்லை என்று விலக்குவதற்கு சங்கத்தலைவருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

18. லைசென்ஸ்காரன் சோடா லெமனட் முதலியவை செய்வதில் பாவிக்கப்படும் எல்லாப்போத்தல்களும் வடிகட்டி எடுத்த தண்ணீரால் கழுவப்பட்டு மெத்தத் துப்புரவாய் வைத்திருக்கப்படும்படி செய்யவேண்டும்.

19. லைசென்ஸ்காரன் சோடா லெமனட் முதலிய பானங்கள் விட்டிருக்கும் ஒவ்வொரு போத்தலிலும் என்ன பானம் அதில் உண்டு என்றும், செய்த இடம் இன்னதென்றும் செய்கிற சாலையைச் சொந்தமாகவுடைய ஆளின் அல்லது கூட்டத்தின் பெயர் என்னவென்றும், யந்திரசாலைக்கு சங்கத்தலைவரால் கொடுக்கப்பட்ட இலக்கம் என்னவென்றும் தெரிவிக்கக்கூடியதாய் ஒரு லேபல் ஒட்டியிருக்கும்படி செய்யவேண்டும்.

20. லைசென்ஸ்காரன் பன்னிரண்டு வயதுக்குட்பட்ட எவனையும் அல்லது கரப்பன் வியாதியுள்ள அல்லது தொற்று வியாதியுள்ள எவனையும் சோடா லெமனட் முதலியவை செய்கிற சாலையில் வேலைக்கு வைக்கப்படாது.

21. லைசென்ஸ்காரன் வாயுவிட்டடைக்கும் வேலைசெய்யும் யாவரும் முகத்துக்கும் கழுத்துக்கும் மெல்லிய கம்பிவலையும் தோல்மேசுகளும் போட்டுக்கொள்ளும்படி செய்யவேண்டும்.

22 லைசென்ஸ்காரன் இனிப்புச்சாறுகள் ஈலையான்போகக்கூடாத புறம்பான அறைக்குள் செய்யப்படும்படியும், சோடா லெமனட் முதலிய பானங்கள் செய்வதற்குப் பாவிக்கப்படும் மருந்துச்சாமான்களும் மற்றும் சாமான்களும் திறமானவைகளாயிருக்கும்படியும், அப்பானங்கள் செய்வதற்குப் பாவிக்கப்படும் பாத்திரங்களும் யந்திரங்களும் மெத்தத் துப்புரவாய் வைத்திருக்கப்படும்படியும் செய்யவேண்டும்.

23. சோடா லெமனட் முதலியவை செய்யப்படும் சாலையின் எப்பாகத்தையும் ஒருவரும் குடியிருக்கும் இடமாகப் பாவிக்கப்படாது.

[9 E (2) (*i*) ம் பிரிவு.]

பாழ்நிலங்களையும் பொதுநிலங்களையும் பத்திரப்படுத்தல்.

பாழ்நிலங்கள் அல்லது பொதுநிலங்களிலிருந்து எவராவது சங்கத்தலைவரின் உத்தரவின்றி மாட்டுச்சாணி, மணல், மண், கல்லு, அல்லது வளரும் பூண்டுகள், அல்லது மரங்கள் கொண்டுபோகவேனும் எவ்விதத்திலும் அந்த நிலங்களின் மேற்பரப்பை மாற்றவேனும் படாது.

[பிரிவு 9 E (2) (*j*) ம் பிரிவு].

எல்லைகள்போட்டுப் பத்திரப்படுத்தல்.

பட்டணத்திற்குள்உள்ள எந்த வீட்டின் தோட்டத்தின், கட்டடத்தின் அல்லது காணியின் சொந்தக்காரனும் அல்லது ஆட்சிக்காரனும் அவ்வீட்டுக்கு, தோட்டத்துக்கு, கட்டடத்துக்கு, அல்லது காணிக்கு அதைச்சுற்றி நிலமட்டத்திலிருந்து மூன்றடிக்குக்குறையாமலும் ஆறடிக்குக் கூடாமலும் உயரமுள்ள ஓர் சுவர் கட்டி அல்லது நல்ல வேலிபோட்டு வைத்திருக்க வேண்டும்.

[9 E (2) (*k*) ம் பிரிவு.]

பொதுவான குளிக்கும் இடங்கள்.

1. காலத்துக்குக்காலம் சங்கத்தின் நற்கருத்தின்படி பொதுவான குளிக்கும் இடங்கள் வேருக்கிவைக்க சங்கத்துக்குத் தத்துவமுண்டு. மேலும் அவ்விடங்களை எந்நேரத்தில் பாவிக்கவேண்டும் என்று தீர்க்கவும் தத்துவமுண்டு.

2 எவராவது சங்கத்தால் நியமிக்கப்பட்ட இடங்களில் அன்றி வேறு இடங்களில் குளிக்கப்படாது. மேலும் சங்கத்தால் நியமித்திருக்கும் இடங்களில், நியமிக்கப்பட்ட நேரத்தில்தான் குளிக்கவேண்டும்.

3. குளிப்பதற்கென்று வேருய் நியமித்திருக்கும் பொதுவான இடங்களில் எவராவது, குதிரைகள், மாடு, சீலை, பாய் அல்லது வேறு சாமான்களை கழுவ அல்லது கழுவுவிக்கப்படாது.

4. பொதுவான குளிக்கும் இடங்களில் தொற்றுவியாதியால் வருத்தப்படுகிற எவராவது குளிக்கவும் புடவை துவைக்கவும் வேறேதுஞ் சாமான்கள் கழுவவும்படாது.

[9 E (2) (*m*) ம் பிரிவு.]

நாய்கள்.

அலைந்துதிரிகிற எல்லா நாய்களையும் பிடிக்கும்படிசெய்து, வியாதியுள்ளதென்று கண்ட அல்லது வியாதியுண்டென்று சந்தேகமிருக்கும் நாயைக் கொன்றுபோடும்படி கட்டளைபண்ணி அல்லது சங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட ஒரு வீட்டில் அடைத்து வைக்கப்படும்படியும், சௌக்கியாதாரசங்கம் செலவழித்த தொகையை வாங்குவதற்காக அடைத்து வைத்திருக்கும் முதல் நாளுக்கு 40 சதமும் பிந்திய ஒவ்வொரு நாளுக்கும் 15 சதமுமாக, நாயின் சொந்தக்காரன் அது தனதென்று சொல்லி அதைக் கொண்டுபோக விரும்பினால், அவனிடமிருந்து அறவிடும்படியும் எழுத்து மூலமாக அதிகாரம் கொடுப்பது சங்கத்தலைவருக்கு நியாயமுறையாகும். அப்படியாக அடைக்கப்பட்ட நாய்களை, மூன்று நாளைக்குள் உடையவர்கள் அந்நாய்கள் தமதென்று வந்து கேட்காவிட்டால், கொன்றுபோடும்படி சங்கத்தலைவர் செய்யவேண்டும்.

[9 E (2) (c) ம் பிரிவு.]

வீடுகளும் குடில்களும்.

1. 21 நாளைக்கு முன் அறிவித்தல் சங்கத்தலைவருக்கு இதன் பின்வருமாறு கொடுத்தலலாமல் எவராவது சங்கத்துக்குச் சேர்ந்த எல்லைகளுக்குள் வசிக்கும் பொருட்டு வீடு அல்லது குடில் கட்டப்படாது.

(a) மனுஷர் குடியிருப்பதற்கான ஒவ்வொரு வீடாவது, குடிலாவது, அறையாவது சதுர அளவில் 120 அடிக்கும் உயரத்தில் 10 அடிக்கும் குறையாமலும் நிலமட்டத்திலிருந்து குறைந்த அளவில் 6 அடி உயரமுள்ள தாழ்வாரங்கள் உடையதாயு மிருத்தல்வேண்டும்.

(b) ஆட்கள் குடியிருக்கும் ஒவ்வொரு அறைக்கும் நீளத்தில் 6 அடிக்கும் அகலத்தில் 3 அடிக்கும் குறையாத ஒரு கதவாகுதல் இருத்தல் வேண்டும்; நீளத்தில் 3 அடிக்கும் அகலத்தில் 2 அடிக்கும் குறையாத ஒரு சன்னல் ஆகுதல் இருத்தல் வேண்டும்.

(c) வீட்டுத் தளம் பூமியினின்று ஒரு அடிக்கு மேல் இருக்கவேண்டும். மேலும் சங்கத்தலைவர் இடத்துக்குத்தக்கதாக இன்னும் கூடிய உயரத்துக்கு உயர்த்த வேண்டுமென்று கேட்க அதிகாரமுடையவரா யிருப்பர்.

(d) இந்த உபவிதியின் ஏற்பாடுகளுக்கு மாறாக ஒரு வீடு அல்லது குடில் கட்டப்பட்டிருந்து அதை மாற்றும்படி அல்லது இடித்துப்போடும்படி எழுத்துமூலம் அறிவித்தல் கொடுக்கப்பட்டதன்மேல் ஒரு மாசத்துக்குள் சொந்தக்காரன் அப்படிச்செய்யத் தவறினால் அல்லது அசட்டைபண்ணினால் அதைச் சொந்தக்காரனுடைய செலவில் இடிப்பித்துப்போடுவது சங்கத்தலைவருக்கு நியாயமுறையாகும்.

2. பின்வரும் மாதிரியன்றி எந்த சௌக்கியாதாரசங்க எல்லைகளுக்குள்ளும் குடில் அல்லது வீடு எதையும் கட்டுவதாவது, திருப்பிக்கட்டுவதாவது, அல்லது அவைகளோடு இன்னும் கட்டடங்களைக் கூட்டிக்கட்டுவதாவது எவருக்கும் நியாயமுறையாகாது. கட்டப்படும் அல்லது திருப்பிக்கட்டப்படும் எக்குடிலையாவது வீட்டையாவது சுற்றியும், அல்லது ஒரு குடிலோடு அல்லது வீட்டோடு சேர்த்து இன்னும் கட்டடம் ஏதும் கட்டப்பட்டால் அக்கட்டடத்தைச் சுற்றியும் பின் விவரிக்கப்படும் வெளி விடப்படவேண்டும். அந்தக் கட்டடத்தின் சுவர்களின் எப்பாகமாவது அதன் தாழ்வாரங்களில் 2 அடி 6 அங்குலத்துக்கு மேற்பட்ட பாகமாவது அவ்வெளிக்குள் வரப்படாது.

(1) ஒரு ரோட்டுக்கு அல்லது தெருவுக்கு பக்கத்தில் அந்த ரோட்டு அல்லது தெருவின் நடுவிலிருந்து 25 அடி தூரம்.

(2) பின்பக்கத்தில் ஓர் குசினி, குளிக்குமிடம் அல்லது கக்கூசு ஒழிந்த வேறு குடிசை அல்லது வீடுவரைக்கும் அவ் அவ்வெளியின் தூரம் 50 அடியாய் இருத்தல் வேண்டும். குறிக்கப்பட்ட அவ்வெளியில் அரைவாசியாகுதல், கட்டப்படும், திருப்பிக்கட்டப்படும் அல்லது கூட்டிக்கட்டப்படும் வீடு இருக்கும் காணியின் சொந்தக்காரனுக்குரிய காணியா யிருத்தல் வேண்டும்.

(3) பக்கமாக அதிசமீபத்திலுள்ள கட்டடம் வரைக்கும் அவ்வெளியின் தூரம் 15 அடியாயிருத்தல் வேண்டும். குறிக்கப்பட்ட அவ்வெளியில் அரைவாசியாகுதல் கட்டப்படும், திருப்பிக்கட்டப்படும் அல்லது கூட்டிக்கட்டப்படும் வீடு இருக்கும் காணியின் சொந்தக்காரனுக்குரிய காணியாயிருத்தல் வேண்டும்.

ஆயின் எவ்விசேஷ காரியத்தின் விஷயத்திலும் சங்கத்தலைவர் தம் நற்கருத்தின்படி இவ்விதானத்தை வலியுறுத்தாது சுவுகாட்டலாம், ஆனால் பின்வரும் காரியங்களில் அவர் திருப்திப்பட்டுக்கொண்டாலன்றி அவர் அப்படிச்செய்தல் ஆகாது.—(1) கட்டப்படவிருக்கும், திருப்பிக் கட்டப்படவிருக்கும் அல்லது கூட்டிக் கட்டப்படவிருக்கும் வீட்டின் அல்லது குடிலின் அல்லது ஒரு குடியிருக்கும் இடமாக உபயோகிக்க எண்ணியிருக்கும் அயலிலுள்ள வேறோர் வீட்டின் அல்லது குடிலின் சௌக்கியாதார நிலைக்கு அல்லது அதன் சீருக்கு அதனால் யாதும் குறைவுண்டாகாதிருத்தல் வேண்டும்.

(2) விதானத்தை அவ்வண்ணம் வலியுறுத்தாது சுவுகாட்டினதினால் எந்த ரோட்டையாவது தெருவையாவது இனிமேல் ஸ்தாபித்தல் அகலுவித்தல் அல்லது பெருப்பித்தல் ஆவது அல்லது அந்த ரோட்டை அல்லது தெருவைப் பாவிக்கும் சனங்களின் வசதியாவது இடையூறுபடாதிருத்தல் வேண்டும். மேலும், ரோட்டில் அல்லது தெருவிலிருந்து அதிக தூரத்திலுள்ள வீட்டின் பக்கத்தில் ஒரு குசினியை, குளிக்குமிடத்தை அல்லது கக்கூசை காற்று உலாவக்கூடிய வெளியாக வைக்கப்பட்ட பாகத்திற் சங்கத்தலைவர் ஏற்றுக்கொள்ளும் இடத்தில் கட்டுவதற்கு சங்கத்தலைவர் இடங் கொடுக்கலாம் மேலும் கக்கூசுகளில் உள்ள அழுக்குக் கொண்டு போவதற்காக ஒரு ஒழுங்கை இருக்குமாகில் அல்லது சங்கத்தாரால் அப்படியான ஒழுங்கையொன்று திறக்க எண்ணி இருக்கும்போது அக்கக்கூசு அவ்வொழுங்கைக்கு அல்லது திறக்க எண்ணியிருக்கும் ஒழுங்கைக்குப் பக்கமாயிருத்தல் வேண்டும்

[9 E (2) (r) ம் பிரிவு ]

காட்டுக்காய்ச்சல் வராது தடுத்தல்.

1. ஒவ்வொரு வீடு வளவிலும் குடியிருப்பவன் அல்லது சொந்தக்காரன் அவ்வளவில் அல்லது குடியிருக்கும் வீட்டுக்குச் சமீபமாயிருக்கும் பள்ளங்களை மூடி அல்லது கான் எடுத்துத் தண்ணீர் தங்காமல் செய்துகொள்ள வேண்டும். அதற்குள் தண்ணீர் தங்கக்கூடிய பாத்திரங்கள் ஏதுமிருந்தால் அவைகளை அப்புறப்படுத்த வேண்டும்

2. எந்தப் பட்டணத்திலாவது உள்ள காணிகளில் சங்கத்தலைவரால் எழுத்துமூலம் கொடுக்கப்பட்ட உத்தரவின்றி தண்ணீர் கட்டுப்படக் கூடியதாக எக்காணியிலாவது, குழிகள் தோண்டுவதாவது மண்கிண்டிஎடுப்பதாவது எவருக்கும் நியாயமுறையாகாது.

[9 E (s). (a), (b). (c) ம் பிரிவு ]

கக்கூசுகள்.

1. சங்கத்தலைவரால் எழுத்துமூலம் கொடுக்கப்பட்ட உத்தரவின்றி எந்தக்காணியிலாவது, வளவிலாவது, மலசலம் கழிக்க சொந்தக்காரன் ஆவது குடியிருப்பவன் ஆவது எவ்விதமான கக்கூசுகளும் கட்ட அல்லது கட்டுவிக்கப்படாது.

2. (a) முதலாம் உபவிதியின்படி அவ்வுத்தரவு தரும்படி யாரும் விண்ணப்பம்பண்ணு மிடத்து சங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாதிரியான கிடங்கேயன்றி வேறுகிடங்கு கட்டப்படாதென்று கட்டளைபண்ணுவது சங்கத்தலைவருக்காவது சங்கத்துக்காவது தகுதியாகும்.

(b) சங்கத்தலைவர் அல்லது சங்கம் அக்கிடங்கு கட்டப்பட வேண்டிய இடத்தை நியமித்து வேறெந்த இடத்திலும் எக்கிடங்கையும் கட்டுவதற்கு உத்தரவுகொடுக்க மறுக்கலாம்.

(c) சௌக்கியாதாரத்தின் பொருட்டு எக்கிடங்கும் கட்ட உத்தரவு கொடுக்கப்படாதென்று சங்கத்தலைவர் அல்லது சங்கம் எண்ணினால் எந்த வளவிலும் ஒரு அழுக்குக் கிடங்கை கட்டவிடாது மறுப்பது சங்கத்தலைவருக்கு அல்லது சங்கத்துக்குத் தகுதியாகும்.

3. (a) உத்தரவின்றி அல்லது சங்கத்தலைவரால் அல்லது சங்கத்தால் கொடுக்கப்பட்ட உத்தரவின் நிபந்தனைகளுக்கு எவ்விதத்திலும் மாறாக, ஓர் அழுக்குக் கிடங்கு, கட்டப்பட்டிருக்கும் ஓர் வளவின் சொந்தக்காரனை அல்லது ஆட்சிக் காரனை, சங்கத்தலைவரால் அல்லது சங்கத்தால் நியமிககப்படும் நியாயமான காலத்துக்குள் அவ்வழுசுகுக் கிடங்கை இடித்து மூடிப்போடும்படி எழுத்துமூலம் கட்டளை பண்ணுவது சங்கத்துக்குத் தகுதியாகும்.

(b) (a) ம் உட்பிரிவின்படி கொடுக்கப்பட்ட ஓர் கட்டளையின் பிரகாரம் செய்யத்தவறும் எவரும ஓர் அடாத்துச் செய்த குற்றமுடையவர் ஆவர்.

4. (a) சங்கம் நியமிக்கும் மாதிரியாயும், அளவுள்ளதாயும், நியமிக்கும் இடத்திலும், அதனோடு தொடுக்கப்பட்ட கான்கள் உள்ளதாயும், ஓர் மலசலக் கூடத்தை அல்லது கக்கூசை, கட்டளையிற் சொல்லப்பட்ட காலத்துக்குள் கட்டும்படி சொந்தக்காரனை அல்லது ஆட்சிக்காரனை சங்கம் எழுத்து மூலம் கட்டளை பண்ணலாம்.

(b) (a) ம் உட்பிரிவின்படி கொடுக்கப்பட்ட ஓர் கட்டளையின் பிரகாரம் செய்யத்தவறும் எவரும் ஓர் அடாததுச் செய்த குற்றமுடையவர் ஆவர்.

5 (a) ஒரு மலசலக்கூடம் அழுக்குக் கிடங்கு கக்கூசு அல்லது ககசூசு அசங்கியம் வருவிக்சக் கூடுமென்று சங்கம் எண்ணுமாகில் அந்த மலசலக் கூடமேனும் அழுக்குக் கிடங்கேனும் ககசூசேனும் இருக்கும் வளவின் சொந்தக்காரனை அல்லது ஆட்சிக்காரனை, சங்கம் நியமிக்கும் காலத்துககுள்ளும் நியமிக்கும் மாதிரியாயும் அதைப்பழுது பார்க்கும்படி மாற்றும்படி, அல்லது திருப்பிக் கட்டும்படி அல்லது நியமிக்கப்படும் காலத்துக்குள் அதை இடித்து நிரப்பிவிடும்படி சங்கம் எழுத்துமூலம் கட்டளை பண்ணலாம்.

(b) (a) ம் உட்பிரிவின்படி கொடுக்கப்பட்ட ஓா கட்டளையின் பிரகாரம் செய்யத்தவறும் எவரும் ஓர் அடாத்துச் செய்த குற்றமுடையவர் ஆவா.

6. சொற்பொருள் விளக்கம். —— பின்வரும் உபவிதிகளின் நோக்கத்திற்காக. ——

"கிடங்குக் கக்கூசு" என்பது மண்பாவித்து ஒழுங்காக அழுக்குக் கொண்டுபோகப்படும் கக்கூசுகள் ஒழிந்த எல்லா விதமான மலசலக் கூடங்களையும் கக்கூசுகளையும் கருதி உளப்படுத்தும்.

"கு க்கப்பட்ட இடப்பகுதி," என்பது சங்கம் காலத்துக்காலம் குறிக்கும் சங்கௌல்லைகளுக்குள் அடங்கிய இடப் பகுதியை அல்லது இடப்பகுதிகளைக் கருதி உளப்படுத்தும், அவ்விடப் பகுதி அவ்வெல்லைகளுக்குள் அடங்கிய முழு இடத்தையேனும் அதன் ஓர் பாகத்தையேனும் பாகங்களையேனும் அடக்கியிருக்கும்.

7. குறிக்கப்பட்ட எந்த இடப்பகுதிக்குள்ளும் எவ்விதமான அழுக்குக் கிடங்கையும் பாவிக்கப்படாதென்று சங்கம் நிர்ணயம்செய்து தடுப்பதுமன்றி எல்லாக் கக்கூசுகளும் மலசலக் கூடங்களும் வாளிவைத்துப் பாவிக்கும் கக்கூசுகளாகக் கட்டப்படும்படி கட்டளை பண்ணலாம்.

8. அப்படியான ஓர் நிர்ணயம் செய்யப்பட்டும், அவ்வழுக்குக் கிடங்கு அல்லது அழுககுக் கிடங்குகள் இருக்கும் வீட்டின் கட்டத்தின் அல்லது காணியின் சொந்தக்காரனுக்கு அல்லது ஆட்சிக்காரனுக்கு அவ்வழுக்குக் கிடங்கை அல்லது அழுக்குக் கிடங்குகளை மூடிப்போடும்படியும் அவைகளுக்குப் பதிலாக வாளி வைத்துப் பாவிக்கும் கைக்கூசை அல்லது கக்கூசுகளை வைத்துக்கொள்ளும்படியும் எழுத்துமூலம் அறிவித்தல் கொடுக்கப்பட்டும் இருந்தால், அவ்வறித்தல் ஒப்புவிக கப்பட்ட தேதியிலிருந்து சங்கம் தீர்மானிகக்கும் காலத்துககுள் அவ்வறிவித்தலிற் கேட்டுக்கொள்ளப்பட்ட பிரகாரம் செய்துமுடிப்பது அவ்வாளின் அல்லது ஆட்களின் கடமையாகும் அறிவித்தலிற் கேட்டுக்கொள்ளப்பட்ட பிரகாரம் செய்து முடிப்பது அவ்வாளின் அல்லது ஆட்களின் கடமையாகும் அறிவித்தலிற் குறிக்கப்பட்ட காலத்துக்குள் அல்லது, ஓர் காலம் குறிக்கபட்டி ராவிட்டால், ஓர் நியாயமான காலத்துக்குள் அவ்வறிவித்தலின்படி செய்யத்தவறும் எந்தச் சொந்தக்காரனாவது ஆட்சிக்காரனாவது ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவன் ஆவன். ஆயின் இந்த உபவிதியின்படி ஓர் மலசலக்கூடம் அல்லது சக்கூசுகட்டுவதற்கு, சங்கத்தலைவர் மாதிரி, இடம், போக்கைக் குறித்து வேண்டிய குறிப்புகள்சொல்லிக் கொடுப்பதற்காக, முதலாம் உபவிதியின்படி அவருடைய உத்தரவு பெற்றுக்கொள்ள வேண்டியதாயிருக்கும்.

9. ஓர் மலசலக் கூடம் அல்லது கக்கூசு கட்டப்பட்டிருக்கும் வளவின் சொந்தகாரனாவது ஆட்சிக்காரனாவது அம்மலசலக்கூடத்தை அல்லது கக்கூசை ஒழுங்காகப் பழுதுபார்த்தும், சுத்தமாகவும் சுகத்துக்கேற்ற நிலையிலும் வைத்துக்கொள்ளவும் அதனால் அசங்கியம் உண்டாகாதபடி பார்த்துக்கொள்ளவும் கடமைப்பட்டவன் ஆவன். அப்படிச் செய்யத்தவறும் எந்தச் சொந்தக்காரனாவது ஆட்சிக்காரனாவது ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவன் ஆவன்.

10. மலம் ஒழுங்காக எடுத்துக்கொண்டு போகப்படும்படி செய்வதற்காக, குறிக்கப்பட்ட எந்த இடப்பகுதியிலுமுள்ள வீடுகளின், கட்டடங்களின் அல்லது காணிகளின் சொந்தக்காரரை அல்லது ஆட்சிக்காரரை தங்கள் வளவுகளின் பின்பக்கத்தில் அல்லது அவ்வளவுகளுக் கூடாக, கக்கூசுகளிலிருந்து அழுக்குக் கொண்டுபோவதற்காக ஓர் ஒழுங்கை திறந்து அதைத் தங்கள் செலவில் வைத்துவரும்படி நிர்ணயம்செய்து கேட்பது சங்கத்துக்கு நியாயமுறையாகும்.

11. குறிக்கப்பட்ட எந்த இடப்பகுதிக்குள்ளும் எல்லாக் கக்கூசுகளிலிருந்தும் அழுக்கு சங்கத்தாரால் அகற்றுவிக்கப்படலாம். சங்கத்தலைவரால் எழுத்துமூலம் கொடுக்கப்பட்ட உத்தரவின்றி தானாயாவது, காரியகாரனைக் கொண்டாவது, வேலைக்காரனைக்கொண்டாவது, அவ்வேலையைச் செய்வதேனும் அவ்வேலையைச் செய்யும்படி ஒருவனை வைப்பதேனும் எவருக்கும் நியாயமுறையாகாது. அவ்விடப்பகுதிக்குள் அப்படியான வேலைகள் யாவும் சங்கத்தாரால் தகுந்த பிரகாரம் செய்துமுடிக்கப்படக்கூடுமென்று சங்கத்தலைவர் எண்ணுவாராகில் தமது நற்கருத்தின்படி அவ்வுத்தரவைக் கொடுக்க மறுப்பதற்கு அவருக்கு அதிகாரமுண்டு.

12. குறிக்கப்பட்ட எந்த இடப்பகுதிக்குள்ளும் மலசலக் கூடங்கள் அல்லது கக்கூசுகள் கட்டப்பட்டுள்ள வளவுகளின் எல்லாச் சொந்தக்காரரும் அல்லது ஆட்சிக்காரரும் கக்கூசுகளிலிருந்து மலம் கொண்டுபோவதற்காக சங்கம் நியமிக்கும் சலாரை மாசம் மாசம் சங்கத்துக்குக் கொடுக்கவேண்டும் அச்சலார்கள் யாவும் அவ்வேலைசெய்யப்பட்டு வரும் மாசத்தின் 10 ந் தேதிக்கு முன் கொடுக்கப்பட வேண்டும்.

13. பகலிலே வேலைசெய்வதற்கு கூலியாட்கள் வேண்டிய எவரும் சங்கத்திடம் எழுத்துமூலம் கேட்டுக்கொள்ளாமல் அக்கூலியாட்கள் சங்கம் தீர்மானிக்கும் ஒழுங்குகளோடு கொடுக்கப்படுவார்கள். அக்கூலியாட்களின் வேலைக்காகக் கொடுக்கப்படும் சலார்கள் அவ்வேலை செய்யப்பட்டு வரும் மாசத்தின் 10 ந் தேதிக்கு முன் கொடுக்கப்படவேண்டும்.

14. ஓர் குறிக்கப்பட்ட பகுதிக்குப் புறம்பேயிருக்கும் எவரும் தனது மலசலக்கூடத்தில் அல்லது கக்கூசிலிருந்து அழுக்கு சங்கத்தால் அகற்றுவிக்கப்படவேண்டுமென்று அல்லது பகலில் வேலைசெய்வதற்கு ஒரு கூலியாள் தனக்குக் கொடுக்கப்படவேண்டுமென்று விரும்பும் எவரும் அதைக்குறித்து சங்கத்தலைவருக்கு எழுத்துமூலம் அறிவிக்கவேண்டும். அதன்மேல் சங்கம் அழுக்கு அகற்றுவிக்கும் அவ்வேலையைப் பொறுப்பேற்று நடத்தலாம். அவ்வாளிடமிருந்து வரவேண்டிய சலார் அவ்வேலைசெய்யப்பட்டு வரும் மாசத்தின் 10 ந் தேதிக்கு முன் கொடுக்கப்பட வேண்டும்.

15. ஓர் புதிய அழுக்கு நீர்க்கிடங்கு கட்டப்படவேண்டும் அல்லது இப்போ உள்ள அழுக்குநீர்க் கிடங்கு மாற்றிக் கட்டப்படவேண்டும், பழுதுபார்க்கப்படவேண்டும், திருப்பிக் கட்டப்படவேண்டும் அல்லது தூர்க்கப்படவேண்டும் என்று சங்கம் எண்ணினால் எந்தக் காணியினேனும், வளவினேனும் சொந்தக்காரனையாவது ஆட்சிக்காரனையாவது ஓர் புது அழுக்கு நீர்க்கிடங்கு கட்டும்படி அல்லது இப்போவுள்ள ஓர் அழுக்கு நீர்க்கிடங்கை மாற்றிக் கட்டும்படி, பழுதுபார்க்கும்படி, திருப்பிக் கட்டும்படி அல்லது தூர்த்துப்போடும்படி சங்கத்தலைவரால் கையொப்பமிடப்பட்ட அறிவித்தல் மூலம் கேட்பதுமன்றி, அந்த அழுக்கு நீர்க்கிடங்கு இருக்க வேண்டிய இடம், மட்டம், அளவைக்குறித்தும், அதைக் கட்டுவதில் உபயோகிக்கப்படவேண்டிய பொருட்கள் என்னவென்றும், அவ்வேலை எவ்விதமாய் நடத்தப்பட வேண்டுமென்றும் அவ்வேலைகள் சம்பந்தமாக வேறு விவரங்களைக் குறித்தும் கட்டளைபண்ணலாம். அவ்வித அறிவித்தல் கிடைத்தபின் சங்கம் தீர்மானிக்கும் காலத்துக்குள் கேட்டுக்கொள்ளப்பட்டபடி செய்யத் தவறும் சொந்தக்காரனேனும் ஆட்சிக்காரனேனும் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவன் ஆவன்.

16. அழுக்குநீர் ஓடிக்கட்டுப்பட்டு நிற்கும் ஓர் கிடங்குஉள்ள எந்தக்காணியின் அல்லது வளவினதும் சொந்தக்காரனுக்கு அல்லது ஆட்சிக்காரனுக்கு அத்தண்ணீரை அத்தேதி தொடக்கம், அங்கேயிருந்து ஒவ்வொரு நாளும் கொண்டுபோகும் பொறுப்பை சங்கம் ஏற்றுக்கொள்ளும் என்று அறிவிப்பது சங்கத்தலைவருக்கு நியாயமுறையாகும். அதின்பின் அவ்வழுக்குத் தண்ணீர் கொண்டுபோவதற்கு சங்கம் தீர்மானிக்கும் நியாயமான சலாரையிறுப்பதற்கு அச்சொந்தக்காரன் அல்லது ஆட்சிக்காரன் கடமைப்பட்டவன் ஆவன். அச்சலார் 12 ம் உபவிதியின்படி கக்கூசுகளிலிருந்து அழுக்கு அகற்றுவதற்காகக் கொடுக்கப்படும் அச்சலாரைப்போலக் கொடுக்கப்பட்டு அறவிடப்பட வேண்டும்.

17. அழுக்கு நீர் ஓடிக்கட்டுப்பட்டு நிற்கும் ஓர் கிடங்குஉள்ள எந்தக்காணியின் அல்லது வளவினதும் சொந்தக்காரனுக்கு அல்லது ஆட்சிக்காரனுக்கு 16 ம் உபவிதியின் பிரகாரம் அறிவித்தல் கொடுக்கப்படாவிட்டால், அத்தண்ணீரினால் அசங்கியம் யாதும் உண்டாகாதபடி அதை ஒவ்வொரு நாளும் அகற்றுவிப்பதற்கு அச்சொந்தக்காரன் அல்லது ஆட்சிக்காரன் உத்தரவாதியாவான் மேலே கேட்டுக்கொள்ளப்பட்டபடி அத்தண்ணீரை அகற்றுவிக்கத்தவறும் எச்சொந்தக்காரனாவது ஆட்சிக்காரனாவது ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவன் ஆவன்.

### 9E (2) (*t*) ம் பிரிவு.—பொதுத் தப்புரவு.

1. சௌக்கியாதாரசங்க எல்லைக்குட்பட்ட எல்லாக் காணிகளின் சொந்தக்காரரும் ஆட்சிக்காரரும் அங்கே குடியிருப்பவர்களும் அக்காணிகளைச் சுத்தமாகவும், கஞ்சல்குப்பைகளும் அருவருப்புள்ள அல்லது தூர்க்கந்தமான பயிர் பூண்டுகளும், சுகத்துக்குத்தீங்கான அல்லது நஷ்டம் வருவிக்கக்கூடிய செடிகள் அல்லது பூண்டுகளும் இல்லாமலும் வைத்திருப்பதுமன்றி, தண்ணீர் நிற்பதால் நுளம்புகள் உண்டாகக்கூடிய எல்லாப் பாத்திரங்களையும் அகற்றிவிடவும் வேண்டும்.

2. தனது வளவிலிருந்து சாம்பல், குப்பை கூளம் மற்றும் கஞ்சல் முதலியவற்றை சங்கத்தின் தெருக்கூட்டிகளே எடுத்துக்கொண்டு போகவேண்டும் என்று விரும்பும் எவரும் சங்கம் குறிக்கும் மாதிரியான மூடிய நல்லதொட்டிகளில், பெட்டிகளில் அல்லது அப்படியான வேறு பாத்திரங்களில், தன் வளவுக்குவெளியே ரோட்டோரமாக முறைமையாகப் பிரசித்தப்படுத்தப்பட்ட அறிவித்தலினால், காலத்துக்குக் காலம் சங்கம் நியமிக்கும் நேரங்களில் ஒவ்வொரு நாளும் அவற்றைப் போட்டுவைப்பதுமன்றி, தெருக்கூட்டி அத்தொட்டிகள், பெட்டிகள் மற்றும் பாத்திரங்களிலுள்ள அழுக்கைக் கொட்டிக்கொண்டுபோனபின் அரைமணித்தியாளத்துக்குள் அத்தொட்டிகள், பெட்டிகள் மற்றும் பாத்திரங்களை ரோட்டிலிருந்து எடுத்துப்போடவும் வேண்டும். மேலே சொல்லிய பிரகாரமேயன்றி, சாம்பல், குப்பை, கூளம், மற்றும் கஞ்சல் எதையும் ஒருவரும் எத்தெருவிலேனும், அழுக்குப்போடுவதற்காகப் பொதுவிடங்களில் வைக்கப்பட்டிருக்கும் குப்பைத் தகரங்களிலேயன்றி வேறு எப்பொது விடத்திலேனும் வைக்கப்படாது.

3 சௌக்கியாதாரசங்க எல்லைக்குட்பட்ட எவ்வீட்டின் கட்டடத்தின் அடைப்பின் அல்லது வளவின் சொந்தக்காரனுக்கும் அல்லது ஆட்சிக்காரனுக்கும, எழுத்துமூலம அறிவித்தல் கொடுத்து, அவ்வீட்டில், கட்டடத்தில், அடைப்பில் அல்லது வளவில்உள்ள அல்லது அதற்குச்சேர்ந்த மலசலக்கூடம், குழி, அல்லது கக்கூசு எதிலுமிருக்கும் அழுக்கை, மேற்சொல்லிய அறிவித்தலில் காட்டியிருக்கும் இடத்துக்கு அல்லது இடங்களுக்கும் அதிற்குறித்த காலத்துக்குள்ளும் கொண்டுபோகும்படி அல்லது கொண்டுபோகப்படச்செய்யும்படி அச்சொந்தக்காரனை அல்லது ஆட்சிக்காரனை எவ்வேளையிலும் கேட்பது சங்கத்தலைவருக்கு நியாயமுறையாகும், அச்சொந்தக்காரன் அல்லது ஆட்சிக்காரன் அவ்வறிவித்தல் தனக்கு ஒப்புவிக்கப்பட்டு ஏழு நாளுக்குள் அவ்வறிவித்தலிற் கேட்டபடி செய்யத்தவறினால், சங்கத்தலைவர் செய்யப்படவேண்டிய வேலையைச் செய்வித்துக்கொள்ளலாம். அந்த நோக்கத்துக்காக அவ்வீடு வெளிவீடு, கட்டடம், அடைப்பு, அல்லது வளவு எதற்குள்ளும் தேவையான வேலையாட்கள், கருவிகள் சாமான்களுடன் செல்ல அவருக்கு அதிகாரம் உண்டு, அப்படிச் செய்ததால் வந்த செலவு சொந்தக்காரனிடமிருந்து சங்கத்துக்கு வரவேண்டிய ஓர் கடனாக அறவிடக்கூடியதாயிருத்தல் வேண்டும்.

4. மாடு, குதிரை, செம்மறியாடு, வெள்ளாடு, அல்லது பன்றி எதுவும் ஓர் வீட்டில் அல்லது வளவிற் சாகுமாகில் அவ்வீட்டின் அல்லது வளவின் ஆட்சிக்காரன், அம்மிருகம் செத்து நாலு மணித்தியாலத்துக்குள், அல்லது மிருகம் இரவிலே செத்ததானால், விடிந்து நாலு மணித்தியாலத்துக்குள் ஒன்றில் பிணத்தைத் தன் செலவில் புதைப்பித்துவிடவேண்டும், அல்லது சங்கத்தின் மேல்விசாரணைக் காரருக்கு அல்லது பரிசோதகருக்கு அதைப்பற்றி அறிவிக்கவேண்டும். பிந்திச் சொல்லிய பிரகாரம் செய்தால் சங்கத்தலைவர் தீர்மானிக்கும் வீதப்படி பிணத்தைக் கொண்டுபோவதில் அல்லது புதைப்பதில் வந்த செலவை அவன் சங்கத்துக்குக் கொடுக்கவேண்டும்.

5. காலை 7 மணிக்கும் சாயங்காலம் 5 மணிக்கும் இடையில் சங்க எல்லைக்குட்பட்ட எந்தக் கட்டடத்துக்குள்ளும் வளவுக்குள்ளும் சென்று அக்கட்டடம் அல்லது வளவு சௌக்கியாதார நிலையில் வைத்திருக்கப்படுகிறதோவென்று அறிந்துகொள்வதற்காக வேண்டிய சகல காரியங்களையும் செய்வது எந்தப் பரிசோதகருக்கேனும் சங்கத்தலைவரால் எழுத்து மூலம் அதிகாரம் கொடுக்கப்பட்ட எவ்வுத்தியோகஸ்தருக்கேனும் நியாயமுறையாகும்.

6. ஊத்தை, பசளை, அழுக்கு, குப்பை, அல்லது எவ்விதமான கஞ்சலையும், அல்லது பழைய போத்தில்கள், தகரங்கள், சட்டிகள், சிரட்டைகள், அல்லது மழைத்தண்ணீர் தங்கி நிற்கக்கூடிய எவ்விதமான வேறு பாத்திரங்களையும் தெருவு, ரேட்டு, அல்லது பொது இடம் எதிலும், அல்லது அத்தெருவின், ரேட்டின் அல்லது பொது இடத்தின் கான்களில், அல்லது குடியிருக்கும் வீட்டுக்குக் கிட்டவிருக்கும் நிலத்தில் அல்லது வளவில் ஒருவரும் போடப்படாது. அந்த ஊத்தை, பசளை, அழுக்கு, குப்பை, அல்லது எவ்விதமான கஞ்சலும், பழைய போத்தில்களும் தகரங்களும், சட்டிகளும், சிரட்டைகளும் மழைத்தண்ணீர் நிற்கக்கூடிய எவ்விதமான பாத்திரங்களும் எரித்துப்போடப்பட வேண்டும் அல்லது சௌக்கியாதார சங்கத்துக்குச்சேர்ந்த குப்பை கொட்டும் இடங்களுக்குக் கொண்டுபோகப்பட வேண்டும்

7. களைப்புல்லுகள் அல்லது துர்க்கந்தமுள்ள பூண்டுகள் முளைத்தெழும்பியிருப்பதால் அல்லது பசளை ஊத்தை, அல்லது கஞ்சல் குவிந்திருப்பதால், அல்லது ஓடாமல் நிற்கும் தண்ணீரால், அல்லது மழைத்தண்ணீர் சேர்ந்து நிறகக்கூடிய பாத்திரங்கள் கிட்டவிருப்பதால், குடியிருக்கும் வீடுகளுக்குக் கிட்டவிருக்கும் நிலம் அல்லது வளவு சுகவீனத்தை வருவிக்கக்கூடிய நிலையில் இருக்கிறதாக சங்கத்தலைவருக்குத் தோற்றினால், அந்த நிலத்தைச் சுகத்துக்கேற்ற நிலையில் வைப்பதற்குத் தேவையான வேலையை, அறிவித்தற் கடுதாசியில் காட்டிய ஓர் நியாயமான காலத்துக்குள் செய்யும்படி எழுத்துமூலமாக அறிவித்து அந்த நிலத்தின் சொந்தக்காரனை அல்லது ஆட்சிக்காரனை சங்கத்தலைவர் கட்டளை பண்ணலாம் குறிக்கப்பட்ட காலத்துக்குள் மேற்சொல்லிய வேலையை சொந்தக்காரன் அல்லது ஆட்சிக்காரன் செய்யத் தவறினால் அல்லது மேற்சொல்லிய பிரகாரம் சுகவீனத்தை வருவிக்கக்கூடிய நிலையில் அந்த நிலத்தைப் பிறகும் வரவிட்டால் சங்கத்தலைவர் தேவையான வேலையைச் செய்விக்கலாம், அப்படிச் செய்விக்கிறதற்காகத் தேவையான வேலையாட்களோடும் ஆயுதங்களோடும் சாமான்களோடும் அக்காணிக்குள் போவதற்கு சங்கத்தலைவருக்கு அதிகாரம்உண்டு. அப்படிச் செய்வித்ததினால் வந்த செலவு சொந்தக்காரன் சங்கத்துக்குக் கொடுக்கவேண்டிய கடனாக அறவிடப்படக்கூடியதாகும் ஆயின் வழக்குத் தொடருவது புத்தியென்று சங்கத்தலைவர் எண்ணினால் இந்த விதானங்களின்படி அவர் எந்த நேரத்திலும் வழக்குகள் தொடருவதை இந்த விதானத்தில் அடங்கிய ஒன்றும் தடைபண்ணமாட்டாது.

8. மனுஷர் குடியிருப்பதற்குப் பாவிக்கப்படும் ஒவ்வொரு வீட்டையும் குடிசையையும் பழுதுகள் இல்லாமல் வைத்திருப்பது அவ்வீட்டின் அல்லது குடிசையின் சொந்தக்காரனுடைய கடமையாகும். ஆனால் அக்கடமையை வாடகைகாரன் அல்லது ஆட்சிக்காரன் ஏற்றுக்கொண்டால் அக்கடமை, காரியத்துக்கேற்றபடி அவ்வாடகைக் காரனுக்கு அல்லது ஆட்சிக்காரனுக்கு உரியதாகும்.

9. சுகவீனத்துக்கு ஏதுவான நிலையிலும் வீட்டிலிருப்பவர்களின் அல்லது அயலாரின் சுகத்துக்குக் கேடானதாயும் இருக்கக்கூடியதாக அப்படியான வீடு அல்லது குடிசை எதுவும் பழுதடைந்துபோனதென்று சங்கத்தலைவருக்குத் தோற்றினால் அவ்வீட்டை அல்லது குடிசையை சுகத்துக்கேற்ற நிலையில் கொண்டுவருகிறதற்குச் செய்யவேண்டிய வேலையை அறிவித்தற் பத்திரத்தில் காட்டியிருக்கும் நியாயமான ஓர் காலத்துக்குள் செய்யும்படி அவ்வீட்டைப் பழுதுகளில்லாமல் வைத்திருக்கவேண்டிய கடமையுள்ள சொந்தக்காரனுக்கு, வாடகைக்காரனுக்கு அல்லது ஆட்சிக்காரனுக்கு சங்கத்தலைவர் எழுத்துமூலமாக ஓர் கட்டளை கொடுப்பிக்கலாம் குறிக்கப்பட்ட காலத்துக்குள் செய்யவேண்டிய வேலையை அச்சொந்தக்காரன், வாடகைக்காரன் அல்லது ஆட்சிக்காரன் செய்யாமல் விட்டால், அவ்வேலையைச் சங்கத்தலைவர் செய்விக்கலாம். அப்படிச் செய்வித்ததினால் வந்த செலவு அச்சொந்தக்காரனிடம், வாடகைகாரனிடம் அல்லது ஆட்சிக்காரனிடமிருந்து சங்கத்துக்கு வரவேண்டிய கடனாக அறவிடக் கூடியதாகும். ஆயின் இந்த விதானத்தின்படி சங்கத்தலைவர் செய்த செய்கையொன்றும் 8 ம் விதானத்தை மீறி நடந்ததற்கு சொந்தக்காரனுக்கு, வாடகைக்காரனுக்கு அல்லது ஆட்சிக்காரனுக்குத் தண்டனை விதிப்பதைத் தடுக்கமாட்டாது.

10. எப்பட்டண எல்லைகளுக்குள்ளும், ஓர் பொதுக் கக்கூசில் அல்லது அதற்கென்று புறம்பாக வைக்கப்பட்ட ஓர் கட்டடத்தில் அல்லது அடைப்பிலன்றி, வேறெந்தப் பெருவீதியிலேனும், தெருவிலேனும் ரேட்டிலேனும், பாதையிலேனும், பொது இடத்திலேனும் எவரும் மலபாதைக்குப் போவது சட்டவிரோதமானதாயிருக்கும்.

மேற்சொல்லிய உபவிதிகளின்படி வருடாந்த லைசென்ஸ்களுக்காக அறவிடப்படவேண்டிய சலார் அட்டவணை:—

| | வருடாந்தச் சலார். ரூ. | ச. | | வருடாந்தச் சலார். ரூ. | ச. |
|---|---|---|---|---|---|
| அப்பச்சாலை .. .. | 5 | 0 | தும்பு எடுத்தலும் சேர்த்து வைத்தலும் .. | 25 | 0 |
| சாப்பாட்டுக்கடை .. .. | 3 | 0 | 5 அந்தருக்குமேல் கருவாடு சேர்த்து வைத்தல் .. .. .. | 5 | 0 |
| தேத்தண்ணீர் கோப்பிக்கடை .. | 2 | 0 | தோல்கள், எலும்புகள், செயற்கைப் பசளை அல்லது செயற்கைப்பசளை செய்வதற்கான பொருட்கள் ஒரு சாக்குக்கு அதிகமாகச் சேர்த்து வைத்தல் .. .. | 10 | 0 |
| மாட்டுக்காலை .. .. | 5 | 0 | செங்கல் அல்லது ஓடுகள் செய்தல் .. | 7 | 50 |
| பசளைசெய்யுமிடம் .. .. | 100 | 0 | சுண்ணாம்புக காளவாய் .. .. | 5 | 0 |
| இரத்தம் அல்லது களிவுமாமிசம் அவித்தல் அல்லது உலர்த்தல் .. .. | 100 | 0 | மின்னரம் சேர்த்து வைக்குமிடம் அல்லது சுத்தப்படுத்தும் முற்றம் .. .. | 25 | 0 |
| தோல் பதனிடும் இடம் .. .. | 100 | 0 | | | |
| கொழுப்பு உருக்குதல் அல்லது வடித்தல் .. | 50 | 0 | | | |
| சவுக்காரம் செய்தல் .. .. | 50 | 0 | | | |
| இயந்திர உதவியால் தேங்காய் நெய் வடித்தல் | 100 | 0 | | | |

குறிப்பு.—அப்பச்சாலைகள், சாப்பாட்டுக்கடைகள், தேத்தண்ணீர்க் கோப்பிக் கடைகளுக்காகக் கொடுக்கவேண்டிய சலார்கள் அரைவருடத்திற் கொருமுறை முற்பணமாகக் கொடுக்கப்படலாம்.

வியாக்கியானப் பிரிவு.—இந்த ஒழுக்கவிதிகளில் "பட்டணம்" என்னும் பதம் "1892 ம் ஆண்டின் 18 ம் இலக்க, சிறுபட்டணச் சௌக்கியாதாரச் சட்டத்தின்படி பிரசித்தப்படுத்தப்பட்ட புத்தளம் டிஸ்திறிக்கிலுள்ள ஓர்பட்டணம் அல்லது கிராமம் எனப் பொருள்படும்.

H. ROSS COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.